# வைகறை வெளிச்சம்

விலை ரூ.40/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume-17 Issue-5 மே-2024 ஷவ்வால்-துல்காயிதா 1445




## மே-4
## மாவீரன் திப்பு சுல்தான் ஷஹீத் நாள்

## வேலை தேடி
உக்ரேன், இஸ்ரேல்
## சாவு முகத்திற்கு செல்லும் இளைஞர்கள்

10, +2க்கு பிறகு என்ன படிக்கலாம்? 1

بسم الله الرحمن الرحيم

மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழந்து) தெரிந்தவன்.

(அல்குர்ஆன் : 49 : 13)


மே-4, மாவீரன் திப்பு சுல்தான் ஷஹீத் நாள் - 4

திப்புவின் நாணயங்கள் - 6

திப்புவும்-ஆங்கிலேயச் சிறைக் கைதிகளும் - 8

வேலை தேடி உக்ரேன், இஸ்ரேல் சாவு முகத்திற்கு செல்லும் இளைஞர்கள் - 12

சோழர்-பாண்டியர் பேரரசுகளில் இசுலாமிய அதிகாரிகள் - 16

கூரியூர் ஜின்னா ஷஹீத் - இறுதி நாட்கள்.... - 19

10, +2க்கு பிறகு என்ன படிக்கலாம்? - 24

ஃபாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு - 27

இந்தியாவில் முஸ்லிம்கள் - 34

பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் - 36

சிலுவைப் போர் 2.0 - 41

வழக்கினைப் போட்டவர் வழக்கினை திரும்பப் பெற்றார் - 46

மகளிர் மன்றம் - 48

தலையங்கம் - 52

குழந்தை வளர்ப்பு - 54

பசுவதைத் தடைச் சட்டம் - 57



மே-2024 ஷவ்வால்-துல்காயிதா 1445

# வைகறை வெளிச்சம்

ஆசிரியர்
மு.குலாம் முஹம்மது,M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,

தனி இதழ்: ரூ.40 | ஆண்டுச் சந்தா - உள் நாடு: ரூ.480 / வெளி நாடு: ரூ.5000

VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room# 07, Mannady, Chennai - 600001.
+91 81481 29887 | Email: darultrust@yahoo.com | Web: www.darultrust.in

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் DARUL ISLAM FOUNDATION TRUST என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.



All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only

vaigarai velicham official



# மே-4
# மாவீரன் திப்பு சுல்தான் ஷஹீத் நாள்

**சமூகத் தீமைகளுக்கெதிராக திப்பு சுல்தான்**

**இந்திய** விடுதலைப் போரில் திப்பு சுல்தான் ஆற்றிய வீர தீரங்கள், திக்கெங்கும் பரவிவை! அடர்ந்து வந்த ஆங்கிலப் படைகளை வெற்றி கொண்டார். இறுதியில் இந்த மண்ணுக்குத் துரோகம் செய்தே பழகிப்போனவர்கள் கீழறுப்பு வேலைகளைச் செய்ததால் ஷஹீதானார்.

தன்னைக் காப்பாற்றிக்கொள்ள பல வழிகள் இருந்தும் போர்க்களம் புகுந்தார் மைசூரின் வேங்கை.

அவருடைய யுத்தத் தந்திரங்கள், முன்னாள் குடியரசு தலைவர் APJ அபூல்கலாம் ஆசாத் வழி உலகுக்குச் சென்று சேர்ந்தது. இந்தியாவை அன்றே வல்லரசாக ஆக்கிக் காட்டியவர்.

இஸ்லாத்தின் விழுமியங்களை வாழ்க்கையில் வழுவாமல் கடைபிடித்த மாவீரன் திப்புசுல்தான். இந்தியாவில் புரையோடிப் போயிருந்த எல்லாத் தகாத செயல்களையும் தடுத்தார். போர்க்கால பிரகடனங்களைச் செய்தார். பெண்கள் மேலாடை அணியும் உரிமையை அமுக்கப் பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் பெற்றுத் தந்தார். இந்த ஒரே காரணத்திற்காக பல ஆயிரம் பெண்கள் இஸ்லாத்தை ஏற்றார்கள்.

மேலாடையை அணியவிடாமல் தடுத்த வர்கள், தங்கள் வெறுப்பை! அன்று காட்டிட இயலவில்லை. ஏனெனில் தடுப்பவர்களோடு போர் செய்வேன் என்பது திப்புவின் அறிவிப்பு.

மாறாக, பிற்றை நாட்களில் திப்புசுல்தான் மீது தீவிரமாக பொய்யைப் புனைந்துரைத்தார்கள்.

மேலும் விபரங்களுக்குப் படியுங்கள்

நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்? எழுதியவர் - மூத்த வழக்கறிஞர் லஜபதிராய்.

திப்புவின் மீது சுமத்திய பழிகளுள் ஒன்று. கட்டாயமாக மதமாற்றினார் என்பது.

இந்தியாவில் இஸ்லாம் பரவியது எப்படி ? என்பதை ஆய்வு செய்த அத்தனை பேரும், இந்தியாவில் மத மாற்றங்கள், பெரிய அளவில் நடந்தது. இந்து மதத்தின் உரிமை மறுப்புகளும் தொடர்ந்து ஒரு கூட்டம் மக்கள்மீது அநீதிகளைக் கட்டவீழ்த்து விட்டதும்தான் என்கின்றார்கள்.

உலகெங்கும் இஸ்லாம் பரவிய பாங்கை ஆய்வாகத் தந்த பலர் திப்புவைப்பற்றி இப்படிக் கூறுகின்றார்கள் :

> **திப்பு சுல்தான் இஸ்லாத்தைப் பிரச் சாரம் செய்வதில் அத்தனை அமைதி யான முறைகளையும் கையாண்டார். அவர் சிலபல ஆட்சியாளர்களைப்போல், தன் கையிலிருந்த அதிகாரத்தடியைப் பயன்படுத்திடவில்லை.**

அதேநேரத்தில் தீமைகளைக் கண்ட நேரத்தில் திப்புசுல்தான் இப்படி நடந்து கொண்டார் :

மலபார் பகுதிகளில் ஒரு பெண் பத்து


vaigarai velicham official

ஆண்களோடு உறவு வைத்துக்கொண்டிருந்த பழக்கத்தை கண்டித்தார். இதை ஒரு மத சடங்காகவே பின்பற்றினார்கள் பலர். இந்தப் பழக்கத்தை நீங்கள் கைவிட வேண்டும். இதில் நீங்கள், இந்தக் கூடா ஒழுக்கத்தில், கூடா உறவில். தாய்மார்களையும், சகோதரிகளையும் கூட விட்டுவைத்திடவில்லை. ஆகவே நீங்கள் இதை நிறுத்த வேண்டும். இதற்கு மாற்றாக இஸ்லாமியக் குடும்ப அமைப்பு முறையையும், இஸ்லாமிய விழுமியங்களையும் பரிந்துரைக் கின்றேன். இன்னும் நீங்கள் இந்தப் பழக்கத் திலேயே நிலைத்திருந்தால், நான் உங்கள் மீது நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது வரும் என எச்சரித்தார்.

திருமண ஒப்பந்தங்கள் இல்லாமல் எந்தப் பெண்ணை வேண்டுமானாலும் பயன்படுத்து வோம் என்ற பழக்கத்தை விடுங்கள் என்று அறிவித்தார்.

காலா காலமாக மலபார் மக்களின் கூட்டத்தார் ஆங்கிலேயர்களுக்கு ஆதரவாகவும், திப்பு சுல்தானுக்கு எதிராகவும் கிளர்ச்சிகளைச் செய்து வந்தார்கள். இவர்கள், அவர் கடைபிடித்த இஸ்லாமிய ஒழுக்க மாண்புகளையும், ஜாதிய அடுக்கு முறையை எதிர்த்ததையும் கருத்தில் கொண்டே திப்புவை எதிர்த்தார்கள். ஆங்கிலே யர்கள் அள்ளித்தெளித்த சில்லரைகளுக்காகவும் கிளர்ச்சி செய்தார்கள். கிளர்ச்சியாளர்கள் ஆயுதம் தாங்கி போர் தொடுத்திடும் அளவிற்கு போனபோது அதனை படைகொண்டு அடக்கி னார். இந்த ஆயுதந்தாங்கிய கிளர்ச்சிகளில் பதவி ஆசைப்பிடித்தவர்கள் நிரம்பவே கலந்து கொண்டார்கள்.

ஆனால் பிற்றை நாட்களில் வரலாற்று ஆசிரியர்கள் - அவர்கள் ஆங்கிலேயர்களாக இருந்தாலும் சரி, இந்தியர்களாக இருந்தாலும் சரி திப்புவின் ஆட்சியில் நடந்த அமைதியான - கொள்கை ரீதியான மதமாற்றங்களையும், இந்த நிகழ்ச்சிகளோடு சம்மந்தப்படுத்தி எழுதி, கட்டாய மதமாற்றங்கள் என முடிச்சுப் போட்டார்கள். முடிச்சுப்போட்டு எழுதி னார்கள். ஒரு காலகட்டத்தில் மக்களுக்குக் கிடைக்கும் திப்புவைப் பற்றய இவைதாம் என்றாக்கினார்கள்.

ஆனால், பிற்றை நாட்களில் வரலாற்றை ஆய்வு செய்தவர்கள், நிரம்பவே உண்மைகளை அகழ்ந்தார்கள்.


வரலாற்றை திரித்தவர்களையும், பட்டியல் போட்டார்கள். அவற்றில் திப்பு எதிர்த்த சமூக தீமைகளையும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கிய உரிமைகளையும் தெளிவுபடுத்தி னார்கள்.

மராட்டிய கொள்ளையர்களும், இதர கொள்ளையர்களும் கொள்ளையடித்த சிறுங்கேரி மடங்களுக்கு இழப்பீடுகளையும், மானியங்களையும் அள்ளித் தந்தார் என்பதை யும் வெளிச்சம் போட்டுக் காட்டினார்கள்.

அதேநேரத்தில் ஆங்கியேலர்களுக்கெதிராக இங்குள்ள மன்னர்களை ஒன்றிணைக்க எடுத்த முயற்சிகளை இங்குள்ள மன்னர்கள் - இன்றைய சொல்வழக்கில் சொன்னால் இந்து மன்னர்களே தோல்வியடையச் செய்தார்கள் என்பதையும் விளக்கிச் சொன்னார்கள்.

இந்த வேடதாரிகளின் வேஷமும் களைந்து உண்மை வெளிச்சத்திற்கு வந்தது.

அத்தனைப் பொய்களையும் வென்று, திப்பு வாழ்கின்றார். இந்திய மண்ணில் மட்டுமல்ல உலக வரலாற்றிலும், மாவீரராய் விடுதலைப் போரால் ஆட்சியை இழந்த மாமன்னர் என்ற பட்டத்தோடும், பட்டையத்தோடும்.! **- MGM**




**அனைவரும் வரலாறுகளை அறிய இந்நூலினை வாங்கிப் படிக்கவும்**



# திப்புவின் நாணயங்கள்

**திப்பு** வெளியிட்ட நாணயங்கள் மிகச்சிறந்த வகையிலும், எண்ணிக்கையிலும் அவரது புகழை ஓங்கச் செய்கின்றன. ஹெண்டர்ஸன், 'தங்கம் மற்றும் வெள்ளியினால் செய்யப்பட்ட நாணயங்கள், சந்தேகமேயில்லாமல் பெரு மதிப்புடன் அழகிய அரேபிய எழுத்துக்களுடன் ஆதாரங்களாக இருக்கின்றன. இதற்கு முன்பு, திப்புவின் நாணயங்களைப் போல இத்தனை அற்புதமாக, கவரும்படி வெளிடப்பட்டுள்ளதா என்றொரு சந்தேகம் இருக்கிறது' என்று புகழ்கிறான். திப்பு தங்கம், வெள்ளி மற்றும் செம்பு நாணயங்களை வெளியிட்டார். அவை ஸ்ரீரங்கப்பட்டிணம், பெத்னூர், கூட்டி, பெங்களூர், சித்தல்துர்க், கள்ளிக்கோட்டை, சத்தியமங்கலம், திண்டுக்கல், குர்ரம்கொண்டா, தார்வார், மைசூர் மற்றும் பெரோக் அல்லது பெரோக்காபாத்திலுள்ள பன்னிரண்டு நாணயத் தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்டன.

ஆங்கிலேயர்களுடன் போரில் ஈடுபட்டிருந்ததால் தனது ஆட்சியின் முதல் ஆண்டில் சில நாணயங்களை மட்டும் திப்பு வெளியிட்டார். அவை ஸ்ரீரங்கப்பட்டிணத்திலிருந்தும் பெத்னூரிலிருந்தும் வெளியாகின. ஐந்தாம் ஆண்டில் அத்தனை நாணயத் தொழிற்சாலைகளும் செயல்பாட்டில் இருந்தன. அவர் ஆட்சியின் பத்தாவது ஆண்டில் ஸ்ரீரங்கப்பட்டிணம், பெத்னூர் மற்றும் கூட்டி நாணயத் தொழிற்சாலைகளில் மட்டுமே நாணயங்கள் தயாரிக்கப்பட்டு வெளியாயின.

திப்பு வெளியிட்ட அத்தனை நாணயங்களிலும் அவரது பெயர் இடம்பெற வில்லையென்பது சுவாரசியமான ஒன்று. திப்பு தனது இறையாண்மையைக் கருத எண்ணாத மொகலாயச் சக்கரவர்த்தி இரண்டாம் ஷா ஆலத்தின் பெயரிலும் நாணயம் வெளியாகவில்லை. ஆனால் அவரது தந்தை பெயரின் ஆங்கில முதல் எழுத்தான பி பெரும்பாலான தங்கம், வெள்ளி நாணயங்களில் பொறிக்கப்பட்டிருந்தது. சில நாணயங்களில், 'ஹைதரின் வெற்றியால் உலகம் அஹமதின் மதமாகப் பிரகாசிக்கிறது. அவரே சுல்தான். அவரே ஒற்றுமை. அவரே 'எல்லாம்' என்று பொறிக்கப்பட்டிருந்தது.

திப்புவின் ஆட்சியில் முதல் நான்காண்டுகள் வெளியிடப்பட்ட நாணயங்களில், ஹிஜ்ரா தேதி குறிப்பிடப்பட்டிருந்தது; அதிலிருந்த எண்கள் வழக்கம்போல இடமிருந்து வலமாக வாசிக்கும் வகையில் பொறிக்கப்பட்டிருந்தன. ஐந்தாம் ஆண்டிலிருந்து அவரது ஆட்சியின் இறுதி வரை திப்புவின் மௌலூதி சகாப்த தேதிகள்குறிப்பிடப்பட்டன. அதில்இடம்பெற்ற எண்கள், எழுத்துகள் வலமிருந்து இடமாக வாசிக்கும் வகையில் பொறிக்கப்பட்டன. நான்காம் ஆண்டில் வெளியிடப்பட்ட நாணயங்களில் 1200 கி.பி என்று பொறிக்கப்பட்டிருந்தது. திப்புவின் நாணயங்களிலிருந்து அவர் அரியணையேறிய நாள் 1783 ஆம் ஆண்டு மே மாதம் 4 ஆம் தேதி என்று தெரிய வருகிறது.

மௌலூதி சகாப்தம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்பு தனது நாணயங்களுக்கானப் பெயர்களை திப்பு கண்டுபிடித்துவிட்டார். அவை நாணயத்தின பின்பகுதியில் வழக்கம்போல பொறிக்கப்பட்டன. தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்கள் இறைத்தூதர், முதலிரண்டு காலிப்கள் மற்றும் பன்னிரண்டு ஷியா இமாம்களின் பெயர்களைத் தாங்கி வந்தன. செம்பு நாணயங்களில் சிலவற்றைத் தவிர மற்றெல்லாவற்றிலும் மூன்றாவது காலிப், அரேபிய அல்லது பெர்ஷிய மொழியில் நட்சத்திரங்களின் பெயரைத் தாங்கி வந்தது. நாணயங்களில் பெயர் பொறிக்கப்பட்டது 1216-க்குப் பின்புதான் என்பதை கவனிக்க வேண்டும்.

**தங்க நாணயங்கள்**

மொஹர் அல்லது அஹமதி என்று

இறைத்தூதர் முஹம்மதின் (ஸல்) பெயரில் அழைக்கப்பட்டது. அஹமதியின் சராசரி எடை 211 தானியங்கள். நான்கு பகோடாக்களுக்கு சமமானது.

அரை மொஹர் அல்லது சாதிகி முதல் காலிப் அபுபக்கர் சித்திக்கின் பெயரிலும், பின்னர் ஆறாம் ஷியா இமாம் ஜாபர்-இ-சாதிக்கின் பெயரிலும் வெளியானது. நாணயத்தின் சராசரி எடை 106 தானியங்கள். இரண்டு பகோடாக் களுக்கு நிகரானது.

கால் மொஹர் அல்லது பாருகி இரண்டாவது காலிப் உமர் (ரழி) பெயரால் அழைக்கப் பட்டது. அதன் சராசரி எடை 521/2 தானியங்கள். 31/2 ரூபாய்க்கு சமமானது.

திப்புவின் தங்க நாணயங்களில் மிகக் குறைந்த மதிப்புடையது பணாம். அதற்கு திப்பு ரஹாதி என்று பெயரிட்டிருந்தார். அதன் சராசரி எடை 5 முதல் 6 தானியங்கள் ஆகும். பகோடாவில் பத்தில் ஒருபங்கு மதிப்புடையது. அதன் சிறிய வடிவத்துக்காக, தென்னிந்தியா முழுவதும் அந்தப்பணம் கணிசமான அளவில் புழங்கியது.

அஹமதி ஸ்ரீரங்கப்பட்டிணம் மற்றும் பெத்னூர் நாணயத் தொழிற்சாலைகளில் அச்சிடப் பட்டபோதும், சாதிகி ஸ்ரீரங்கப்பட்டிணத்தில் மட்டுமே தயாரிக்கப்பட்டது. ஆனால் இவையிரண்டும் பெருமளவு புழக்கத்தில் விடப் படவில்லை. பகோடாவும் பணாமும் பெருமளவு புழக்கத்தில் இருந்தன. பகோடா ஸ்ரீரங்கப் பட்டிணம், பெத்னூர் மற்றும் தார்வாரில் தயாரிக்கப்பட்டன. பணாம் கள்ளிக்கோட்டை, பெரோக், திண்டுக்கல், பெத்னூர், தார்வார் மற்றும் ஸ்ரீரங்கப்பட்டிணத்தில் உற்பத்தி செய்யப்பட்டன.

**வெள்ளி நாணயங்கள்**

இரட்டை ரூபாய் அல்லது ஹைதர் அலியின் பெயரால் அழைக்கப்பட்டது. அதன் சராசரி எடை 352 முதல் 355 தானியங்களாக இருந்தது.

ரூபாய் அல்லது இமாமி பன்னிரண்டு ஷியா இமாம்களின் பெயரில் அழைக்கப்பட்டது. அதன் சராசரி எடை 175 முதல் 178 தானியங்கள்.

அரை ரூபாய் அல்லது அபிதி நான்காவது இமாம் பெயரில் அழைக்கப்பட்டது. அதன் சராசரி எடை 87 தானியங்கள்.

கால் ரூபாய் அல்லது பக்ரி ஐந்தாவது இமாம் பெயரில் அழைக்கப்பட்டது. அதன் சராசரி எடை 43 தானியங்கள்.

அரைக்கால் ரூபாய் அல்லது ஜாபரி ஆறாவது இமாம் பெயரில் அழைக்கப்பட்டது. அதன் சராசரி எடை 20 தானியங்கள்

வீசம் ரூபாய் அல்லது காஜிமி ஏழாம் இமாம் பெயரில் அழைக்கப்பட்டது. அதன் சராசரி எடை 10 தானியங்கள் அரை வீதம் ரூபாய் அல்லது கிஜ்ர் இறைத்தூதர் கிஜ்ர் பெயரில் அழைக்கப்பட்டது. அதன் சராசரி எடை 5 தானியங்கள். திப்பு வெளியிட்ட நாணயங்களில் மிகவும் சிறியது இதுதான்.

ஏழுவகையிலான வெள்ளி நாணயங்களை திப்பு வெளியிட்டார். இரட்டை ரூபாய் ஸ்ரீரங்கப்பட்டிணம், பெத்னூர் மற்றும் கள்ளிக் கோட்டையில் அச்சிடப்பட்டன. ஒரு ரூபாய் ஸ்ரீரங்கப்பட்டிணம், பெத்னூர் தார்வாரில் அச்சிடப்பட்டன. அரை ரூபாய் ஸ்ரீரங்கப்பட்டிணத்திலும் பெத்னூரிலும் அச்சிடப்பட்டபோது, கால் ரூபாய் ஸ்ரீரங்கப்பட்டிணத்தில் மட்டும் அச்சிடப்பட்டது.

**செம்பு நாணயங்கள்**

இரட்டை பைசா அல்லது ஒஸ்மானி மூன்றாம் காலிப் உஸ்மான் (ரழி) பெயரில் அழைக்கப்பட்டது. 1218 முதல் 1221 ஆம் ஆண்டு வரை பயன்படுத்தப்பட்ட இந்தப் பெயர் பின்னர் முஸ்தரி என்று மாற்றப்பட்டது. அதன் எடை 331 முதல் 351 தானியமாக இருந்தது. பைசா ஜொஹ்ரா என்ற பெயரில் அழைக்கப்பட்டு அதன் எடை 174 தானியமாக இருந்தது. அரைப் பைசா பஹ்ரம் என்ற பெயரில் அழைக்கப்பட்டு 87 தானியங்களின் எடையுடன் இருந்தது.

கால் பைசா அக்தர் என்ற பெயரில் அழைக்கப் பட்டது. அதன் எடை 42 தானியங்களாக இருந்தது. அரைக்கால் பைசா குதுப் என்றபெயரில் 18 தானியங்களின் எடையில் இருந்தது.

செம்பு நாணயங்கள் திப்புவின் பன்னிரண்டு நாணயத் தொழிற்சாலைகளிலும் அச்சிடப் பட்டன. செம்பு நாணயங்கள் தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்களைப் போலல்லாமல், யானையின் உருவத்தை பல்வேறு நிலைகளைக் கொண்டிருந்தன. பொதுவாக, இந்தியாவில் யானை கம்பீரத்தின் அடையாளமாகப் பார்க்கப் படுவதுண்டு. அதனால் ஹைதர் அலி தனது நாணயங்களில் யானையின் உருவத்தைப் பயன்படுத்தினார். திப்பு தனது தந்தையைப் போலவே அதை செம்ப நாணயங்களில் பயன்படுத்திக் கொண்டார்.

**- திப்புசுல்தான் மொஹிபுல் ஹசன் நூலிலிருந்து**



# திப்புவும்-ஆங்கிலேயச் சிறைக் கைதிகளும்

பொதுவாகவே இப்படித்தான் நடக்கும். அதிலும் ஆங்கிலேயச் சிறைக் கைதிகளுக்கு திப்பு வழங்கும் தண்டனைமுறை கடுமையானது மட்டுமல்ல; கொடூரமானதாகவும், காட்டு மிராண்டித்தனமாகவும் இருந்தது. தாம்ஸனும் காரேட்டும்தான் இவ்வாறு குறிப்பிடுகின்றனர். 'கோட்டையை முற்றுகையிட்டிருக்கும் அவரது படைத்தளபதிகளுக்கு, இடம் கேட்கச் சொல்லி அவரிடமிருந்து உத்தரவு வரும். கோரிக்கை ஏற்கப்பட்டதும் வயது, பாலினம் பற்றிப் பொருட்படுத்தாமல் ஒவ்வொருவரையும் வெட்டிக் கூறுபோடுவார்கள். உள்ளே என்ன நடக்கிறது என்று கண்டுபிடிப்பது அரிதான ஒன்றாக இருக்கும்; முன்னோட்டமாக, போர் வெடித்தவுடன் உள்ளே இன்னும் உயிருடனிருக்கும் அத்தனை பேரையும் கொன்றுவிடுவார்கள்.' மங்களூர் உடன்படிக்கைக்குப் பின்பு நடந்ததாக பௌரிங்க் இப்படிக் கூறுகிறான். 'சிறைக்குள் அடைபட்டிருந்த பெரும் எண்ணிக் கையிலானவர்கள், மிகக் கடினமான உழைப்பின் வழியே சாகடிக்கப்பட்டனர். அல்லது திப்புவின் உத்தரவைச் செயல்படுத்துபவர்களால் கொடூரச் சாவைச் சந்தித்தனர்'

இதுபோன்ற சொல்லாடல்கள் முற்றிலும் நேர்மையற்றவை; ஒருசார்புடையவை. திப்பு இளவரசனாக இருந்தபோதும், ஆட்சியாளராக இருந்தபோதும், அரசாங்கத்துக்கு எதிராக துரோகமிழைத்தவர்களைக் கடுமையான தண்டனைக்கு உள்ளாக்கியதைத் தவிர, மற்றெப்போதும் அவர் போர்க்கைதிகளிடம் மிகக் கருணையோடுதான் நடந்து வந்திருக்கிறார்.

1780 ஆம் ஆண்டில் ஹைதர் அலி ஆங்கிலேயப் படையை பெய்லியில் வேரடி மண்ணோடு சாய்த்து விட்டிருந்தார். அப்போது பிடிபட்ட பல அதிகாரிகளை திப்புவிடம் அழைத்து வந்தனர். திப்பு அவர்களை மிகுந்த மனிதாபிமானத்தோடு அணுகினார். தனது கூடாரத்துக்குள் அழைத்த அவர்களை அமரவைத்து, பிஸ்கட்டுகளை உண்ணவைத்து, ஆளுக்கு ஐந்து பகோடாக்களைக் கொடுத்தனுப்பினார்.

அவர்களில் கேப்டன் மாண்டியத். அப்போதுதான் திருமணமாகியிருந்தவன். மெட்ராஸிலிருக்கும் தன் மனைவிக்குக் கடிதம் ஒன்றை அனுப்ப வேண்டுமென்று, தன் ஆழ்மன ஆசையை திப்புவிடம் தெரிவித்தான். திப்பு உடனடியாக அதற்கு இசைவு கொடுத்தார். அதேபோல 1782 ஆம் ஆண்டு பிப்ரவரி 18 ஆம் தேதி, பிரெய்த்வெய்ட் படைப்பரிவின் அதிகாரிகளில் சிலர் திப்புவிடம் பிடிபட்டனர். அவர்கள் ஒவ்வொருவர் மீதும் திப்பு, தனித்தனியாகக் கவனம் செலுத்தினார். ஆடையும் பணமும் கொடுத்ததுடன் மட்டும் அவர் நின்று விடவில்லை. தனது கட்டளையைச் செயல்படுத்துபவர்களிடம், காஞ் சிவரத்தில் பிரதானப் படையுடன் முகாமிட்டிருக்கும் ஹைதர் அலியை அவர்கள் காணும்வரை மிகக் கவனமாகவும் அவர்களுக்கு வேண்டிய அனைத்தையும் செய்து கொடுக்க வேண்டும் என்று கண்டிப்பான உத்தரவைக் கொடுத்தார்.

மைசூரின் ஆட்சியாளராக திப்பு உயர்ந்த பின்பும் சிறைக்கைதிகளின் மீதானப் பரிவு


vaigarai velicham official

நடவடிக்கை அவரிடமிருந்து மாறிவிடவில்லை. பெங்களூரில் தண்டனைக் காலத்திலிருந்த ஒரு சிறைக்கைதி திப்புவுக்கு சான்றளிக்கின்றான்; 'கனவான் திப்பு, தண்டனை அடைந்திருந்த அத்தனை பேரையும் தாங்கள் விரும்பும் பொருட்களை வாங்கிக்கொள்ள அனுமதித் திருந்தார்.

அதுபோல, தண்டனைக் காலத்தின் பிற்பகுதியில் பல்வேறு சிறைகளில் அடைபட்டி ருந்தவர்கள் தங்களுக்குள் சந்தித்துக்கொள்ள அவர்களுக்கு அனுமதி வழங்கியிருந்தார். சிறைக்கைதிகளுக்குப் பொறுப்பாக இருந்த பெங்களூர் கோட்டையின் படைத்தளபதி சயீத் இப்ராஹிம் கைதிகளை மிகவும் அணுக்கத்துடன் நடத்தினான். அவன் மரணமடைந்தபோது மிகவும் துயருற்ற மெட்ராஸ் கவர்னர் லார்ட் கிளைவ், சயீத் இப்ராஹிமின் நினைவைப் போற்றும் வகையில், அவனது சமாதியின் மீது ஒரு நினைவிடத்தை அமைக்கச் சொல்லி உத்தர விட்டான். கமர்-உத்-தீனும் தன் பொறுப் பிலிருந்த சிறைக்கைதிகளிடம் மிகவும் பரிவுடன் நடந்துகொண்டான். 1791ஆம் ஆண்டு பிடிபட்ட கேப்டன் நாஷ் மற்றும் லியோடெனன்ட் சால்மர் இருவரும் கோயமுத்தூர் சிறையில் கைதிகளாக அடைபட்டிருந்தனர். அவர்கள் கடைசிவரை எந்தவொரு புகாரையும் கூற வில்லை. மனிதாபிமானத்தோடு அணுகப்பட்ட தாகக் கூறியிருந்தனர். அவர்கள் விடுதலையாகும் போது ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் காணப்பட்டனர்.

இருந்தபோதிலும் இந்தச் சம்பவங்களால் மட்டுமே போர்க்கைதிகள் நன்றாக நடத்தப் பட்டார்கள் என்றும், அவர்கள் மகிழ்ச்சியாக இருந்தார்கள் என்றும் எடுத்துக்கொண்டுவிட முடியாது. உண்மையில், அவர்கள் அடை பட்டிருந்த சிறையின் பொறுப்பாளர்களைப் பொறுத்துதான் எதுவும் நடந்திருக்கும். அதிர்ஷ்டவசமாக சில இடங்கள் மற்ற இடங் களைக் காட்டிலும் நல்லவையாகவே அமைந்து விடுவதுண்டு, பெத்னூரில் விடப்பட்டுச்சென்ற காய்மடைந்த அதிகாரிகள் மற்ற இடங்களைக் காட்டிலும் நன்றாக நடத்தப்பட்டார்கள் தங்களின் ஆடைகள், தூளிகள், படுக்கைகள், நாற்காலிகள், மேஜைகள், கத்திகள் உணவு உண்ணும் கரண்டிகள் உள்ளிட்ட மற்ற பொருட்களை உபயோகித்ததுகொள்ள அனுமதிக்கப்பட்டனர். பேனா, மை, காகிதங்கள் ஆகியவற்றை "அவர்கள் சுலபமாகப் புழங்கிக் கொண்டனர். மற்ற ஒரு சில இடங்களில் ஊழல் சுகானுபவங்கள் கிட்டியதில்லை. ஆனால் இதுகுறித்தத் தகவல்கள் ஒற்றர்கள் அதிகாரியோ அல்லது கடினப்போக்குடையவனோ பொறுப்பி லிருந்தால், அங்கே அவர் சம்பந்தப்பட்ட அதிகாரியை தண்டனைக்கு உள்ளாக்கி சிறைக் கைதிகளை மூலமோ அல்லது கம்பெனி நிர்வாகத்திடமிருந்தோ திப்புவை வந்தடையும் போது. அந்த அதிகாரிக்கு கடுமையாக உத்தர விடுவார்.

திப்புவின் உத்தரவின் பேரில் மாத்யூ, பெய்லி மற்றும் சில ஆங்கிலேய அதிகாரிகள் கருணையற்றுக் கொல்லப்பட்டார்கள் என்று பொதுவானக் கருத்தொன்று உலவவிடப் பட்டது. இந்த நம்பிக்கைக்கும் எந்தவொரு அடிப்படை ஆதாரமும் இல்லை. ஸ்ரீரங்கப் பட்டிணம் சிறையில் அடைபட்டிருந்த பிரெய்த் வெய்ட், மெட்ராஸ் கவர்னர் மெக்கார்டனிக்கு ஒரு கடிதம் எழுதுகிறான். அதில், ஆங்கிலேய அதிகாரிகள் கொல்லப்படுகிறார்கள் என்று புரளி கிளப்பி விடப்படுகிறது. துளியளவும் உண்மை யில்லை. அந்த விஷயத்தில் முழுவதுமாக புலனாய்ந்து விட்டேன். பெய்லியைப் பொறுத் தவரை, சாதாரணமாக நோய்வாய்பட்டுத்தான் இறந்தான். கடந்த சில மாதங்களாகவே அவனுக்கு நோய் இருந்தது. சரியான மருத்துவ உதவி செய்யப்பட்டிருந்தால் அநேகமாக அவன் உயிர் பிழைத்திருக்கக்கூடும் என்று கூறியிருக் கிறான். பிரெய்த்வெய்ட் ஜெனரல் மாத்யூவுக்கு எழுதியக் கடிதமொன்றில் தான் சிறையிலடைக் கப்பட்டிருந்த இடம் மனதுக்கு இனிமையாகவும் நல்ல காற்றோட்ட வசதியும் கொண்டிருந்தது. இரண்டு ஐரோப்பியப் பணியாளர்கள் அனுமதிக் கப்பட்டிருந்தனர். தாழ்ந்த சாதியைச் சேர்ந்த சமையல்காரனும் உடனிருந்தான் என்று குறிப் பிட்டு. தனக்கு மேஜை, கட்டில், படுக்கை, நாற்காலிகள், கத்திகள், உணவருந்தும் கரண்டிகள் வழங்கப்பட்டதாகவும் கூறுகிறான். மேலும் தனக்கு மதுவும். சர்க்கரையும் கொடுக்கப்பட் டதுடன், செலவுக்குப் பணமும் அளிக்கப்பட்ட தாக சிலாகிக்கிறான். ஒரே வரியில் அவன் அங்கே சுகவாசியாக இருந்தான். ஆனால்

அதை அனுபவித்துக் கொண்டிருப்பவனாக இராமல், தனக்குத்தானே சூனியம் வைத்துக் கொண்டவனாக ஆகிப்போனான். ஒருநாள் ஏதோ ஒரு வெக்கையில் அவன் ஜமேதார் முன்னிலையில் தனது காவலாளிக்கு ஒரு பகோடாவை எடுத்துக் கொடுத்தான். அது படைத்தலைவனின் காதுக்குப் போனது. அதையறிந்து வந்த திப்புவின் அதிகாரிகள், அவனிடமிருந்த ஆயிரத்துக்கும் அதிகமான பகோடாக்களை எடுத்துச் சென்றுவிட்டார்கள். அந்தப் பணம் பெத்னூர் கோட்டையிலிருந்து உடன்பாட்டு விதிகளை மீறி மாத்யூ அள்ளிச் சென்றிருந்த கருவூலப் பணத்தில் ஒரு பகுதி யாகும். பணம் குறித்தத் தகவலை வெளியிட்டு

விட்டாளென்று மாத் தந்து பாதுகாவலனை அடித்து உதைத்தான். அதையடுத்து, பாதுகாவலன் அவனிடமிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டான். இந்நிலையில் மாத்யூ ஆங்கிலேயப் பணியாளர்களுடன் சேர்ந்து ஏதோ சதித்திட்டம் தீட்டுகிறான் என்று சந்தேகப்பட்டு அவனுக்கு அளிக்கப்பட்டிருந்த மற்ற பாதுகாவலர்களும் விலக்கிக் வழங்கப் பட்ட சலுகைகளும் திரும்பப் பெறப்பட்டன. தனது பாதுகாவலனை அடித்த குற்றத்துக்காக மாத்யூ சிறையிலடைக்கப்பட்டான். இதைத் தொடர்ந்து அவன் படுத்த படுக்கையானான். யாரிடமும் அவன் எதையும் பேசுவதில்லை. ஈரமற்ற அரிசியைத் தவிர, வேறு எதையும் உண்பதுமில்லை. சிறையிலடைக்கப்பட்ட ஏழாவது நாளில் செப்டம்பர் **6**ஆம் தேதியன்று, அவன் மரணடைந்தான்,

எனினும் இதுபோன்ற தருணங்களில் ஆங்கிலேயச் சிறைக் கைதிகளிடம் தீப்பு தனது வழக்கமான உயர்கருணையைக் காட்டமுடிவ தில்லை. கடுமையான தண்டனைக்கு உள்ளாக் கப்பட்டனர். உதாரணத்துக்கு அவர்கள் தப்பியோட முயற்சிக்கும்போது அல்லது கலகம் செய்யும்போது, திப்புவுக்கு எதிராகச் சதித் திட்டத்தில் ஈடுபடும்போது அல்லது வேறு வழிகளில் தவறான நடவடிக்கைகளில் ஈடுபடும் போது அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப் பட்டனர். சில வேளைகளில் சிறைக்கைதிகள் நாய்களை விரட்ட ஶ்ரீரங்கப்பட்டிணம் தெருக் களில் துரத்திவிடப்பட்டனர். மத ரீதியில் தவறிழைத்தவர்கள் என்று சந்தேகிக்கப்பட்ட வர்களில் சிலருக்கு இதுபோன்ற தண்டனைகள் வழங்கப்பட்டன. ஒரு சமயத்தில் (மொஹ்ரம் இரவொன்றில் சிறைக் கைதிகளில் ஒருவன் தப்பியோடி விநியோகிப்பதற்காக வைக்கப் பட்டிருந்த தஜியாக்களைத் திருடிவிட்டான்; மற்றொரு சம்யத்தில் அவர்கள் சாமையா, ரங்கா அய்யங்கார் மற்றும் மைசூரின் முக்கியமான அதிகாரிகள் தலைமையில் ஒன்றுகூடி, மைசூர் அரியாசனத்தில் இந்துக் குடும்பத்தை அமர்த்த சதித்திட்டம் தீட்டினார்கள்; சிறைக்கைதிகள் தங்களுக்குள் ரகசியமானத் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும்போது அல்லது தங்கள் அரசாங்கத்துக்குக் கொண்டு செல்லும்போது - பலமுறை தப்பியோட கைதிகள் முயற்சித்ததில், ஒருசிலதடவை அவர்கள் வெற்றி பெற்றுள்ளனர்- இதுபோன்றக் காரணங்களுக்காக கைதிகள் கடுமையான தண்டனைக்கு உள்ளாக்கப்படுவது கட்டாயமாகிவிடுகிறது. அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டியதாகவும் ஆகிவிடுகிறது. தண்டனைகள் கடுமையாக இருந்த போதிலும், அவை காட்டுமிராண்டித்தனமாக இருந்த தில்லை. கைதிகளைக் கொத்துக்கொத்தாய்க் கொல்வதிலிருந்து முற்றிலும் வேறுபட்டதான, சமகாலத்துக் கொலைகள் என்ற ஆங்கிலே யர்களின் கருத்து திப்பு மீது குற்றமாகச் சுமத்தப்படுகிறது. இந்தக்கருத்தை உறுதிப்படுத்த ஆதாரம் இல்லையென்பதுதான் உண்மை.

மங்களூர் மற்றும் ஶ்ரீரங்கப்பட்டிணம் உடன் படிக்கையின்படி ஆங்கிலேயப் போர்க்கைதிகள் அத்தனை பேரையும் திப்பு விடுவிக்கவில்லை என்றொரு குற்றச்சாட்டில் எத்தனை உண்மை யிருக்கிறது ? **1783** ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் **2**ஆம் தேதி போர் நிறுத்தம் செய்யப்பட்ட போது **4,261** கைதிகள் மைசூர் சிறைகளில் இருந்தனர். மங்களூர் உடன்படிக்கை ஏற்கப்பட்டவுடன் அத்தனை பேரும் வேலூருக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அதுபோலவே, மூன்றாவது ஆங்கிலேய-மைசூர் போரின்போது பிடிபட்ட அத்தனைக் கைதிகளையும் திப்பு விடுதலை செய்தார். அப்போது திப்புவின் இரண்டு மகன்கள் ஆங்கிலேயர்களிடம் பிணையாக இருந்தனர். திப்பு ஆங்கிலேயச் சிறைக்கைதிகளை விடுவிக்கா திருந்தால், ஆங்கிலேயர்களும் அச்சிறுவர்களை விடுவிக்க மாட்டார்கள் என்பது திப்புவுக்குத் தெரியும். ஆனால் ஆங்கிலேயர்கள் உடன்


vaigarai velicham official

படிக்கையின்படி சிறைக்கைதிகள் விடுதலையாகியும் திருப்தியடையவில்லை.


உடன்படிக்கையிலில்லாத, மைசூர் சிறைகளில் அடைபட்டிருக்கும் மற்ற ஆங்கிலேயக் கைதிகளையும் விடுவிக்க வேண்டும் என்று வற்புறுத்தினர். ஆனால் சில சிறைக் கைதிகள் மெட்ராஸுக்குச் செல்ல விருப்பமில்லாதவர்களாக அங்கேயே இருந்தனர். அவர்கள் திப்புவின் அரசாங்கத்தில் பணியில் சேர ஆர்வம் காட்டினர். ஆங்கிலேய இராணுவத்திலிருந்துத் தப்பியோடியவர்களில் சிலர் மைசூரில் இருந்தனர். அவர்களை, சிறைக்கைதிகள் என்ற கணக்கில் பட்டியலிட முடியாது. ஆங்கிலேயப் படையிலிருந்தும் பிரஞ்சுப் படையிலிருந்தும் தப்பியோடுவது சாதாரணமாக ஆகியிருந்தது.

உண்மையிலேயே, பொதுவானக் குற்றமாக ஆகியிருந்தது குடித்துவிட்டு பின்னர் தப்பியோடுவது. அப்படித் தப்பியோடியவர்கள், திப்புவிடம் பணியில் சேர்ந்து கொண்டு திரும்பப்போக விரும்புவதில்லை. திப்புவும் அவர்களைத் திரும்பப் போகச்சொல்லி வலியுறுத்துவதில்லை. தந்திரம் போன்ற காரியங்களுக்கு அவர்கள் பயன்படுபவர்களாக இருந்தார்கள்..

திப்புமீது தீட்டப்படும் மற்றொரு குற்றச்சாட்டு, சிறைக்கைதிகளைக் கட்டாயப்படுத்தி இஸ்லாமுக்கு மதம் மாற்றினார் என்பது. இது மீண்டுமொரு தவறானக் குற்றச்சாட்டு. முஸ்லீமாக மதம் மாறியவர்கள் அதை விரும்பியே ஏற்றுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் வெகுமதி பெறுவதற்காக மதம் மாறியவர்களாக இருந்தார்கள். சிறை வாழ்க்கையிலிருந்து தப்பிக்க சிலர் மதம் மாறினார்கள்.

ஆங்கிலேயப் படைகளிடமிருந்து தப்பியோடியவர்களைத் தேர்வு செய்து பணியமர்த்திக்கொண்ட திப்பு, அவர்களை வைத்து ஆங்கிலேயப் போர் நுட்பங்களை தனது படைக்கு பயிற்சியளித்தார். அவர்களைத் தனது இராணுவத்தில் பயிற்சியாளர்களாக ஆக்கிக் கொண்டார். இஸ்லாமைத் தழுவியவர்களுக்கு திப்புவின் அதிகாரிகள் பணிவாய்ப்பை வழங்கினார்கள். இந்த அடிப்படையில்தான் தப்பியோடிவந்த ஆங்கிலேயப் படைவீரர்கள் மைசூரிலிருந்து திரும்பிப்போக விரும்பவில்லை. தோத்வெல், 'தங்களது சுதந்திரத்தை வாங்குவதற்காக அவர்கள் மதம் மாறினார்கள் என்பதை நம்புவதைத் தவிர வேறு எந்தவொரு காரணமுமில்லை' என்று கணிக்கின்றான்.

**- திப்புசுல்தான் மொஹிபுல் ஹசன் நூலிலிருந்து**


அமெரிக்காவின் நிறவெறி கொள்கையை இஸ்லாத்தை முன் வைத்து முறியடித்த மாவீரன் மால்கம் X என்ற மாலிக் அல்ஷாபாஸ் ஷஹீத். தான் இஸ்லாத்தை ஏற்றார், அமெரிக்காவில் ஆயிரக்கணக்கான கறுப்பு நிறத்தைக் கொண்டவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். நிறவெறிக் கொடுமைகளிலிருந்து நிரந்திரமாக மீட்டார்.

"ஹஜ்" பயணம் என்ற புனித மக்கா மாநகரம் சென்று இஸ்லாம் தொடங்கிய பூமியில் தன் கடமையை முடித்தார். சவூதி அரேபியா அரசின், அரசு விருந்தினர் என்ற கண்ணியத்தோடு.

16 ஆப்ரிக்கா நாடுகளுக்குச் சென்று இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்தார். லட்சக்கணக்கானவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். இஸ்லாத்தை பிரச்சாரம் செய்யும் தனது பெரும் பயணத்தின் ஒரு பகுதியாக, "கேசியஸ் கிளே" என்ற உலக மகா குத்துச் சண்டை வீரனை முஹம்மத் அலீ கிளேயையும் இஸ்லாத்தில் இணைத்தார்.

ஆனால், அமெரிக்காவின் வெள்ளை நிறவெறியர்களால், இதைப் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. அவர்கள் அதாவது, குழு கிளக்ஸ் கிளான் என்ற வெள்ளை நிற அமைப்பைச் சார்ந்தவர்கள் அமெரிக்காவின் உளவுத்துறையின் உதவியோடு மால்கம்-X அவர்களை பிப்ரவரி 21-1965 இல் கொலை செய்து விட்டார்கள்.

தொடர்புக்கு: 7401213394/7358278146/8148129887

**"தெளிவாக, உறுதிபடப் பேசுகிறார்!"**

உரிய தரவுகளுடன் உக்கிரமாக தாக்கு கிறார் பாஜக அரசை! வேலையின்மை, சமத்துவ மின்மை தொடங்கி விவசாயப் பிரச்சினை வரை அலசுகிறார் பரகால பிரபாகர்!

நிர்மலா சீதாராமனின் கணவரான இவர் காங்கிரசாரும், கம்யூனிஸ்டுகளும் கவனிக்கத் தவறியவற்றைக் கூட கவனப்படுத்துகிறார்

சென்னை சிந்தனையாளர் மன்றம் ஏப்ரல் 16, அன்று நடத்திய கருத்தரங்கில், ஆந்திராவைச் சேர்ந்த பொருளாதார நிபுணரும், 'புதிய இந்தியா எனும் கோணல் மரம்' (The crooked timber of new india) என்ற நூலின் ஆசிரியருமான பரகால பிரபாகர் 'நெருக்கடிகுள்ளாகும் மதிப்புகள்' (values at stake) என்ற பொருளில் பேசினார். உலகத்திலேயே பெரிய அரசியல் கட்சி என்று சொல்லிக் கொள்ளும் பாஜக, இந்தியாவில் பெரிய சிறுபான்மையினரான முஸ்லிம் மதத்தைச் சேர்ந்தவர் இல்லாமலேயே அமைச் சரவை அமைத்து உள்ளது. முன் எப்போதும் இல்லாத அளவுக்கு வேலையின்மை அதிகரித்து உள்ளது. எனவேதான், போர் நடக்கும் இஸ்ரேல், உக்ரேன் நாடுகளுக்கு உயிரைப் பணயம் வைத்து இளைஞர்கள் செல்கின்றனர் என்றார். சட்டவிரோதமாக அமெரிக்காவிற்கு குடிபுகுபவர்களில் இந்தியர்களின் எண்ணிக்கை அதிகம் உள்ளது என்றார். அவர் மேலும் பேசியதாவது :

இந்து - முஸ்லிம் கலவரம், இடப்பெயர்ச்சி, அகதிகள் பிரச்சனை போன்றவை நடந்த நெருக்கடியான காலத்திலும், அரசியல் சாசனம் மதச்சார்பற்ற இந்தியாவை நமக்குக் கொடுத் தது. இந்தியா - பாகிஸ்தான் பிரிவினை நடந்த போதும் அதிகாரம் மிக்க ஒரே அரசாக (unitary state) இருக்க வேண்டும் என நமது முன்னோர்கள் நினைக்கவில்லை. கூட்டாட்சி அரசமைப்பை நமக்குத் தந்தார்கள். அகதிகள் பிரச்சினை இருந்த போதும், பன்மைத்துவம், மதச்சார்பின்மை, கூட்டாட்சி போன்ற கொள்கை களை நமது முந்தைய தலைமுறை தந்தது.

# வேலை தேடி

## உக்ரேன், இஸ்ரேல்

# சாவு முகத்திற்கு செல்லும் இளைஞர்கள்



ஆனால், சுதந்திரம் அடைந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு, அவைகளுக்கு ஆபத்து வருகிறது என்றால், அதற்கு இப்போதுள்ள அரசியல் கட்சிகள்தான் காரணம்; அரசிலமைப்பு விழுமியங்களை மக்கள் மனதில் பதிய வைக்கவில்லை என்று பொருளாகும்.

உலக சமத்துவமின்மை ஆய்வகத்தின் அறிக்கையை மேற்கோள் காட்டி பேசிய பரகலா பிரபாகர், அசமத்துவமானது (inequality), கடந்த பத்து ஆண்டுகளில், அதிகரித்துள்ளது.

வெள்ளைக்காரர்கள் ஆட்சிக்காலத்தை விட அதிகரித்துள்ளது. ஒரு சத பணக்கார இந்தியனுக்கு 22% தேசிய வருமானம் கிடைக்கிறது. ஒரு சத பணக்கார இந்தியனுக்கு 44% சொத்துகள் உள்ளன. ஆனால், நிதிக் குழுவின் தலைவரான அரவிந்த் பனகாரியா அசமத்துவத்திற்காக தூக்கத்தை இழக்காதீர்கள் (don't lose sleep over inequality) என்று கட்டுரை எழுதுகிறார். உலகத் தொழிலாளர் அமைப்பு (ILO) 62% இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை என்று கூறுகிறது. ஆனால் இந்திய அரசாங்கத்தின் தலைமை பொருளாதார ஆலோசகர் 'வேலைவாய்ப்பு இல்லாததற்கு அரசாங்கத்திற்கு பொறுப்பு இல்லை' என்று கூறுகிறார்.

கடந்த 10 ஆண்டுகளில் சமத்துவமின்மை மிகவும் அதிகரித்துவிட்டது, நாட்டிலும் பண வீக்கமும் அதிகரித்துவிட்டது.

2022ல் இரயில்வேயில் நடந்த 35,000 தொழில் நுட்பம் அல்லாத பணியிடங்களுக்கு ஒரு கோடியே 25 இலட்சம் விண்ணப்பங்கள் வந்தன. போர் நடந்து கொண்டிருக்கும் சூழலில் இஸ்ரேல், பாலஸ்தீன தொழிலாளர்களுக்கு வேலையை பறித்துவிட்டது. அந்த வேலையைச் செய்ய உ.பி, ஹரியானா, ராஜஸ்தான், மத்திய பிரதேசம் மாநிலங்களில் இருந்து இஸ்ரேல் செல்கிறார்கள். வேலையில்லாமல் இங்கு சாவதைவிட, அங்கு செல்லலாம் என நினைக்கின்றனர். இதேபோல உக்ரேன் போரில் இறந்த ஒருவரின் உடல் கடந்த வாரம் செகந்தரபாத்திற்கு வந்தது. ஈரான், யேமன், சிரியா போன்ற நாடுகளைவிட இந்தியாவில் வேலை வாய்ப்பின்மை அதிகம். 24% வேலை வாய்ப்பின்மை உள்ளது. ஜப்பானில் 6% உள்ளது.


பிரிட்டிஷ் ஆட்சியிலும் பேரவலம் பாஜக ஆட்சி




உலகத் தொழிலாளர் அமைப்பு 60% படித்த இளைஞர்களுக்கு வேலையில்லை என்கிறது. வேலையில்லாதவர்களில் 25 வயதுக்கு கீழே உள்ளவர்கள் 40 % உள்ளனர். பிப்ரவரி 2024 ல் அரசாங்கம் கொடுத்த வெள்ளை அறிக்கையில் எந்த விவரங்களும் இல்லை.

காய்கறிகள் (27%), பருப்பு வகைகள் (19.5%), தானியங்கள் (7.8%), மசாலாப் பொருட்கள் (16.4%), பால் (4.6%), மற்றும் சர்க்கரை (7.5%) மற்றும் வீட்டுக் கடன் (40%) போன்ற பல்வேறு பொருட்களின் பணவீக்கம் வரலாற்று உச்சத்தில் இருக்கிறது.

ஆனால் மக்களின் குடும்ப சேமிப்பு 5% வரை குறைவாகவே உள்ளது. ரிசர்வ் வங்கி கையிருப்பைக் குறைத்து, பொதுச் சொத்துக்களை விற்றாலும், 2023-ம் ஆண்டு நிலவரப்படி தேசத்தின் கடன் 160 லட்சம் கோடியாக இருந்தது.

கடந்த கர்நாடக தேர்தலில் பிரதமர் நரேந்திர மோடி தன்னை எதிர்கட்சிகள் 99 முறை தவறாகப்பேசிவிட்டனர் என்றார். ஆனால், இந்த



அரசாங்கத்திடம் கொரோனாவில் இறந்தவர்களைப் பற்றி புள்ளிவிவரம் இல்லை. எத்தனை பேருக்கு செயற்கை சுவாசம் பொருத்தப்பட்டது என்ற விவரம் இல்லை. எத்தனை பேர் கொரானாவினால் இடம் பெயர்ந்தனர் என்ற விவரம் இல்லை. புள்ளிவிவரங்கள், தகவல்களை இந்த அரசாங்கம் வெளியிடுவதில்லை. பண வீக்கம் அதிகரித்துள்ளது.

குடும்பங்களின் கடன், முன்பை விட அதிக அளவில் அதாவது 40% உள்ளது. சேமிப்பானது 5 சதமாக குறைந்துள்ளது. கடந்த நிதியாண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஆறு மாதத்திலேயே தீர்ந்துவிட்டது. அந்த அளவுக்கு கிராமப்புற ஏழ்மை அதிகரித்து உள்ளது.

உள்நாட்டு முதலீடு 30 சதத்திலிருந்து 19 சதமாக குறைந்துள்ளது. 30 சதமாக இருந்த கார்ப்பரேட் வரியை 22 சதமாக குறைத்து அவர்களுக்கு சலுகை வழங்கப்பட்டுள்ளது. 25 இலட்சம் கோடி ரூபாய்க்கான கடனை பெரு முதலாளிகளுக்கு தள்ளுபடி செய்துள்ளனர். உற்பத்திக்கான ஊக்கத்தொகை (productivity linked incentive) தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது.

ரிசர்வ் வங்கியில் உள்ள நிதியை அரசு பெற்றுள்ளது. பொதுத்துறை நிறுவனங்களையும், அரசு சொத்துகளையும் விற்று அரசு நிதி பெற்றுள்ளது. ஆனாலும் 2023 ல் 1.60 இலட்சம் கோடி ரூபாய் கடனில் இந்தியா உள்ளது.

தேர்தல் பத்திரம் மூலம் நிதி கொடுத்து, அரவிந்த பார்மா என்ற மருந்துக் கம்பெனி அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு 1000 கோடி ரூபாய்க்கு உற்பத்திக்கான ஊக்கத்தொகையை சலுகையாகப் பெற்றுள்ளது.

2014ல் இந்தியக் குடியுரிமை வேண்டாம் என 1.29 இலட்சம்பேர் தங்கள் கடவுச் சீட்டுகளை கொடுத்துள்ளனர். இப்போது அது 2.25 இலட்சம் பேர் அவ்வாறு தங்கள் குடியுரிமைகளைத் துறந்துள்ளனர். 96,000 இந்தியர்கள் சட்டவிரோதமாக அமெரிக்கா தனது செல்ல முயன்றதாக பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. துடிப்பான குஜராத் என அழைக்கப்படும் மாநிலத்தில் இருந்து மட்டும் 26,000 பேர் அமெரிக்கா செல்ல சட்டவிரோதமாக முயன்றனர். ஏற்கனவே, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் இருந்துதான் இவ்வாறு செல்வர். இப்போது இந்தியாவும் அந்தப் பட்டியலில் சேர்ந்து கொண்டது.


vaigarai velicham official

ஐந்து நிமிடம் மட்டுமே விவாதம் நடத்தி, மூன்று வேளாண் சட்டங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன. இதனை எதிர்த்து விவசாயிகள் போராடினர். ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை வாக்களிப்பது மட்டுமே ஜனநாயகம் இல்லை. விவாதிப்பது, முரண்படுவது, பேசுவது, எதிர்க் கருத்து சொல்வது, அதைப் பரிசீலிப்பது போன்றவைகளும் ஜனநாயகத்தின் ஒரு பகுதிதான். ஆனால் அவர்களை ஆண்டி இந்தியன், அர்பன் நக்சல், காலிஸ்தானி, அந்தோலன் ஜீவி என விதவிதமாக அவர்களைப் பாஜக திட்டியது. மாநில தேர்தல்களுக்கு முன்பாக விவாதமே இல்லாமல் அந்த மூன்று விவசாயச் சட்டங்களை திரும்பப் பெற்றுக் கொண்டது. இதற்கும் விவாதம் இல்லை.

உலகிலேயே பெரிய அரசியல் கட்சி என்று பாஜக சொல்கிறது. கடந்த அமைச்சரவையில், இந்தியாவின் சிறுபான்மையினரில் பெரும் பான்மையாக இருக்கும் இசுலாமியர் ஒருவர் கூட இல்லை. இந்தியாவை இந்தியாவின் பெரிய மாநிலமான உபியில் முஸ்லிம்கள் அதிக அளவில் உள்ளனர். ஆனால் ஒரு முஸ்லிம் கூட அங்கு பாஜகவின் சட்ட மன்ற உறுப்பினராக இல்லை. இந்த நிலைதான் குஜராத், கர்நாடக மாநிலத்திலும் உள்ளது.

ஜி.20 மாநாடு நடக்கும்போது 'வாசுதேவய்யா குடும்பம்' என சமஸ்கிருதத்தில் பெயர் சூட்டினர். சமக்கிருதம் என்பதாலேயே அது பழங்காலத்தில் எழுதப்பட்டது என்று இல்லை. இப்போது கூட சமஸ்கிருதத்தில் எழுதலாம். அதற்கு 'உலகமே என் குடும்பம்' என்பது பொருள் என்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்லும் மோடிதான் மணிப்பூரில் கடந்த ஓராண்டாக கலவரம் நடந்து கொண்டிருக்கிறது. அங்கு பிரதமரான அவர் செல்லவில்லை. வடகிழக்கு மாநிலங்கள் பற்றி நாம் கண்டு கொள்வதில்லை; ஊடகம் பேசுவதில்லை; அரசியல் கட்சிகள் பேசுவதில்லை.

இந்தியாவின் தலைநகரான தில்லியில் 'கும்பல் கொலை' பற்றி பேசுகிறார்கள் என்றால் நிலமை நம் கண்முன்னே மாறிவிட்டது என்று தெரிந்துகொள்ளுங்கள்.

தேர்தலுக்கு பிறகு 'பிரதமர் கேர் நிதி' ஒரு பேசு பொருளாக மாறும். ஏனெனில் அதில் நடந்துள்ள செலவு பற்றி நமக்குத் தெரியாது. தீர்ப்புகள் எத்தகையதாக இருந்தாலும் 'நாங்கள் நீதிமன்றத்தை மதிக்கிறோம்' என்று சொல்லி தான் அரசியல் கட்சிகள் தீர்ப்பு பற்றி பேசுவார்கள். ஆனால் மோடி தேர்தல் பத்திர தீர்ப்பு பற்றி 'பின்னர் வருந்துவார்கள்' என்று கூறுகிறார். அப்படியானால் இவர் யாரை மிரட்டுகிறார். உச்சநீதிமன்ற நீதிபதிகளை மிரட்டுகிறார் என்றே நான் கருதுகிறேன்.

அடுத்த ஆண்டு 2025 ஆர்எஸ்எஸ் உருவான நூற்றாண்டு. இந்துத்துவ கொள்கை என்பது அவர்களுடைய நீண்டகால திட்டம். அவ்வளவு எளிதாக அவர்கள் ஓய மாட்டார்கள். இசுலாமிய வெறுப்பு, கூட்டாட்சி மீது ஒவ்வாமை போன்றவை அவர்கள் இரத்தத்தில் ஊறி இருக்கிறது. நெடிய போராட்டத்திற்குப் பிறகு உருவான இந்தியாவை காப்பாற்றுவது நமது கடமை. வாராணாசியில் நடந்த தேர்தலில் விவிபாட் ஒப்புகைச் சீட்டுகளை விட, பதிவான வாக்குகள் அதிகம் என்றனர். எனவே விழிப்போடு இருக்க வேண்டும் என்றார்.

ஜனநாயகம் என்பது வெற்று பம்மாத்தா..?

இந்து நாளிதழின் ராம்' நீதிமன்றங்கள் இப்போது நிர்வாக நீதிமன்றங்களாக மாறி விட்டன என்ற தனது கவலையைத் தெரிவித்தார். ஏஎஸ் பன்னீர் செல்வம் கேள்வி- பதில் அரங்கை நெறியாள்கை செய்தார்.

அறிஞர் அண்ணா, மெட்ராஸ் சிந்தனையாளர் மன்றம் என்ற அமைப்பின் வழியாக பல நிகழ்ச்சிகளை நடத்தி இருக்கிறார். எனவே அதன் நினைவாக சென்னை சிந்தனையாளர் மன்றத்தை நடத்தி வருகிறோம் என்றார் விஜயா தாயன்பன்.

பார்வையாளர்கள் நிறைந்த அவையில், உயிர்ப்போடும், மெல்லிய நகைச்சுவையோடும் பரக்கால பிரபாகர் ஜனநாயகத்தை, பன்மைத் துவத்தை, கூட்டாட்சியை காக்க வேண்டிய அவசியத்தை எளிய மொழியில் பேசினார்.

நன்றி - அறம்



# சோழர்-பாண்டியர் பேரரசுகளில் இசுலாமிய அதிகாரிகள்....

**பழ.நெடுமாறன்**

பிற்காலச் சோழர்கள் மற்றும் பிற்கால பாண்டியர்கள் ஆகியோரின் அரசுகளில் உயரதிகாரிகளாகவும், படைத் தளபதிகளாகவும் முகலிம்கள் பதவிகளை வகித்துள்ளார்கள் என்ற செய்தி பலருக்கு வியப்பை அளிக்கலாம். ஆனால் இவை வரலாற்றுப்பூர்வமான உண்மை என்பதைச் சோழர் - பாண்டியர் காலக் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் எடுத்துக் கூறுகின்றன.

தமிழ்நாட்டில் அரபு, பாரசீகம் ஆகிய மொழிக் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகளில் உள்ள புதுமை என்ன வென்றால் இவற்றுக்கு அருகிலேயே தமிழிலும் இக்கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இத்தமிழ்க் கல்வெட்டுகளில் தமிழ் ஆண்டு, மாதம். நாள் ஆகியவையும் தமிழ் எண்களுமே காணப்படுகின்றன.

பிற்காலச் சோழர்கள் ஆட்சியில் மிகுந்த புகழ்பெற்று விளங்கிய முதலாம் இராசராசன் காலத்தில் (985-1014 வடக்கே கிருஷ்ணா நதிக் கரையிலிருந்து தெற்கே இலங்கை வரை அவனுடைய பேரரசு விரிந்து பரந்திருந்தது.

இப்பேரரசின் வெற்றிப் பெருமிகத்தின் அறிகுறியாகவும் தமிழர் சிற்பக் கலையின் உயர் சிறப்பினை நிலை நிறுத்தும் வகையிலும் தஞ்சையில் அவன் எடுப்பித்த பெருவுடையார் கோயில் ஆயிரம் -ஆண்டுகளுக்குப் பின்னரும் இன்றும் மெருகு குறையாத வகையில் கம்பீரமாகக் காட்சியளிக்கிறது.

இக்கோயிலுக்கு அவனும் அவனுடைய குடும்பத்தினைச் சேர்ந்தவர்களும் ஏராளமான மானியங்களை வழங்கி உள்ளனர். இக்கோயிலின் நிர்வாகம் குறித்துப் பல கல்வெட்டுகள் இக்கோயிலிலேயே உள்ளன. இக்கோயிலில் திருமுறைகளை இசையுடன் பாடுபவர்கள் காந்தர்விகள் என்றும் இக்கோயிலில் நடனம் புரிபவர்கள் தளிச்சேரிப் பெண்டுகள் எனவும் அழைக்கப்பட்டனர். இவர்களை நாயகம் செய்யும் உயர் அலுவலராக இருந்தவர் “சோனகன் சாவூர் பரஞ்சோதி’ என்பவராவார்.


vaigarai velicham official

உயர் அதிகாரியாக இருந்து தனது கடமையைச் செய்ததோடு இவர் இக்கோயிலுக்கு விளக்குகள் எரிக்க நெய் வழங்கத் தேவையான 96 ஆடுகளை 32 பொற்காசுகள் கொடுத்து வாங்கி அளித்துள்ளார்.

இராசேந்திர சோழன் காலத்தில் (1012-1044) கங்கைகொண்ட சோழபுரத்தில் இவர் திருமந்திர ஓலை நாயகமாகவும் பெருந்தரத்து அதிகாரியாகவும் விளங்கியுள்ளார். இந்த இரண்டு பதவிகளும் மிகவும் பொறுப்பான பெரும் பதவிகள் ஆகும். இவருடைய சிறப்பான தொண்டினைப் பாராட்டும் வகையில் 'இராசேந்திர சோழ சுந்தர்வப் பேரரையன்" என்ற உயர் பட்டத்தைச் சோனகன் சாவூருக்கு இராசேந்திர சோழன் வழங்கி உள்ளான். இராசேந்திர சோழனின் எசாயம் செப்பேட்டில் இச்செய்தி பொறிக்கப்பட்டுள்ளது.

சோனகன் என்பது இசுலாமியரைக் குறிக்கும் சொல் என வரலாற்று அறிஞர்களான முனைவர் ஏ.சுப்பராயலு, சா.கிருஷ்ணமூர்த்தி, மா.சந்திரமூர்த்தி ஆகியோர் கூறியுள்ளனர். சோனகன் என்ற சொல்லுக்குத் தமிழ் அகராதிகள் துலுக்கர் எனப் பொருள் கூறுகின்றன. இராசராச சோழன் தஞ்சை பெருவுடையார் கோயிலுக்குக் கொடுத்த அணிகலன்களில் "சோனகச் சிடுக்கு என்பதும் ஒன்றாகும். திருச்செந்தூருக்குச் செல்லும் சாலையில் "சோனகன் விளை" என்ற ஊர் இன்றும் உள்ளது. அதைப்போலவே சோனகன் பேட்டை என்பதும் இசுலாமிய ஊராகும். கடலூர், தொண்டி, காயல்பட்டினம் போன்ற ஊர்களில் இசுலாமியப் பெருமக்கள் வாழும் தெருக்கள் "சோனகர் தெரு" என்று அழைக்கப்படுகின்றன.

ஆனைமங்கலச் செப்பேடு கடாரத்துமன்னன் மாற விசயோதுங்க வர்மன், சோழ நாட்டு நாகப்பட்டினத்தில் கட்டியசூளாமணி பௌத்த விகாரத்திற்கு இராசராசன் ஆனைமங்கலம் என்ற பேரூரைக் கொடையாக அளித்தான். இவன் மகன் இராசேந்திர சோழன் காலத்தில் அதற்குரிய செப்பேடு எழுதப்பட்டது. இந்த ஆனைமங்கலச் செப்பேடுகள் லெய்டன் நகர அருங்காட்சியகத்தில் உள்ளன. இந்தக் கொடைக்குப் பல உயர் அலுவலர்கள் சான்று கையெழுத்திட்டுள்ளனர்.

சத்திரிய சிகாமணி வளநாட்டுப் பட்டினக் கூற்றத்துப் பிரம்மதேயம் சன்னமங்கலத்துச் சபையோம் சொல்ல எழுதினேன். இவ்வூர்க் காணத்தான் மதியஸ் தன் துருக்கன் அகமுதனேன் இவை என் எழுத்து என்றும் இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து கொடுத்தோம். துருக்கர் என்பது இசுலாமியர்களை குறிக்கும் சொல். சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய கொங்கு நாட்டு அடியார்க்கு நல்லார் "யவன துருக்கர்" என்ற சொல்லைக் கையாளுகிறார்.

**அஞ்சு வண்ணத்தார்**

இலங்கையில் புகழ்பெற்ற தமிழ் எழுத்தாளரான எஸ்.பொன்னுதுரை (எஸ்.பொ. வரலாற்றில் வாழ்தல்" என்னும் தலைப்பில் எழுதியுள்ள தன் வரலாற்று நூலில் சோழர்கள் ஆட்சி உச்சம் பெற்றிருந்த காலத்தில் முசுலிம்கள் தமிழ்நாட்டில் வாழ்ந்தார்கள்" என்று மட்டுமல்ல, உயர் பதவிகளையும் வகித்தார்கள் என்பதற்கும் ஆதாரங்கள் உள்ளன என பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

சோழர் காலத்திலே முசுலிம்கள் அஞ்சு வண்ணத்தார் என அழைக்கப்பட்டனர். ஐந்து நேரத்தொழுகையில் ஈடுபட்டிருந்தபடியால் அவர்கள் அஞ்ச வண்ணத்தார் என அழைக்கப்பட்டார்கள்.

இதே பெயரில் வணிகக் குழு ஒன்றும் இயங்கியது. கடல்கடந்த நாடுகளில் இக்குழுவினர் வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர். முசுலிம்களை மட்டுமே கொண்ட வணிகக் குழுவாக இது இயங்கிற்று என்பதைச் சோழர் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

கேரள மாநிலத்திலும் தமிழ்நாட்டிலும் உள்ள பல கல்வெட்டுகளில் அஞ்சு வண்ணம் என்ற மிகப்பெரிய கடல் வணிகக்குழுவின் பெயர் காணப்படுகிறது. கி.பி. 9ஆம் நூற்றாண்டிலிருந்து கிடைக்கும் இவ்வணிகக் குழுவின் பெயர் பற்றி வி.வெங்கையா, டி.ஏ.கோபிநாதராவ் பி.சி. சர்க்கார், பி.பி. மகாலிங்கம். கே.வி. ரமேஷ். எ.சுப்பராயலு ஆகிய பல வரலாற்று அறிஞர்கள் மிக விரிவாக ஆய்வு செய்து கருத்துகளை வெளியிட்டுள்ளனர்.

அஞ்சு வண்ணம் வணிகக் குழு குறித்த கல்வெட்டடில் அலி. முகமது. உமர் என்ற

சொற்கள் காணப்படுகின்றன. எனவே, அஞ்சு வண்ணம் என்பது இலாமிய கடல் வணிகக் குழுவே ஆகும் என்பது அறிஞர்களின் முடிவாகும்".

சோழர் படையில் அகமது என்பவன் பல வீரர்களுக்கு தலைவான இருந்தான் என்று கல்வெட்டுச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது எனவும் அவர் குறித்துள்ளார்.

"கேரளம் என்ற சொல்லும் மலையாளம் என்ற மொழியும் பிறப்பதற்கு முன்னால் இருந்த சேர நாட்டைச் சேர்ந்த முசுலிம்கள் இலங்கையில் கிழக்கு மாநிலப் பகுதியான மட்டகளப்பில் குடியேறியிருக்கிறார்கள். மட்டக்களப்பு வாழ் முகலிம் பிறப்புக்கள், சடங்கு முறைகள், உணவு வகைகள் ஆகிய கேரள நாட்டுடன் தொடர்புடை வரையிலும் இருந்து வருகின்றன. மேலும் காயல்பட்டினம், கீழக்கரை ஆகிய ஊர்களிலிருந்து இங்குக் குடியேறியுள்ளனர். அவர்களின் வழிவந்தவர்களே இன்று மட்டக்களப்பில் வாழ்கின்றனர் என உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

**பாண்டியர்கள்**

பிற்காலப் பாண்டியர்கள் காலத்தில் வெளியிடப்பட்ட கல்வெட்டுகளில் முசுலிம்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. மாறவர்மன் குலசேகர பாண்டியன் (1314- 1362) காலக் கல்வெட்டு அவனது 16வது ஆட்சி ஆண்டில் சுல்தான், உய்ய வந்தான், திருவனந்தன் ஆகியோர் கொடுத்த கொடை குறிக்கப்பட்டுள்ளது. இரட்டைக்குளம் பள்ளிவாசல் கல்வெட்டு மேற்கண்ட செய்தியைத் தெரிவிக்கிறது.

மாறவர்மன் வீரபாண்டியன் காலக் கல்வெட்டு (1334-1367) பவித்திர மாணிக்க பட்டினமான காகித்றூர் நாடாள்வான். கருப்புடையார் சோகைப்பள்ளிக்கு கொடையாகச் சோனக வியாபாரிகள் தலைவனுக்குக் கொடுத்த ஆணையைக் கூறுகிறது.

இரு போகத்திற்கும் நன்செய், புன்செய் விளைவில் அவ்வூரார் கொடுக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. இப்பள்ளிக்கு மானியமாக விடப்பட்ட நிலங்களுக்கு இதுவரை உள்ள வரிகளும் இனி பிரிக்கப்படும் வரிகளும் இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

அரிகேசரி பராக்கிரம பாண்டியன் காலக்கல் வெட்டு கி.பி. (1422-1463) துருக்க நயினா பள்ளியில் சிறந்த முறையில் விழாக்கள் நடத்த தென்காயல் மக்கள் எல்லோரும் மகிழ, தொழுகை நடத்த அர்த்த மண்டபம், இடைநாழி, பெருமண்டபம், தண்ணீர்க் குளம் அமைத்து ஏற்றத் திருப்பணிகளும் செய்யப்பட்டன. இவை அனைத்தும் இப்பாண்டியனின் 25ஆம் ஆண்டில் நடைபெற்றன எனக் கூறுகிறது.

தென்வாலி நாட்டு பொருநையாறு பாயும் பகுதியில் வடபுறம் உமரிக்காட்டு எல்லைக்கு உட்பட்ட மாத்தூர் இப்பள்ளிக்குக் கொடையாகக் கொடுக்கப்பட்டது. எல்லா வருவாயும் பள்ளிவாசலுக்கு அளிக்க அரசன் ஓலை கொடுத்தான்.

இக்கொடை நிலங்களுக்கு வரிகளும் நீக்கப்பட்டன. இவ்வோலைக் கல்வெட்டாக வெட்டப்பட்டு செப்பேடும் பொறிக்கப்பட்டது.

பிற்காலச் சோழர்களும், பிற்காலப் பாண்டியர்களும் தங்களது ஆட்சிக் காலத்தில் சமயப் பொறை யைக் கடைப்பிடித்தார்கள் என்பதை இசுலாமிய வழிபாட்டுத் தலங்களுக்கு அவர்கள் அளித்த மானியங்களும், சைவக் கோயில்களுக்கு இசுலாமியர் கொடைகளும் அளித்துப் போற்றினார்கள் என்பதை மேலே கண்ட சான்றுகள் நமக்குத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

மேலும், அரசு உயரதிகாரிகளாகவும், படைத் தளபதிகளாகவும், இசுலாமியர் விளங்கினார்கள் என்பதும் வரலாற்றுப்பூர்வமான உண்மைகளாகும். சோழ பாண்டிய நாடுகளில் சமய நல்லிணக்கம் போற்றி வளர்க்கப்பட்டது என்பதை மேலே குறிப்பிடப்பட்டுள்ள கல்வெட்டுச் சான்றுகள் எடுத்து நிறுவுகின்றன.

**அடிக்குறிப்பு**

1. தமிழக இசுலாமிய வரலாற்று ஆவணங்கள் - புலவர் செ.இராசு -பக்கம்-56.

2. தமிழக இசுலாமிய வரலாற்று ஆவணங்கள் - புலவர் செ. இராசு - பக்கம்-57

3. வரலாற்றில் வாழ்தல் - எஸ். பொன்னு துரை -பக்கம் 1262-1263

4. தமிழக இசுலாமிய வரலாற்று ஆவணங்கள் - புலவர் செ. இராசு -பக்கம்-110-113

- நன்றி தினமணி ஈகைத்திருநாள் மலர்-2024

கூரியூர்

# ஜின்னா ஷஹீத் இறுதி நாட்கள்....



அன்பான வாசகர்களே!

இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைத்து அவர்களை ஜாதிய அடக்குமுறையிலிருந்து நிரந்தரமாக விடுவித்தார் என்ற ஒரே காரணத்திற்காக இந்து முன்னணியினரால் கொலை செய்யப்படட்டார்கள் ஷஹீத் கூரியூர் ஜின்னா அவர்கள்.

அவர்களுடைய வாழ்க்கை சொல்வழக்கை மட்டுமே உலாவந்தது. அது வழக்கிழந்து போவதற்கு முன்னால் அதை ஆவணப் படுத்தினோம். அவருடைய இறுதி நாட்கள் நெஞ்சைத் தொடுபவை. அதன் ஒரு பகுதியை சென்ற இதழில் தந்தோம்!

இந்த இதழில் அதன் அறுதி பகுதியை தந்துள்ளோம். அந்த வீரமகனின், அவரது மகளின் அறுதி நாள்கள் அனந்தமாகவே அமைந்தது. அந்த நெஞ்சைத் தொடும் பகுதிகளைப் படியுங்கள்...

ஏப்ரல் மாத தொடர்ச்சி...

## கொலைவெறி

கூரியூர் முஹம்மத் அலீ ஜின்னா அவர்கள் தன் மீது தொடுக்கப்பட்ட வழக்குகளைப் பற்றிக் கவலை கொண்டு சாய்ந்திடாமல், ஓய்ந்திடாமல் தனது இஸ்லாமியப் பிரச்சாரப் பயணத்தைத் தொடர்ந்தார்கள். நரக நெருப்பிலிருந்து விடுபட்டிட விரும்புகின்றவர்களுக்கெல்லாம் இஸ்லாமே தீர்வு எனப் பிரகடனப்படுத்தி னார்கள். தலித்களைத் தாண்டியும் அவர்களு டைய பிரச்சாரப் பயணம் தொடர்ந்தது.

இந்த சத்திய இஸ்லாத்தை எடுத்துச் சொல்லிட எத்துணை தூரங்கள் பயணம் செய்திட வேண்டும் என்றாலும் அந்த நெடும் பயணத்தை மேற்கொள்ள சற்றும் தயங்குவதில்லை அந்தத் தள்ளாத வயதிலும்,

ஆனால் இஸ்லாத்தின் எதிரிகள் கூரியூர் முஹம்மத் அலீ ஜின்னா அவர்களைத் தடுத்தே ஆக வேண்டும் என்ற நிலைக்கு வந்து விட்டார்கள். தாங்கள் ஆண்டாண்டு காலமாக கட்டிக் காத்துவரும் ஜாதிய அடக்குமுறை தகர்ந்து போய்விடும் எனக் கருதினார்கள். தாங்கள் மேற்கொண்ட சதிகள், சூழ்ச்சிகள், எடுபடாமல் போனதால் மிரட்டல் கடிதங் களை எழுதினார்கள். நிறுத்தாவிட்டால், உன் வாழ்க்கையை முடித்து விடுவோம்" என்று பகிரங்கமாகவே கடிதங்களை எழுதினார்கள் மொட்டை கடிதங்கள் தாம், என்றாலும் மிரட் டலும் உருட்டலும் பலமாகவே இருந்தன.

இதுபோன்ற உருட்டல்களையும் மிரட்டல் களையும் சற்றும் சட்டை செய்யவில்லை. முஹம்மத் அலீ ஜின்னா அவர்கள், இஸ்லா மியப் பிரச்சாரம் என்பது மக்களை இருட்டி லிருந்து வெளிச்சத்திற்கு கொண்டு வருவது என்பதாகும். இருட்டிலே உழன்று கொண்டிருப் பவர்கள் மிகக் குறைவாகவே சிந்திப்பார்கள். அவர்கள் சிந்தனை குருட்டுத் தனமாகவே இருக்கும் என்பதல்ல முரட்டுத் தனமாகவும் இருக்கும். ஆனால் அல்லாஹ்வை உறுதியாக நம்பிக்கைக் கொண்டு மறுமை என்ற இறுதி நாளின் வெற்றியில் நம்பிக்கைக் கொண்ட வர்கள் எதிர்வரும் எதிர்ப்புக்களையும், மிரட்டல் களையும் கண்டு சற்றும் அச்சப்படமாட்டார்கள்.

எங்களிடம் அல்லாஹ் எதிர்பார்ப்பதெல்லாம், அவன் வழியில் நாங்கள் எங்கள் உயிரைத் தந்திட வேண்டும். அதன்மூலம் அல்லாஹ்வின், திருப்தியையும், மகிழ்ச்சியையும் பெற்றவர் களாக, சுவர்க்கத்தில் புகுத்திட வேண்டும் என்பதே! மறுமை என்ற மரணத்திற்குப் பின்னால் வரும் வாழ்க்கை நிரந்தர வாழ்க்கை. நித்திய வாழ்க்கை! அந்த வாழ்க்கையை இந்த உலக வாழ்க்கையோடு ஒப்பிடும் போது இந்த உலக வாழ்க்கை கனப் பொழுதே நீடித்திடும் வாழ்க்கை!

இவையெல்லாம் திருக்குர்ஆனிலிருந்தும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை யிலிருந்தும் பெற்ற பயனுள்ள படிப்பினைகள். அந்தப் படிப்பினைகளிலேயே நிரந்தரமாக நின்றவர். உழைத்தவர், முஹம்மத் அலீ ஜின்னா அவர்கள்.

தான் கற்றப்பாடத்தை தனது மழலை களுக்கும் கற்றுத் தந்தவர். ஆமாம்! தினமும் காலையில் தன் குடும்பத்தார் அனைவரையும், மனைவியையும் குழந்தைகளையும், ஒன்றாக அமர வைத்து, திருக்குர்ஆன் வகுப்புக்களையும், நபிமொழி வகுப்புக்களையும் நடத்துவது முஹம்மத் அலீ ஜின்னா அவர்களின் அன்றாட பழக்கம். தினமும் வைகறை தொழுகைக்குப் பின், அவர்கள், நிறைவேற்றும் முதல் கடமை இது! இதை கடைசி வரைப் பின்பற்றி வந்தார்கள். இஸ்லாத்தில் நாங்கள் இறுகப் பிணைந்திட இந்த வகுப்புகள் பெரிதும் உதவின என நினைவு கூருகின்றார்கள் அவருடைய தலைமுறையினர்.

முஹம்மத் அலீ ஜின்னா அவர்கள். கிராமம் கிராமமாகச் சென்று பிரச்சாரம் செய்கின் றார்கள். ஒன்றல்ல இரண்டல்ல, பல கிராமங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டன என்ற செய்தி காட்டுத் தீபோல் பரவிற்று. எல்லா வட்டாரங் களிலும் இஸ்லாமே பேசும் பொருள் என்றானது.

இந்த தீ இந்துத்துவவாதிகளின் வயிற்றைப் பற்றிப் பிடித்தது. ஏதோ தலித் பெருங்குடி மக்களின் விடுதலை எனத் தொடங்கிய முஹம்மத் அலீ ஜின்னா அவர்கள், மனித இனத்தின் விடுதலைக்கே இஸ்லாம் தான், என ஆர்ப்பரிக் கின்றார். அனைவரையும் இஸ்லாத்தில் இணைக் கின்றார் என்ற செய்திகளை அவர்களால் அதாவது இந்த நாட்டை கொலைக்களமாக ஆக்கிடத் துணிந்த இந்துத்துவவாதிகளால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை.

முஹம்மது அலீ ஜின்னா அவர்களைக் கொலை செய்திட சதித்திட்டங்களைத் தீட்டினார்கள். அதற்காகவே மதமாற்ற எதிர்ப்பு மாநாடு என்றொன்றைக் கூட்டினார்கள்.

இந்த மாநாட்டை 1995 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் இராமேஸ்வரத்தில் நடத்தினார்கள். அதில் பகிரங்கமாகவே கூரியூர் முஹம்மத் அலீ ஜின்னா அவர்களின் பெயரைக் குறிப்பிட்டு பேசினார்கள். இந்த மாநாட்டிற்கு பிரபல திரைப்பட வில்லன் நடிகர் M.N.நம்பியார் தலைமைத் தாங்கினார்.

இவர்களைத் தடுத்தாக வேண்டும் எனக் கொலை வெறியூட்டும் பேச்சுக்கள் அனல் பறந்தன. காவல்துறைக் கண்டு கொள்ளவே இல்லை. காவல்துறைக்கும் உடன்பாடு என்பது போல்தான் காவல்துறையின் நடவடிக்கைகள் இருந்தன.

இதனால் ஊட்டம் பெற்ற இந்துத்துவ வாதிகள் தங்கள் கொலை படலத்தை மடை திறந்தார்கள்.

முஹம்மத் அலீ ஜின்னா அவர்களைக் கொலை செய்திட திட்டமிட்டார்கள்.

நான்கு பேர் கொண்ட இரண்டு அணிகளைத் தாயார் செய்தார்கள். இவர்கள், கூரியூர் ஜின்னா சாஹிப் அவர்களின் நடமாட்டங்களைக் கண்காணிக்கத் தொடங்கினார்கள். ஏதோ நடக்கப் போகின்றது என்பதை உணர்ந்தார்கள் ஜின்னா ஷாஹிப் அவர்கள். காவல்துறையில் இருந்த பழைய நண்பர்கள் சிலர் ஜின்னா ஷாஹிப் அவர்களை எச்சரித்தார்கள். இதனை ஜின்னா ஷாஹிப் அவர்களும், புரிந்தார்கள். இதனால் தான் கீழக்கரை அல்ஹாஜ் பி.எஸ். அப்துல் ரஹ்மான் அவர்களிடம் தான் கடனாக வாங்கி இருந்த ரூபாய் 50,000-ஐ தந்திட தேவையான பணத்தை மூத்த மகள் டாக்டர் நசீரா பர்வின் அவர்களிடம் கொடுத்து வைக்கத் தொடங்கினார். ஏனெனில் ஷஹீதுடைய எல்லாப் பாவங்களும் மன்னிக்கப்படும், கடனைத் தவிர என்பதை ஜின்னா ஷாஹிப் அவர்கள் நன்றாக அறிந்து வைத்திருந்தார்கள்.

தினமும் “அகில் கிடங்குத் தெரு” வழியாகத் தான், அக்ரஹாரம் மத்திய தெருவுக்கு

வருவார்கள், கூரியூர் ஜின்னா சாஹிப் அவர்கள். அகில் கிடங்கு தெரு வழியாக வந்து ஜின்னா பாயின் வீட்டுக்குச் சென்றிட இரண்டு வழிகள் இருந்தன. எந்த வழியாக வந்தாலும் கொலை செய்திட வேண்டும் என அந்த இரண்டு அணிகளும் தயாராயின.

சங்கப் பரிவாரத்தினர் எப்போதும் அந்தி சாய்ந்த பின்னர் தான் கொலைகளைச் செய்வார்கள். அதுவும் மின்சாரம் விநியோக மாகும் கம்பிகளை, ஒன்றாய்ப் பிணைந்து மொத்த இடத்தையும் இருட்டாக்கி விடுவார்கள். இதனால்தான் அவர்கள் "கண்ட சாட்சியம்" என்றொன்றில்லை என ஆக்கிவிடுவார்கள்.

இப்படித்தான் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும், பல முஸ்லிம்களைக் கொலை செய்திருக்கின்றார்கள். இவற்றையெல்லாம். தாம் நிறுவி, நடத்தி வந்த விடியல் வெள்ளி மாத இதழிலும், இப்போது நடத்திக் கொண்டிருக்கும் வைகறை வெளிச்சம், மாத இதழிலும் விரிவாகக் குறிப்பிட்டிருக்கின்றோம்.

ஏன் மும்பையில் நீதியும், நேர்மையுமிக்கக் காவல்துறை இப்படித்தான் அதிகாரி ஹேமந்த் கர்கரேயையும் கொலை செய்தார்கள். மும்பை யின் "ரெங் பசுவன் லேன் (வீதி)" விளக்குகளை அணைத்துவிட்டுக் கொலை செய்தார்கள்.

அதுபோலவே தங்களுடைய சதியை இங்கேயும் பின்னி இருந்தார்கள். 1995ஆம் ஆண்டு ஏப்பிரல் 20ஆம் நாள் அன்று முஹம்மத் அலீ ஜின்னா அவர்கள் தூர தொலைவிலுள்ள கிராமங்களில் இஸ்லாமியப் பிரச்சாரப் பயணத்தை முடித்துவிட்டு இராமநாதபுரம் வந்தார்கள்.

(Bus Stop) பேருந்து நிறுத்தத்தில் விட்டுச் சென்றிருந்த, (TVS 50) இரண்டு சக்கர வாக னத்தை எடுத்துக் கொண்டு தன் வீடு இருந்த அக்ரகாரம் நோக்கிப் பயணமானார்கள். உளவுத் துறையினர் பின் தொடருவதைப் போல், சிலர் தன்னைப் பின் தொடர்ந்தார்கள் தொடர்வதை யும் உணர்ந்தார்கள். ஆனால் அதைப் பொருட் படுத்தவில்லை.

சுமார் 8.00 மணிக்கு, இரவு தொழுகைக் குரிய நேரம் வந்தது. தொழுகை அழைப்பு (பாங்கும்) கேட்டது. அப்போது அவர்கள் அகில் கிடங்கு தெருவிலுள்ள காதர் பள்ளிவாசலில் இறங்கினார்கள். இஷா தொழுகையை தொழு தார்கள். சுன்னத் தொழுகையையும் நிறைவேற்றி னார்கள். 8.50 மணிக்கு பள்ளிவாசலை விட்டு வெளியேறினார்கள். மீண்டும். தனது இரு சக்கர வாகனத்தில் ஏறி பயணமானார்கள் தன் வீட்டுக்குத் திரும்பும் சந்திப்பில் வைத்து சிலர் 'பாய் சலாம்' எனக் கூறினார்கள். அவர்களைக் கூர்ந்து கவனித்தார்கள். அதற்குள் விளக்குகள் அணைந்தன. நொடிப் பொழுதில் முன்பக்கம் இருந்தும் பின்பக்கமிருந்தும் சரமாரியாக வெட் டுகள் வீழ்ந்தன. அல்லாஹு அக்பர், அல்லாஹ் அக்பர் என்று கூறிக் கொண்டே தன் மீது வீழ்ந்த வெட்டுகளை தடுத்தார்கள். ஆனால் நாலா பக்கங்களிலுமிருந்து கோடாறி வெட்டுகள் வீழ்ந்து கொண்டே இருந்தன.

வைரம் பாய்ந்த உடல் வளத்தைப் பெற்ற ஜின்னா பாய் நிலத்தில் சாய்ந்தார்கள்!

செத்தே வீழ்ந்துவிட்டார் என எண்ணிக் கொண்ட, கொலைகாரர்கள், தங்களை ஏற்றிச் சென்றிட தயாராக இருந்த வாகனங்களில் லாவகமாக ஏறிச் சென்று விட்டார்கள்.

ஜின்னா சாஹிப்-இன் உயிர் இன்னமும் பிரியவில்லை. இரத்தம் வழிந்துகொண்டே இருந்தது. எனினும் ஒரு விதமாக சூதாரித்துக் கொண்டு தன் இருசக்கர வண்டியை ஓட்டிக் கொண்டே வீடு வரை வந்து விட்டார்கள்.

வீட்டின் கதவுகளைத் தட்டியபடியே படியில் சாய்ந்தார்கள். வீட்டிலிருந்தவர்கள் வீட்டின் கதவைத் திறந்த போது அவர்களுக்குப் பெரியதோர் அதிர்ச்சி காத்திருந்தது. ஆமாம், இரத்த வெள்ளத்தில் முஹம்மத் அலீ ஜின்னா அவர்கள் வீழ்ந்து கிடந்தார்கள்.

அள்ளிச் சுருட்டிக் கொண்டு பக்கத்திலுள்ள பயோனியர் தனியார் மருத்துவமனைக்கு ஓடினார்கள். தனியார் மருத்துவமனையினர் எங்களால் முடியாது அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லுங்கள் என்றார்கள் பதற்றத் துடன்.

அங்கே அவசர, அவசரமாக, இங்கும் அங்குமாக மருத்துவர்கள் ஓடினார்கள். ஆனால் ஓர் எழுதப்படாத விதியாக, அவரது உடலிலிருந்து வழிந்த இரத்தத்தை நிறுத்தவோ வேறு இரத்தத்தை ஏற்றவோ எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. - சதி மிகவும் விசால

மாகவே விரிக்கப்பட்டிருந்தது.

ஜின்னா பாய் அவர்களின் தலைமகள் நசீரா ஃபர்வீன் கூடவே இருந்தார். அவர் மடியில் தலை வைத்தவராக மகளுக்கும் மகன்களுக்கும் உபதேசங்களை வழங்கிக் கொண்டே இருந்தார்கள்.

மதுரை பொது மருத்துவமனைக்கு மாற்று வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதுவரைத் தாங்காது எனக் கூறி விட்டார்கள் மருத்துவர்கள். அதனால் அந்த முயற்சியைக் கைவிட்டார்கள்.

வேதனையால் உடல் துடித்தது. ஆனாலும் நாவு ஷஹாதத் கலிமாவை (அல்லாஹ் ஒருவனே இறைவன் முஹம்மத் அவனது தூதர் என சாட்சியம் கூறுகின்றேன்) எனக் கூறிக் கொண்டே இருந்தது. மருத்துவமனையின் போக்கு முஹம்மத் அலீ ஜின்னாவின் உயிர் பிரியும் வரைப் போக்குக் காட்டிக் கொண்டே இருக்க வேண்டும் என்பது போலவே அமைந்தது.

### அல்லாஹ்விடம் அழகிய பயணம், கடைசி வரை நேர்மை!

கடைசிநேர விருந்தாளிகள், காவல் துறையினர் வந்தார்கள். ஜின்னா பாயிடம் "உங்களை வெட்டியது யார்" எனக் கேட்டார்கள் "20 வயதிலிருந்து 25 வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள் நாலுபேர்" என்றார்கள் ஜின்னா பாய் "அவர்களின் பெயர் தெரியுமா" என்றார்கள் தெரியாது என்றார்கள் ஜின்னா சாஹிப்.

ஏதாவது நாலுபேரின் பெயரைச் சொல்லுங்கள் என்றார்கள். முடியாது. அப்பாவிகள் மீது பழிபோட நான் தயாராக இல்லை என்றார்கள்.

மரணத்தின் மடியிலும் தன் நேர்மையிலிருந்து நழுவவில்லை. ஜின்னா சாஹிப் அவர்கள் இந்நிலையில் அவர்களது உடல் நிலையில் நிமிடத்தில் ஒரு மாற்றம்! ஆம் கலிமா ஷஹாதத் (அல்லாஹ் ஒருவன், முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனது திருத்தூதர் என்று) மொழிந்து கொண்டே இருந்தார்கள், இந்த நிலையிலும் கலிமாவை ஒத முடியும் என்பதை நான் ஜின்னாபாயிடம் கற்றேன் என்கின்றார் அவரின் அருகிலிருந்த நண்பர் முஜிபுர் ரஹ்மான். சற்று நேரத்தில் இன்னொரு மாற்றம். வேதனையை விஞ்சி ஒரு புன்சிரிப்பு. ஆமாம்! ஷஹீதுகளுக்குச் சொல்லப்படும் நற்செய்தியின் வெளிப்பாடே அந்த முகமலர்ச்சி. இந்த முக மலர்ச்சியுடன் அவர்கள் இரவு 12.15 மணிக்கு அல்லாஹ்வை சென்றடைந்தார்கள் அல்லாஹ்வின் அழகிய விருந்தாளியானார்கள். இறைவனிடமிருந்தே வந்தோம். அவனிடமே மீளுவோம். இவர்களைப் பற்றித் தான் இறைமறை இப்படிக் கூறுகின்றது.

"அல்லாஹ்வை நம்பிக்கை கொண்டவர்களில் சிலர் இருக்கின்றார்கள். அவர்கள் அல்லாஹ்விடம் செய்த வாக்குறுதியை உண்மையாக்கி வைத்தார்கள். அவர்களில் சிலர் ஷஹாதத் என்னும் (இஸ்லாமிய இலட்சியப் பாதையில் வீரமரணம்) தங்கள் இலட்சியைத்தை அடைந்துவிட்டார்கள். வேறுசிலர் அதனை எதிர்பார்த்தே இருக்கின்றனர். என்ன நேரிடினும் தங்கள் வாக்குறுதியிலிருந்து அவர்கள் ஒரு சிறிதும், மாறுபட்டு விடவில்லை"

(அல்குர் ஆன் : 33: 23)

அதன்பின் அல்லாஹ் இப்படிப் பிரகடனப் படுத்துகின்றான். "அன்றி அல்லாஹ்வுடைய பாதையில் கொல்லப்பட்டவர்களை இறந்தவர்கள் எனக் கூறாதீர்கள். (அவ்வாறன்று) அவர்கள் உயிரோடிருக்கின்றார்கள். ஆனால் இதனை நீங்கள் உணர்ந்துகொள்ள மாட்டீர்கள்."

(அல்குர்ஆன். 2:154)

### அழகிய நல்லடைக்கம்

கூரியூர் ஜின்னா சாஹிப் அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள் என்ற செய்தி தமிழக முஸ்லிம்களை ஓர் உலுக்கு உலுக்கி விட்டது. இராமநாதபுரம் மக்கள் குறிப்பாக அமுக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரும் அதிர்ச்சி வயப்பட்டார்கள்.

கண்ணீரோடு ஆனால் கட்டுப்பாட்டோடு அவர்களுடைய ஜனாசாவின் நல்லடக்கத்திற்காக விரைந்தார்கள்.

ஆமாம் மொத்த தமிழகமும் அங்கே திரண்டது. மக்கள் கண்ணீர் வெள்ளத்தின் துஆக்கள், பிரார்த்தனைகள் இவற்றினூடே கூரியூர் முஹம்மத் அலீ ஜின்னா ஷஹீத்-இன் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

### ஓடினாள் மகள் தந்தையின் கடன் அடைக்க

கீழக்கரையைச் சார்ந்த பன்முக சாதனையாளர். ஹாஜி B.S. அப்துல் ரஹ்மான் அவர்கள் கூரியூர் ஜின்னா சாஹிப் அவர்களுக்கும்

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கும் அவசர காலத்தில் உதவி செய்து வந்தார்கள். இவர்களிடம், கூரியூர் முஹம்மத் அலீ ஜின்னா சாஹிப் அவர்கள் ரூபாய் 50,000 கடன் வாங்கி இருந்தார்கள்.

குறிப்பாக அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டவர்களின் அல்லது அல்லாஹ்வின் பாதையில் போரிட்டுக் கொல்லப்பட்டவர்களின் எல்லா பாவங்களுக்கும் மன்னிக்கப்படும் கடன் ஒன்றைத் தவிர, என்பது அல்லாஹ்வின் விதி.

ஷஹீதான ஒரு முஸ்லிமின் மீது கடன் இருக்கக் கூடாது என்பதால் அவருடைய தலைமகள், டாக்டர் நசீரா பர்வின் அவர்கள் ரூபாய் 50,000 ஐ எடுத்துக் கொண்டு ஓடோடி வந்தார். B.S. அப்துல் ரஹ்மான் அவர்களிடம் "அத்தா ஷஹீதாகி விட்டார்கள். அத்தா வாங்கிய பணத்தைக் கொண்டு வந்திருக்கின்றேன் வாப்பா!" எனக் கூறி பணத்தைத் தந்தார்.


B.S. ரஹ்மான் அவர்களை வாப்பா என அழைப்பது தான் வழக்கம்.

இதற்கு B.S. அப்துல் ரஹ்மான் அவர்கள்,

"நான் பணத்தை ஜின்னா சாஹிப் அவர்களிடம் தந்திடும்போது, கடன் எனச் சொல்லி தரவில்லை. ஆகவே பணத்தை நீயே வைத்துக் கொள்" என்றார்கள். ஆனால், "அத்தா' கடன் எனச் சொன்னதை நான் தந்தே ஆக வேண்டும்" என்றார் தலைமகள் டாக்டர் நசீரா பர்வீன் அவர்கள்.

மகள் தந்தை மீது காட்டும் பரிவைப் பார்த்து இனிமேல் வாதிப்பதில் அர்த்தமில்லை என எண்ணிய B.S.A. அவர்கள் பணத்தை வாங்கிக் கொண்டார்கள். கடன் தீர்ந்தது என்றார்கள். சற்றே முகம் மலர்ந்தாள் மகள்.

உடனேயே அந்தப் பணத்தைத் திரும்பத் தந்தார்கள். B.S.அப்துல் ரஹ்மான் அவர்கள். இன்னும் கொஞ்சம் பணம் சேர்த்துத் தருகின்றேன், ஓர் அறக்கட்டளையைத் தொடங்கி, அத்தா செய்த பணிகளைத் தொடருங்கள் - என்றார்கள்.




எல்லாவற்றையும் பின்னால் பெற்றுக் கொள்கின்றேன் எனக் கூறிவிட்டு வந்துவிட்டார் தலைமகள், டாக்டர் நசீரா பர்வின்

கூரியூரை மையமாகக் கொண்டு நடந்த மாற்றங்களை தடுக்கும் நடவடிக்கைகளுள் ஒன்றாக மதம் மாறியவர்கள் செய்து கொண்டிருந்த வேலைகள் அதாவது இஸ்லாத்திற்கு வந்தவர்கள் செய்து கொண்டிருந்த அரசு வேலைகள் பிடுங்கப்பட்டன. அப்போதெல்லாம் அவர்களுக்கு உறுதுணையாக, பி.எஸ். அப்துர் ரஹ்மான், ஷாஹுல் ஹமீது ஹாஜியார் போன்றவர்கள் உடனிருந்திருக்கின்றார்கள். வேலை தந்திடுவதில் முன்னணியில் நின்றிருக்கின்றார்கள்.

அதேபோல் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கு இடற்வரும் போதெல்லாம். கீழக்கரை ஹாஹுல் ஹமீத் ஹாஜியார் அவர்கள் ஓடோடி வந்து உதவி செய்திருக்கின்றார்கள்.

இந்த இரு தனவந்தர்களையும் அந்த மக்கள் நன்றியோடு நினைவு கூருகின்றார்கள்.

எந்த அளவுக்கென்றால், கூரியூரில் ஷாஹுல் ஹமீது ஹாஜியார் அவர்கள் ஓர் பள்ளிவாசலைக் கட்டித் தந்திருக்கின்றார்கள். இதை முன்னரே குறிப்பிட்டோம்.

அதன் தோரண நுழைவாயிலை ஷஹீத் ஜின்னாவின் மகன் தன் செலவில் எடுத்துக்கட்டி அதற்கு "ஷாஹுல் ஹமீது ஹாஜியார் முகப்பு" என்று பெயரிட்டிருக்கிறார். தங்களது நன்றியுணர்வை இப்படி வெளிப் படுத்தி இருக்கின்றார்கள்.

**இப்போது அக்ரகாரத்தில் கூரியூர் ஜின்னா ஷஹித் மஸ்ஜித் ஒன்று கம்பீரமாக நிற்கின்றது. அதனை அவர்களது இளவல்கள் பராமரித்து வருகின்றார்கள். நாமும் அதில் தொழுதோம்.**

- MGM



# 10, +2க்கு பிறகு என்ன படிக்கலாம்?

**இந்த** வருடம் 2024-ன் மே மாதத்தின் முதல் இரண்டு வாரத்தில் தமிழ்நாட்டு பள்ளிக் கல்வித்துறையின் பாடத் திட்டத்தில் பயிற்று விக்கப்படும் கல்வி முறையில் 10 மற்றும் 12ஆம் வகுப்புக்கான தேர்வு முடிவுகள் வெளியிடப் பட்டது. மிகச் சிலரைத் தவிர அநேகர் தேர்ச்சி பெற்றுள்ளது மகிழ்ச்சியை தந்துள்ளது. தவறிய சிலருக்கான தேர்வு மிக விரைவில் நடத்தப்படும் வேளையில், அதில் கலந்துகொள்ளும் அனைவரும் தேர்ச்சி பெற நாம் அனைவரும் அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம். நான் பிரார்த்திக்கிறேன்.

+2 மாணவ, மாணவிகள், இதற்கு பிறகு எந்தத் துறையில் என்ன படிப்பை படிக்கலாம் என்று சிந்தித்து வரும் வேளையில் இக்கட்டுரை பயன்தரும் என கருதி எழுதுகிறோம். இங்கு குறிப்பிடயிருக்கும் படிப்புகளில் ஒருசில தவிர மற்ற அனைத்தும் காலத்தால், காலத்தின் தேவையால் அவசியப்படும் படிப்புகள் ஆகும். ஆதலால் இந்தக் கட்டுரையை வருடா வருடம் கவனத்தில் கொள்வது அவசியம்.

பொதுவாக +2 மாவண, மாணவிகளுக்கு டாக்டர், இஞ்ஜினியர், வழக்கறிஞர் மற்றும் கம்ப்யூட்டர் ஆகிய துறை படிப்புகளில் ஈர்ப்பு இருக்கும்.

இதில் டாக்டர் படிப்பிற்கு Neet தேர்வு கட்டாயம் என்பதால், இதை இலக்காகக் கொண்டு கற்கும் மாணவிகள் +1 முதலே தனி பாதையில் பயணிப்பர்.

இன்ஜினியராக விரும்புபவர்கள், தமிழக அரசின் கலந்தாய்வில் கலந்துகொண்டு தங்களுக்கு விருப்பமான துறையை விரும்பிய கல்லூரியில் தேர்ந்தெடுப்பர். இதில் எது ஒன்றைத் தேர்ந்தெடுத்தாலும், மாணவர்கள் தங்கள் முதலாம் ஆண்டிலிருந்தே தாங்கள் தேர்ந்தெடுத்த துறைசார்ந்த தொழில்நுட்ப அனுபவங்களை அல்லது பொதுவான தொழில் சார்ந்த அனுபவங்களை கற்றுக்கொள்ள ஆர்வமும், நேரமும் ஒதுக்க வேண்டும்.

அதாவது, கல்லூரி முடித்து வீடு திரும்பும் நேரத்திலும், விடுமுறை நாட்களிலும் ஏதேனும் ஒரு ஸ்தாபனத்தில் அல்லது கடையில் பகுதிநேர ஊழியராக சேர்ந்து உழைக்க வேண்டும். இதற்கு ஒத்துழைத்திடும் ஸ்தாபனத்தாரிடம் பிரதிபலனாக சம்பளம் எதிர்பார்ப்பது சரியாக இருக்காது. இவ்வாறு வேலை கற்கும் சமயத்தில் மக்களின் தேவைகளை சரிசெய்து நாம் கொடுக்கும்போது, சந்தை நிலவரம், தொழிற் நுட்பத்தின் தேவை, குறிப்பிட்ட ஸ்பேர் ஸ்பார்ட்ஸீன் ரேட்டிங் மற்றும் விலையை தெரிந்துகொள்வதால், நமது பாடத்தில் வரும் பகுதியை எளிதாக புரிந்து படிக்கலாம். கேம்பஸ் தேர்வில் வெற்றிபெற இந்த அனுபவங்கள் உதவும். இவ்வாறு செய்யாதவர்கள் தனியார் துறையில் வேலையில் அமர்வது அவ்வாறு எளிதல்ல. குடும்பப் பின்னணி கொண்டவர் களுக்கு கிடைக்கும் வாய்ப்பு ஒரு விதிவிலக் காகும்.


vaigarai velicham official

வழக்கறிஞராக விரும்புபவர்கள் +2 முடித்தவுடன் 5 ஆண்டு படிப்பு LLB யை தேர்ந்தெடுக்க வேண்டும். இதற்கும் தமிழ்நாடு அரசின் கலந்தாய்வில் கலந்துகொள்ள வேண்டும்.

LLBயை முடித்தவர்கள் நீதிபதி பதவிக்கான தேர்வில் வெற்றி பெற்று நீதிபதியாகலாம். சிறு வயதிலேயே இது சாத்தியம். மேலும் அரசாங்கத்தின் பலதுறைகளுக்கு ஆலோசகர்களாக பணியாற்றும் வாய்ப்புகள் உள்ளது. இதோடு தனியாக பிராக்டீஸ் செய்யலாம். ஒருபுறம் சிறப்பாக பணியாற்றிக்கொண்டே, ஏழை, எளிய பாதிக்கப்பட்டவர்களுக்கு வழக்காடி உதவலாம். மனித உரிமை மீறலுக்கு எதிராக செயலாற்றலாம்.

மருத்துவத் துறையில் ஆர்வமுள்ள பலர் துணை மருத்துவப் படிப்புக்கான தேர்ந்தெடுப்பார்கள். இவற்றில் பட்டப் படிப்பும் பட்டயப் படிப்பும் உண்டு.

பட்டப்படிப்பில் B.Sc.,(Nursing) மிக அதிக வேலைவாய்ப்பை அள்ளிக் கொடுக்கும் படிப்பாகும் அரசு கல்லூரியில் பெண்களுக்கு சுமார் 300 இடங்களும், ஆண்களுக்கு சுமார் 30 இடங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு ஆண்டுக் கட்டணம் சுமார் 3000/- ஆகும். படிக்கும் காலத்தில் தங்கும் விடுதியில் (Hostel) கட்டணம் தங்கிப் படிக்க வேண்டும் என்பதால், இதற்கான தங்கும் கட்டணம், உணவு கட்டணம் தனியாக செலுத்த வேண்டி வரும்.

இதுபோல் பட்டயப் (Diploma) படிப்பு Dip. in GNM என்ற 3 வருட Nursing படிப்பாகும். இதற்கு +2-ல் அனைத்துப் பிரிவும் (I, II, III, IV, V Group) தகுதியுடையதாகும். இதற்கு அரசு கல்லூரியில் சுமார் 2000க்கும் மேற்பட்ட இடங்கள் இருக்கிறது. இதற்கும் சுமார் 3000/- ஆண்டுக்கு கட்டணமாகும். தங்கிப் படிக்க வேண்டும்.

இது பெண்களுக்கு மட்டுமே. ஆண்களுக்கு இடமில்லை. ஆண்களில் படிக்க விரும்புவோர் தனியார் கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டும். தனியார் கல்லூரியில் அக்கல்லூரியின் கட்டமைப்பிற்கேற்ப கட்டணம் மாறுபடும். சுமார் 50,000/- முதல் இதற்கு கட்டணம் வசூலிக்கப்படுவதாக மக்கள் பேசிக் கொள்கின்றார்கள்.

மேற்கண்ட இவ்விரு நர்சிங் படிப்பும் மத்திய, மாநில மருத்துவமனைகளுக்கு தகுதியுடையதாகும். இவர்களைத்தான் Staff Nurse என அழைக்கின்றனர்.

இவர்கள் அரபு நாடுகளிலும், ஐரோப்பிய இனத்தவர்களின் நாடுகளிலும் பணிபுரிய தகுதியுடையோராவார். இவர்களுக்கு இந்நாடுகளில் சில வருட அனுபவமிருந்தால், எடுத்த எடுப்பிலேயே சுமார் ஒரு லட்சத்திற்கும் அதிகமாக ஊதியம் தரப்படுகிறது.

ஏதாவது ஒரு 3 வருட டிகிரி படித்துவிட்டு அடுத்து என்ன? என யோசிக்கும் பல மாணவர்கள் (ஆண்கள்) இதில் Dip. GNM என்ற படிப்பில் அடுத்த 3 வருடத்தை செலவழித்தால் இன்ஷாஅல்லாஹ் 100% வேலை உறுதி. வீட்டிற்கும் குட்டி டாக்டர் அமைந்திடுவார்.

இதுதவிர ANM என்ற 2 வருட சான்றிதழ் (சர்டிபிகேட்) நர்சிங் படிப்பு உள்ளது. இது தனியார் கல்லூரியில் மட்டுமே உள்ளது. பெண்களுக்கு மட்டும் வாய்ப்பு தரப்படுகிறது.

இதைத் தவிர பட்டப் படிப்பான B.Sc-ல் அநேக அலைடு மெடிக்கல் படிப்புகள் உள்ளன. இதில் Nursingக்கு அடுத்து அதிக வேலை வாய்ப்புகள் படிப்பு. B.Sc., (MLT), B.Sc.,(OT) போன்ற 4 வருட படிப்பு ஆகும்.

B.Sc.,(MLT) என்பது இரத்தப் பரிசோதனை படிப்பாகும்.

B.Sc.,(OT) என்பது அறுவை சிகிச்சையில் மருத்துவமனைகளுக்கு உதவிடும் படிப்பாகும்.

இதை விடுத்தால் மற்ற B.Sc., அலைடு மெடிக்கல் படிப்புகளுக்கு வேலை வாய்ப்பு பிரகாசமாக இருக்கிறதா என்பதில் மக்களுக்கு சந்தேகம் உள்ளது.

இப்போது பட்டப் படிப்பிற்கு வருவோம்..

இதில் DMLT., D.Pharm., என பல படிப்புகள் உள்ளன. இதில் DMLT என்பது இரத்தப் பரிசோதனை படிப்பாகும். 2 வருட படிப்பு. குறுகியகால படிப்பு. ஆண், பெண் இரு பாலரும் படிக்கலாம். மத்திய, மாநில அரசு வேலை உண்டு. தனியார் வேலையும் உண்டு. சொந்தமாக பரிசோதனை நிலையம் வைத்துக்



கொள்ளலாம். அரசு கல்லூரியில் சேர BC வகுப்பினருக்கு சுமார் 155/200-க்கு இருந்தால் நலம். ஆனாலும் இந்த மதிப்பெண் வருடா வருடம் அந்த நேரத்தில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண் அளவு மற்றும் இப்படிப்பை தேர்ந்தெடுக்கும் மாணவர்களின் எண்ணிக் கையை பொறுத்து மாறுபடும். அரசு கல்லூரி யில் சேர கலந்தாய்வில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் எக்காரணம் கொண்டு "நமக்கு இடம் கிடைக்காது" என எதிர்மறை எண்ணத்தில் அப்ளை செய்யாமல் இருக்காதீர்கள். இந்த படிப்பிற்கு அரசு கட்டணம் சுமார் 3000/- ஆகும். சுமார் 2300 இடங்கள் உள்ளது. தனியார் கல்லூரியிலும் உள்ளது. சில இடங்களில் தனியார் ஆஸ்பத்திரிகளில் DMLT கற்றுத் தரப்படுவதை நாம் கவனிக்கலாம். இவ்வாறான DMLT நமது Dr. MGR மருத்துவப் பல்கலைக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டதாக என சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரித்து உறுதிப் படுத்தியவுடன் சேரவும்.

ஏனெனில் இத்தகைய மருத்துவமனைகள் மத்திய அரசின் திறன்மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இம்மாதிரி DMLT படிப்பை கற்றுக் கொடுப்பார்கள். இந்த வகை சான்றிதழ் அரசு வேலைக்கு பொறுந்தாது என்பதை கவனித்தில் கொள்ள வேண்டும்.

இதுபோல் D.Pharm என்ற 2 வருட படிப்பு. 3 அரசு மருத்துவக் கல்லூரியில் மட்டுமே இது உள்ளது. இதற்கு P+C+M இல் Cut of Mark, BCM-க்கு 80% மேல் இருந்தால் அரசு இடம் கிடைக்கும். கிடைக்கப் பெறாதவர்கள் தனியார் கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டும். மருந்து கடை நடத்த இப்பட்டயம் அவசியமாகும்.

மேற்கண்ட இரு படிப்புகளையும் பெண் பிள்ளைகள் படிப்பதால், குழந்தைகளை கவனித்துக் கொண்டே மருந்துகடை நடத்திடலாம். வெளிநாட்டு வேலை பார்க்கும் கணவர் அமைந்தால், வெளிநாட்டு உழைப்பில் கணவரின் முதலீட்டில் மனைவியின் மேற்கண்ட DMLT, D.Pharm பட்டத்தைக் கொண்டு சுயமாக இரத்தப் பரிசோதனை நிலையமோ அல்லது மருந்துக் கடையோ நடத்தி குடும்ப அமைப்பை கட்டிக் காத்திடலாம்.முடிந்தால் இவ்விரு படிப்பையும் படித்தால், இவ்விரு படிப்பிற்கான அரசு வேலை வாய்ப்பையும் பெறலாம். ஆக 4 வருடத்தில் 2 பட்டம் வேலை வாய்ப்பை பிரகாசமாக்கும்.

மேலும் Diplomo in Radio Diagnosis Technology (DRDT) என்ற 2 வருட X-Ray மற்றும் ஸ்கேன் பட்டப் படிப்பு அரசு கல்லூரியில் உள்ளது.

Diplomo in Radio Diagnosis Technology (DRDT) என்ற 2 வருட படிப்பு உள்ளது. இது புற்றுநோய் பற்றி படிப்பாகும். இதுவும் அரசு மருத்துவக் கல்லூரியில் உள்ளது.

இதுபோல் ஒரு வருட பல்வேறு சான்றிதழ் படிப்பு அரசு கல்லூரியில் கற்றுத் தரப்படுகிறது.

வேலை கிடைக்கவில்லை எனக்கூறி ஒருசில வருடங்கள் வேலை இல்லாமல் கழிப்பவர்கள் இந்த ஒரு வருட படிப்பை படிக்கலாம். இதற்கு PCB என்ற +2 பிரிவும், 10th தகுதியும் கேட்கப்படுகிறது. இதற்கு சுமார் வெறும் 1500 /- வருட கட்டணமாக அரசு வசூலிக்கிறது.

கலைக் கல்லூரியில் படிக்க விரும்புவோர் ஆசிரியர் தொழில் மற்றும் TNPSC, UPSC தேர்வுகளுக்கு வசதியான பிரிவை தேர்ந்தெடுத்து படிப்பது நல்லது. ஏனெனில் நமக்கான ஒரு வாய்ப்பு தவறினால், பிரிதொரு வாய்ப்பான ஆசிரியர் தொழில் கை கொடுக்கும். இதற்கு BA (ஆங்கிலம், தமிழ், வரலாறு) படித்தால் நலம். மற்ற படிப்புகள் அவரவர் விருப்பம்.

# ஃபாலஸ்தீன முஸ்லிம்கள்

## அகதிகளான வரலாறு

**தொடர்...**



ஏப்ரல் மாத தொடர்ச்சி....

**1935 ஆம் ஆண்டு**

*நவம்பர் 19 ஆம் நாள் அவர்கள் ஷஹீதானார்கள். அடுத்த நிமிடமே அவர்களால் உருவாக்கப்பட்ட முஜாஹிதீன்கள் அந்த ஜிஹாத்-ஐ தொடர்ந்து நடந்திடும் பெரும் பணிகளைத் தொடங்கினார்கள்.*

*1936 ஆம் ஆண்டு இந்த முஜாஹித்கள் ஏற்பாடு செய்திருந்த கிளர்ச்சி ஒன்று பாலஸ்தீன் முழுவதும் பரவியது. மொத்த முஸ்லிம்களும் ஆயுதந்தாங்கி போராடினார்கள். வேலை நிறுத்தங்கள், கடை அடைப்புகள் என பாலஸ்தீனில் எங்கும் எதிர்ப்பின் அலைகள். யூத தீவிரவாதம் தலைதூக்கிய இடங்களிலெல்லாம் ஆயுதந்தாங்கிய போர். பிணங்களாக வீழ்ந்தார்கள் யூத பாசிசத்தின் அடிவருடிகள்.*

*ஆங்கிலேயர்கள் யூதர்களைக் காப்பாற்றிட தங்கள் பட்டாளத்தின் மிருக பலத்தை வெளிக் காட்டவே செய்தார்கள். ஆனால் அவர்களால் அடக்கிப் போட்டிட இயலவில்லை. பாலஸ்தீன மக்களின் உணர்ச்சியையும் எழுச்சியையும். ஆங்கிலேயர்களின் துப்பாக்கிகளிலிருந்து வெளிப் போந்த குண்டுகளால் ஷஹீத்களை உருவாக்கிட முடிந்தனவே அல்லாமல் அவர்களை அடிக்கிப் போட்டிட இயலவில்லை.*

*அந்த பாலஸ்தீன மக்கள் பிணங்களாக ஆகிட தயாராக இருந்தார்கள் அல்லாமல் அவர்கள் அடிமைகளாக இருந்திட, வாழ்ந்திட ஒப்புக் கொள்ளவில்லை. மொத்த பாலஸ்தீனும் செயலற்று நின்றது.*

*யூதர்களின் ஆக்கிரமிப்பும், ஆங்கிலேயர்களின் மேற்பார்வையும் ஒரு முடிவுக்கு வந்திடும் நிலை ஏற்பட்டது. நிலைமையைச் சமாளித்திட ஆங்கிலேயர்களால் இயலவில்லை. திணறினார்கள்.*

*பண பலத்தாலும் படை பலத்தாலும்*

சமாளிக்க இயலாதவற்றை தங்களது ஏமாற்று வேலை, நயவஞ்சகம் ஆகியவற்றால் சாதிக்க முயன்றார்கள். அதாவது நயவஞ்சகத்தை நடுநாயகமாகக் கொண்ட தங்கள் சொந்த வரலாற்றுக்குத் திரும்பினார்கள்.

முதல் உலகப் போரில் தங்களின் உதவிக்கு நின்ற அரேபியர்களின் காலைப் பிடித்தார்கள்.

சவூதி அரேபியாவை ஆண்டு வந்த மன்னர் இப்னு சவூத், ஈராக்-ஐ ஆண்ட காசி, ஜோர்டானை ஆண்டு வந்த அமீர் அப்துல்லாஹ் ஆகியோரைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு பாலஸ்தீன மக்கள் நடத்திவந்த கிளர்ச்சிப் போரை நிறுத்தும் படி கெஞ்சிட செய்தார்கள்.

அதற்குச் சன்மானமாக வழக்கம்போல் நிறைவேற்றிடும் எண்ணம் எள்ளவுமில்லாத ஆசை வார்த்தைகளை அள்ளிக் கொட்டினார்கள் ஆங்கிலேயர்கள்.

ஆங்கிலேயர்களுக்கும் அமெரிக்கர்களுக்கும் அடிமைகளாக வாழ்வதில் சுகங்கண்ட இந்த அரபு ஆட்சியாளர்கள் கிளர்ச்சியை நிறுத்தும்படி பாலஸ்தீன மக்களிடம் கெஞ்சினார்கள். பின் வரும் முறையீட்டை முன் வைத்தார்கள்.

"கிளர்ச்சியை நிறுத்திவிடுங்கள். நமது நண்பரான பிரிட்டனின் நல்ல எண்ணங்களை நம்பி நில்லுங்கள். அவர்கள் நியாயம் செய்வதாக வாக்களித்துள்ளார்கள்" எனக் கூறினார்கள். (Muslim Arab Perspectives Vol. I. PP. 80-83).

அன்றைய அரபு ஆட்சியாளர்களின் அன்றைய வேண்டுகோள்களை இன்றைய நிகழ்வுகளை வைத்துப் பார்த்தால் 'பச்சைத் துரோகம்' என அழைத்தால் அது மிகையாகாது.

ஆனால் அன்று அவர்கள் வைத்த இந்த முறையீட்டின் கீழ் அக்டோபர் 19, 1936ல் கிளர்ச்சிகளும் ஆயுதந்தாங்கிய போராட்டங்களும் கைவிடப்பட்டன.

ஆங்கிலேயர்கள் நண்பர்களல்ல; முழுமுதல் எதிரிகள் என்பதை நன்றாகப் புரிந்து களத்தில் நின்ற ஷேக் வீரமரணத்தைத் தழுவிவிட்டார்கள். அதற்குப் பின்னால் அந்த ஜிஹாத்-ஐ நடத்தியவர்கள் - அரபு நாட்டு ஆட்சியாளர்களை நம்பி நின்று விட்டார்கள். எல்லாம் கெட்டுப் போனது. (இன்னாலில்லாஹி... ஆங்கிலேயர்கள் தங்கள் கீழறுப்பு வேலைகளைத் தொடங்கினார்கள்.

**ஆங்கிலேயர்களின் கீழறுப்பு வேலைகள்!**

1936இல் முஸ்லிம்கள் மேற்கொண்ட பெரும்போரை முஸ்லிம் ஆட்சியாளர்களைக் கொண்டே அடக்கிப் போட்டபின் தங்கள் தீவிரவாதத்தை தடையின்றி தொடர்ந் தார்கள் யூதர்கள்.

துணை நின்றார்கள் ஆங்கிலேயர்கள். இந்தத் தீவிரவாத செயல்களைச் செய்து வந்தவர்கள் தங்களை ஒருங்கிணைத்துக் கொண்டார்கள் முறையாக!

இப்படி ஒருங்கிணைத்துக் கொண்டே தங்கள் தீவிரவாதங்களைத் தொடர்ந்தார்கள்.

அவர்கள் நடத்திய ஜிஹாத்யின்போது நின்று போயிருந்த வெளிநாட்டு யூதர்களின் வருகை இப்போது மீண்டும் தொடங்கியது.

ஆங்கிலேயர்கள் நல்லது செய்வார்கள் என்று எதிர்பார்த்தவர்கள் ஏமாந்தார்கள். ஆனால் இப்போது அவர்களால் எதுவும் செய்திட இயலாது என்பதே உண்மை.

ஆங்கிலேய படைகள் யூதர்களை அதிகமாகக் குடியேற்றிட எல்லா உதவிகளையும் செய்தன. யூதர்களின் குடியேற்றங்கள், ஜெரூசலத்தை நோக்கி நகர்ந்தன. இதனால் முஸ்லிம்கள் மீண்டும் தங்கள் எதிர்ப்பை காட்டினார்கள்.

ஆனால் அதை ஒரு இறைவழி பெரும் போராக அவர்களால் மாற்றிட இயலவில்லை.

ஆங்கிலேயர்களின் துப்பாக்கிக் குண்டுகளுக்கும் யூதர்களின் தீவிரதாக்குதல்களுக்கும் பலியாகி செத்து மடிந்தார்கள். (ஷஹீதானார்கள்).

இதனூடே ஆங்கிலேயர்கள் பிரிதொரு தகிடுதத்தத்தை நுழைத்தார்கள். அது,

ஷஹீத் அவர்களின் தலைமையில் நடந்த ஜிஹாத் - அதன் காரணக்காரியங்கள் அதற்கு பாலஸ்தீன மக்கள் தந்த ஆதரவு. இது போன்று இன்னொரு ஜிஹாத் நடக்காமல் தடுக்கும் வழிகள் இவற்றையெல்லாம் ஆய்வு செய்ய ஒரு விசாரணை கமிஷனை நியமித்தார்கள்.

அந்த கமிஷனின் பெயர்தான் ஃபீல் கமிஷன் "Peel Commission"

இந்தக் கமிஷன் தடபுடலாக ஓர் ஆய்வை மேற்கொண்டு ஓர் அறிக்கையை ஜூலை 7,


vaigarai velicham official

1937 இல் வெளியிட்டது.

அந்த அறிக்கை ஆங்கிலேயர்கள் யூதர்களுக்கு தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாய் அமைந்தது.

ஆமாம் பீல் கமிஷன் பாலஸ்தீனில் நடந்த ஜிஹாத் மீண்டும் நடக்காமலிருக்க பாலஸ்தீன் மூன்றாகப் பிரிந்திட வேண்டும் எனப் பரிந்துரைத்தது அத்தோடு திட்டம் ஒன்றையும் தயார் செய்தது.

அந்தத் திட்டத்தின் அடிப்படையில் ஒரு பகுதியில் யூதர்களின் நாடு அமையும்.

இன்னொரு பகுதியில் முஸ்லிம்கள் குடியிருப்பார்கள்.

ஏனைய பகுதி அதாவது மூன்றாவது பகுதி ஆங்கிலேயர்களின் நேரடிப்பார்வையில் இருக்கும்.

இதனை முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்ள வில்லை எதிர்த்துப் போராடினார்கள். இந்த முறை இந்தப் போராட்டம், ஹாஜி அமீன் ஹூஸைன் (ரஹ்) என்ற அறிஞர் பெருமகனின் தலைமையில் நடந்தது.

கையில் கிடைத்த கற்களையும் ஏனைய வற்றையும் கொண்டு அபாரமாகப் போராடி னார்கள் பாலஸ்தீன முஸ்லிம்கள்.

அவர்கள் ஏற்றி வைத்திருந்த போராட்ட "ஜிஹாதிய" உணர்வுகள் அழித்து விடவில்லை. மக்கள் எழுச்சி ஆங்கில ஏகாதிபத்தியத்தின் அடிவயிற்றைக் கலக்கிற்று.

ஆங்கிலபடைகள் அதிக அளவில் கொண்டு வந்து குவிக்கப்பட்டன.

அக்டோபர் 1,1937 இல் இந்தப் பெரும் போரை முன்னின்று நடத்திய முக்கிய தலைவர்கள் பலர் கைது செய்யப் பட்டார்கள்.

ஹாஜி அமீன் ஹூஸைன் அவர்கள் பாலஸ்தீன பகுதி யிலிருந்து நாடுகடத்தப்பட்டார்கள்.

இந்நிலையில் செப்டம்பர் 1, 1939 இல் இரண்டாம் உலகப் போர் தொடங்கியது.

இந்தப் போர் ஆங்கிலேயர்களிடையே ஒரு பெரும் பீதியை உருவாக்கியது. எங்கே பாலஸ்தீன மக்கள் தங்கள் கைகளிலிருக்கும் பாலஸ் தீனைப் பிடுங்கி விடுவார்களோ என்றஞ்சிய ஆங்கிலேயர்கள் அனைத்து விதமான அட்டூழி யங்களையும் அவிழ்த்துவிட்டனர். முஸ்லிம் களிடமிருந்த சாதாரண ஆயுதங்களையும் கைப்பற்றினார்கள்.

அதே நேரத்தில் யூத தீவிரவாதிகளுக்கு எல்லா விதமான உதவிகளையும், ஆயுதங் களையும் உற்சாகத்தையும் தந்தார்கள். அனைத்திற்கும் மேலாக யூதத் தீவிரவாதிகளை ஒருங்கிணைத்தார்கள்.

### யூதர்களின் தீவிரவாத அமைப்புகள்

ஆங்கிலேயர்களும், அமெரிக்கர்களும் தந்த உற்சாகங்களால் யூத தீவிரவாதிகள் ஒருங்கிணைந் தார்கள். அவர்கள் தங்கள் தீவிரவாதங்களை அப்பாவி முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்துவிட போதிய ஆயுதங்களையும், நிதியுதவிகளையும் ஆங்கில ஏகாதிபத்திய வாதிகள் தொடர்ந்து வழங்கிக் கொண்டே இருந்தார்கள்.

யூதர்களுக்குப் பொருளைவிட ஆயுதங்களே அதிகமாகத் தேவைப்பட்டது. அதனை அள்ளித் தந்து கொண்டிருந்தார்கள். ஆங்கிலேயர்களும், அமெரிக்கர்களும்.

யூதர்களின் தீவிரவாத அமைப்புகளைக் கூர்ந்து கவனித்தால் இஸ்ரேல் என்ற நாடு தீவிரவாதத்தினால் மட்டுமே உருவானது என்ற உண்மைப் புலப்படும்.

இதில் மிகவும் வேதனையான செய்தி என்ன வென்றால் இந்தத் தீவிரவாத அமைப்புகளைத் தோற்றுவித்தவர்களில் பலர் யூத 'ராபிகள்' என்ற யூத மதக்குருக்கள், பாதிரிகள்.

யூதர்களுக்கு ஒரு நாடு ஒன்றை உருவாக்கித் தந்திடுவோம் என்றொரு வாக்குறுதியை ஆங்கிலேயர்கள் வழங்கினார்கள். வழங்கிய வாக்குறுதியை வன்முறையின் மூலமே பெற்றுக் கொண்டார்கள் யூதர்கள். இதையும் யூத தீவிரவாத அமைப்புகளின் வரலாறு நமக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது.

### ஸ்டேன் கும்பல் என்ற தீவிரவாத அமைப்பு

அவ்ராஹாம் ஸ்டென் (AVRAHAM STERN) என்றொரு யூதன். இவனால் 1941இல் உருவாக் கப்பட்டதே ஸ்டென் கேங்க் STERN GANG என்ற யூத தீவிரவாத அமைப்பு.

இவன் "போலந்த்" நாட்டைச் சார்ந்தவன்.

இவன் போலந்தில் இயங்கிக் கொண்டிருந்த யூததீவிரவாத இயக்கமாகிய இர்குன் 'IRGUN' அமைப்பில் தன்னை இளம் வயதிலேயே இணைத்துக் கொண்டான்.

அந்த அமைப்பின் தீவிரவாத வேகம் அவனுக்குத் திருப்தி தரவில்லை என்பதனால் அந்த அமைப்பை விட்டு வெளியே வந்தவன்.

யூதர்களுக்கு நாடு ஒன்றை உருவாக்கித் தருகின்றேன் என்ற உத்திரவாதத்தைத் தந்த ஆங்கிலேயர்களுக்கே பெரும் சவாலாக இருந்தான். தன்னுடைய உறுப்பினர்களை இஸ்ரேலின் விடுதலைக்காகப் போராடும் விடுதலை வீரன் என்றே அழைத்தான்.

முதல் உலகப் போரில் ஹிட்லரை எதிர்ப் பதற்கு முதலிடம் தந்திட வேண்டும் என ஆங்கிலேயர்கள் கூறியபோது அதை ஏற்றுக் கொள்ளாதவன். முதலில் எதிர்க்கப்பட வேண்டி யவர்களும் அழிக்கப்பட வேண்டியவர்களும் பாலஸ்தீனிலும், இதரப் பகுதிகளிலும் சஞ்ச ரித்துக் கொண்டிருக்கும் முஸ்லிம்களே என ஓலமிட்டவன்.

இரண்டு ஆண்டுகளாக இவனது தீவிரவாதக் கும்பல் அப்பாவி அரபுக்களைக் கொலை செய்துகொண்டே இருந்தது. இதனால் பாலஸ்தீன் முஸ்லிம்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறிட வேண்டியவர்களானார்கள். அந்த இடங்களை ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்து பாலஸ்தீனில் குடியேறிய யூதர்களுக்கு வழங்கினார்கள். இப்படி சட்டத் திற்கு விரோதமாக வந்து குடியேறுபவர்களைப் பாதுகாப்பதற்கு ஆங்கிலேயர்கள் தங்கள் அதிகா ரத்தையும் ஆயுத பலத்தையும் பயன்படுத் தினார்கள்.

இந்த தீவிரவாத அமைப்பு தனது கொள்கை பிரகடனத்தில் இப்படிக் கூறிற்று.

“யூதர்கள் உலகில் வாழும் ஏனைய மக்களைப் போன்றவர்களல்ல. அவர்கள்தான் 'இறைவன் ஒருவனே' என்று உலகுக்கு அறிமுகப் படுத்தியவர்கள். நபிமார்கள் சொன்ன ஒழுக்கங் களை வரையறுத்துத் தருபவர்கள். உலகெங்கும் விரிந்து நின்றிட வேண்டிய கலாச்சாரத்திற்குச் சொந்தக்காரர்கள். அவர்களின் தாய்நாடு இஸ்ரேல். தௌவ்ராத் - இல் சொல்லப்



பட்டுள்ள எல்லைகளைக் கொண்ட ஒரு நாடு அவர்களின் நாடு. இதுதான் அமைதியின் இடம். எல்லா யூதர்களும் இங்கே வந்துதான் ஒன்று கூடுவார்கள், வாழ்வார்கள்.”

இந்தத் தீவிரவாத அமைப்பு கொலை செய்த முஸ்லிம் பெண்கள், குழந்தைகள் இவற்றிற்கு அளவே இல்லை.

ஆனால் இவனை ஜியேபிரி மார்ட்டான் என்பவன் 12.12.1942இல் கொலை செய்து விட்டான்.

ஆனால் இவனுக்குப் பின்னும் இந்த இயக்கம் வாழ்ந்து வளர்ந்தது. அது செய்த கொலைகள் தொடர்ந்து கொண்டே இருந்தன. இந்த தீவிர வாத அமைப்பைச் சார்ந்தவர்கள் பிரிட்டனை சார்ந்த லார்டு மோய்னி என்பவரை 1944இல் கொலை செய்தார்கள். ஐக்கிய நாடுகள் சபையைச் சார்ந்த கவுண் பெர்ணாடோட் என்பவரைக் கொலை செய்தார்கள். இவர்கள் இஸ்ரேலின் ஆதரவாளர்கள்தாம். ஆனால் தீவிரவாதத்தை எதிர்த்தார்கள். இப்படி 'எதற்கும் கொலை' என வாழ்ந்தவர்கள். பின்னாளில் இஸ்ரேலின் பிரதமரான யஷ்திக் ஷமீர் என்பவர்தான் இதனை நடத்தினார். அப்போது அவர்தன் பெயரை “மைக்கேல்” என மாற்றி வைத்துக் கொண்டார்.

ஒரு வீரவணக்க நாளில் தீவிரவாதி ஷமீர் இப்படிக் கூறினான்.

“நாங்கள் ஓர் புரட்சிப் படையை நடத்திக் கொண்டி ருந்தோம். அது எங்கள் மக்களே ஒத்துக்கொள்ளாத ஓர் இலட்சியத்திற்காக போர் செய்துகொண்டிருந்தது.”

இந்த தீவிரவாத அமைப்புகளைச் சார்ந்தவர் கள்தாம் பின்னர் 'லிக்குட்' என்றொரு அரசியல்


vaigarai velicham official

கட்சியைச் தொடங்கினார்கள். இந்தக் கட்சி நமது நாட்டிலுள்ள பாரதீய ஜனதா கட்சியைப் போன்ற தீவிரவாத கட்சி.

*1997* இல் இந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தது இஸ்ரேலில். உடனேயே இஸ்ரேலிலுள்ள ஒரு பிரதான சாலைக்கு ஸ்டெர்ன் சாலை, ‘STERN STREET’ எனப் பெயர் வைத்தார்கள்.

இந்த சாலைக்கு முன்னர் “MIZRAHI BET” மிஸ்ராகி பெட் என்று பெயர். இந்தத் தெருவில் வைத்துத்தான் ஸ்டெர்ன் கொலை செய்யப் பட்டான். அவன் வாழ்ந்த அறையை ஓர் வரலாற்றுச் சின்னமாக இன்றளவும் வைத்துக் காப்பாற்றி “புனித ஸ்தலமென” போற்றி வருகின்றார்கள். இந்த இடம் இஸ்ரேலின் பாது காப்பு அமைச்சகத்தின் நேரடிப் பார்வையின் கீழ் இருந்து வருகின்றது.

இந்த தீவிரவாதியின் வன்முறை வாழ்க்கை யைத் தீவிரவாதி யூதர்களுக்கு என்றல்லாமல் நாடுகண்ட ஒருவனின் வீரவரலாற்றைப் போல் பாதுகாத்து வருகின்றார்கள்.

ஒவ்வொரு வருடமும் வீர வணக்கநாள் என்றொன்றை நடத்தி அந்நாளில் இவனை நினைவு கூர்ந்து வருகின்றார்கள்.

*12.12.1989* இல் இஸ்ரேலின் பிரதமர்கள் எத்ஷாக் ஷமீர், இந்த இயக்கத்தைச் சார்ந்தவர் களின் வாரிசுகளுக்கு பரிசுகள் பணஉதவிகள் இவற்றை வழங்கி கௌரவித்தான்.

அப்போது இந்த இயக்கத்தைச் சார்ந்த வர்கள், அரசு அலுவலர்கள், அதிகாரிகள் இன்னும் பொதுமக்கள் அனைவரும் ஒன்று திரண்டு, இப்படி உறுதிமொழி எடுத்தார்கள்.

“நாங்கள் இஸ்ரேலின் விடுதலைக்காகப் போராடுகின்றோம். யாசிர் அராபத்வும் அவரு டைய மக்களும் இஸ்ரேலை அழிக்க முயற்சி செய்கின்றார்கள். நாங்கள் அவர்களோடு போராடுகின்றோம். இதில் இரத்தம் மட்டுமே இறுதி முடிவை நிர்ணயிக்கும்.”

*1992* இல் இஸ்ரேலிய நாடாளுமன்றம் ஓர் சிறப்புக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து இந்தத் தீவிரவாதியின் 50 வது நினைவு நாளை நினைவு கூர்ந்தது.

அதன்பின் ஒவ்வொரு வருடமும் அவன் இறந்த நாளை உறுதிமொழி ஏற்கும் நாளாக நினைவு கூர்ந்து வருகின்றார்கள்.

இவன் நினைவாக “ஸ்டாம்ப்” தபால் தலை ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

இப்படி படுகொலைப் பேர்வழிகள் பூஜிக்கப் பட்டு வருகின்றார்கள்.

Source : Muslim Arab Prospective : 1:4-6 (24) pages 228/9

**இர்குன் என்ற தீவிரவாத அமைப்பு**

நவீன தீவிரவாதத்தின் தந்தை என அழைக் கப்படுபவன் மேனாச்சம் பிகின் என்ற யூதன்தான்.

இவன் *1913*இல் ஜீயோனிஸ்டுகள் என்ற யூத தீவிரவாதிகள் குடும்பத்தில் பிறந்தவன். “போலாந்த்” நாடுதான் இவன் பிறந்த நாடு. இவனுடைய பூர்வீகமும் போலந்த் நாடுதான்.

இவனுடைய வாலிபத்தில் இவன் போலாந் திலுள்ள மறுமலர்ச்சி இளைஞர் இயக்கத்தின் தலைவராகத் தன்னை ஆக்கிக் கொண்டவன். அந்த இயக்கத்தின் பெயர் பெட்டார் “BETAR”.

ஹிட்லர் போலாந்த் நாட்டை ஆக்கிரமித்த போது இவன் ‘பெட்டார்’ இயக்கத்தை ஹிட் லருக்கு எதிராகப் போராடும் இயக்கமாக ஆக்கினான். இவன் ‘WILNO’ வில்னோ என்ற இடத்திற்கு தப்பித்துச் சென்றுவிட்டான். “வில்னோ”வின் மக்கள் தொகையில் *40* சதவிகிதம் யூதர்கள். தன்னை யார் என்று தெரியாமல் மறைத்துக் கொண்டு அந்த இயக் கத்தை இயக்கினான். அப்போதே படுகொலை செய்வதில் மிகவும் பயங்கரமானவன் என அனைவராலும் அஞ்சப்பட்டவன்.

போரின் ஒரு கட்டத்தில் ரஷ்யா “வில்னோ” என்ற இடத்தைப் பிடித்தது. அப்போது இவன் ரஷ்யப் படைகளால் கைது செய்யப்பட்டான். பின்னர் சைபீரியரின் சிறைச்சாலையில் ஏனைய யூதர்களுடன் கடுமையான தண்டனை களைப் பெற்றான்.

*1942*இல் இவன் ரஷ்யர்களின் கைகளி லிருந்து தப்பித்து பாலஸ்தீனுக்குள் புகுந்தான்.

இவன் தனது எண்ணங்களுக்கு குறுக்கே வருபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைக் கொலை செய்வதற்குக் கொஞ்சமும் தயங்க மாட்டான்.

பாலஸ்தீனில் புகுந்த இவன் விளாடிமிர் ஜீ இவி ஜபோடின்ஸ்கி என்ற யூத தீவிரவாத அமைப்பில் தன்னை இணைத்துக் கொண்டான்.

இந்த அமைப்பை "Revisionist Zionism" ரிவிஷனிஸ்ட் ஜீயோனிசம், மறுமலர்ச்சி ஜீயோனிசம், "யூத தீவிரவாதம்" என்றழைத்தார்கள்.

இந்த அமைப்பு எதிரிகளைக் கொலை செய்வதில் காட்டிய வேகம் போதவில்லை என்பது இவன் கருத்து.

அதேபோல் யூத தீவிரவாதத்தை எதிர்ப்பர்கள் யூதர்களாக இருந்தால் அவர்களையும் கொலை செய்ய வேண்டும் என்பது இவனது கருத்து. பல ஜீயோனிஸ யூதத் தீவிரவாதிகள் அளவுக்கதிகமாக ஆங்கிலேயர்களைச் சார்ந் திருந்தார்கள். அந்த யூதர்களையும் கொலை செய்திட வேண்டும் என்பதும் இவனது கருத்து.

ஆங்கிலேயர்கள் யூதர்களுக்கு நாடு ஒன்றை பெற்றுத் தருவதாக வாக்களித்து எல்லா விதத்திலேயும் உதவிகளைச் செய்து தந்து கொண்டிருக்கின்றார்கள். இது உண்மைதான் என்றாலும், அவர்கள் எப்போதாவது தடுமாறுவார்களேயானால் அவர்களைக் கொலை செய்திடவும் தயங்கிடக் கூடாது என்பது இவனது கருத்து.

இந்த விதர்ப்பமான எண்ணங்களை இதயத்திலே சுமந்த இவன் அவற்றை அப்படியே செயல்படுத்திடவும் செய்தான்.

இவனுடைய கொள்கையையும் செயல் திட்டங்களையும் "ரிவிஷனிஸ்ட் ஜீயோனிசம்", மறுமலர்ச்சி ஜீயோனிசம் என்ற அமைப்பு ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் இவன் அந்த அமைப்பிலிருந்து வெளியே வந்துவிட்டான்.

இவன் 'இர்குன் சிலைவய் லியுமி' IRGUN TSAVI LEUMI என்றொரு தீவிரவாத அமைப்பை ஏற்படுத்தினான்.

இந்த அமைப்பை நிறுவிய இரண்டாண்டுகளுக்குள் 30 (முப்பது) ஆங்கிலேயர்களையும் பல அரபுக்களையும், பல யூதர்களையும் இவன் கொலை செய்தான்.

பாலஸ்தீன முஸ்லிம்கள் தங்கள் இல்லங்களைவிட்டு அத்துணை எளிதாக வெளியேறிட மாட்டார்கள். அவர்களைப் பிணங்களாக ஆக்கிவிட்டுத்தான் அவர்களின் இடங்களைக் கையகப்படுத்திட இயலும்.

கண்ணை மூடிக்கொண்டு முஸ்லிம்களையும் தனக்குப் பிடிக்காத ஆங்கிலேயர்களையும், ஜீயோனிசத்தை எதிர்க்கும் யூதர்களையும் பாலஸ்தீனில் இவன் கொலை செய்தது ஆங்கிலேயர்களுக்கே பிடிக்கவில்லை.

ஆங்கிலேயர்களின் பரிபாலனத்தின் கீழ் பாலஸ்தீன் இருந்தபோதுதான் (1918-1948) மேனேச்சம் பிகின் இந்தப் படுகொலைகளை நடத்தினான். இதனால் உலகெங்கும் ஆங்கிலேயர்களை மக்கள் ஏளனக் கண்கொண்டு பார்க்கத் தொடங்கினார்கள்.

இந்நிலையில் ஸ்டேன்கேங் - இன் ஒருபிரிவு இவனுக்குகீழ் வந்தது. இவன் ஏககாலத்தில் இரண்டு தீவிரவாத அமைப்புகளை நடத்தினான்.

இரண்டு அமைப்புகளும் இவனது கைக்குள் சிக்கவே இவன் ஆங்கிலேயர்கள் தங்கள் நிருவாகத்தின் கீழிருக்கும் பாலஸ்தீனை யூதர்களிடம் ஒப்படைத்து விட்டு வெளியேறிட வேண்டும் என்ற கோஷங்களை முன் வைத்தான்.

பாலஸ்தீனை முதல் உலகப் போருக்குப் ஆங்கிலேயர்கள் நிருவாகத்தின் கீழ் எடுத்துக் கொண்டார்கள் என்பதை ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தோம்.

அந்நிலையில் இரண்டாம் உலகப்போர் முழுமூச்சில் நடந்து கொண்டிருந்தது. ஆங்கிலேயர்கள் தங்களுக்கெதிராக எழுந்த அணிகளோடு போராடுவதிலேதான் அதிகக் கவனம் செலுத்தினார்கள்.

ஆங்கிலேயர்கள் பாலஸ்தீனை யூதர்களிடம் ஒப்படைத்துவிட்டு தங்கள் எதிரிகளை சந்திக்கட்டும் என்ற கருத்தை தனக்குக் கீழிருந்த யூத தீவிரவாதிகளிடம் பரப்பினான்.

பிப்ரவரி 1, 1944 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களை எதிர்ப்பதாக அறிவித்தான். பல ஆங்கிலேய அதிகாரிகளையும் கொலை செய்தான்.

மேனேச்சம் பிகின் தனக்குக் கீழிருந்த தீவிரவாதிகளுக்கு பணம் தந்திட யூதவியாபாரிகளை மிரட்டி பணம் பறித்தான்.

அதேபோல் வைர வியாபாரத்தில் கொடி கட்டிப் பறந்த யூத வைர வியாபாரிகளைக் கொள்ளையடித்தும் பணத்தைச் சேர்த்தான்.


vaigarai velicham official

இவனுடைய கொள்கைபடி, இந்தக் கொள்ளைகளால் வைர வியாபாரிகளுக்கு எந்த நஷ்டமுமில்லை. எவ்வளவு வைரம் கொள்ளை யடிக்கப்பட்டதோ அவ்வளவு வைரத்திற்கான பணத்தை வியாபாரிகள் இன்ஷூரன்ஸ் கம்பெனிகளிடமிருந்து பெற்றார்கள். ஆகவே தான் நடத்தும் கொள்ளைகளால் வைர வியாபாரிகளுக்கு நஷ்டமில்லை என தன் கொள்ளைகளுக்கு நியாயம் கற்பித்தான்.

காலப் போக்கில் இரண்டு அமைப்புகளையும் ஒன்றாக்கி, "இர்குன்"எனப் பெயரிட்டு அவனே வழி நடத்தினான்.

*1944-1948* வரை ஆங்கிலேயர்களுக்கு மிகப் பெரிய தலைவலியாக இருந்தான். இந்த கால வெளியில் நூற்றுக்கும் மேற்பட்ட தாக்குதல் களை ஆங்கிலேயர்கள் மீது நடத்தினான்.

அதே நேரத்தில் ஆயிரக்கணக்கான தாக்குதல்கள் வழி அப்பாவி முஸ்லிம்களைக் கொலைச் செய்தான்.

இவனுடைய கொலைகளையும் தீவிரவாத செயல்களையும் தாங்கிட இயலாத ஆங்கிலே யர்கள் இவனுடைய "இர்குன்" அமைப்பைச் சார்ந்த பல தீவிரவாதிகளைக் கைது செய்தனர். ஆங்கில அதிகாரிகளைக் குரூரமாகக் கொலை செய்த குற்றத்திற்காக சில இர்குன் தீவிரவாதி களை தூக்கிலிட்டனர். அத்தோடு மேனாச்சம் பிகின்-ஐ உயிருடனோ- பிணமாகவோ கொண்டு தருபவர்களுக்குப் பத்தாயிரம் அமெரிக்க டாலர்களைத் தருவோம் என அறிவித்தார்கள்.

இதற்குப் பழிவாங்கிட ஜெரூசலத்தில் இருந்த ஆங்கிலேயர்களின் இராணுவ அதிகாரிகள் தங்கி இருந்த கிங்டேவிட் என்ற ஹோட்டலை குண்டு வைத்துத் தகர்த்தனர். இதில் *91* பேர் இறந்தனர். பலர் காயம் பட்டனர். இறந்தவர்களில் பலர் ஆங்கில இராணுவ அதிகாரிகள்.

இத்தோடு நில்லாமல், அக்ரிசிறை (ACRE PRISON) என்ற சிறையை உடைத்தனர். இந்தச் சிறையில்தான் ஆங்கிலேயர்கள் "இர்குன்"அமைப்பைச் சார்ந்த பல யூத தீவிர வாதிகளைச் சிறை வைத்திருந்தனர்.

சிறையை உடைத்து யூத தீவிரவாதிகளை மீட்டதோடு நில்லாமல், இரண்டு ஆங்கிலேயே காவலர்களையும் சிறைபிடித்து *30.7.1947*இல் தூக்கிலிட்டனர். அவர்களின் பெயர் மார்ட்டின், முர்விர்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் ஆங்கிலேயர்கள் "இர்குன்" தீவிரவாத அமைப்பினரைத் தொடுவதற்குப் பயந்தனர்.

அத்தோடு எவ்வளவு விரைவாக தங்கள் நிருவாகத்தின் கீழுருந்த பாலஸ்தீனை யூதர் களிடம் ஒப்படைத்திட இயலுமோ அவ்வளவு சீக்கிரம் அவர்களிடம் ஒப்படைத்துவிட்டு ஓடிவிட வேண்டும் எனவும் முடிவு செய்தார்கள்.

ஆங்கிலேயர்கள் மேனாச்சம் பிகினை பிடிக்கும் முயற்சியையும் கைவிட்டனர்.

*1948,* மே-*14*இல் பாலஸ்தீனை பிளந்து இஸ்ரேலை உருவாக்கியபோது தான் இவன் டையர்யாசின் படுகொலை Dier Yasin Mas sacre- ஐ நிகழ்த்தினான்.

அப்பாவி முஸ்லிம்கள், பெண்கள், குழந்தைகள் கொலை செய்யப்பட்ட இந்தக் கொடுமையைத்தான் யூத வரலாற்றின் கறை படிந்த நிகழ்ச்சி என வருணிக்கின்றார்கள். அந்த நிகழ்ச்சி இதுதான். தொடரும்...



- அல்லாமா அபுல் ஹஸன் அலி நத்வி (ரஹ்)

- தமிழில் மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி

மேலும் மாலிஸன் கூறுகிறார்:

மௌலவி அஹமதுல்லா உண்மையான தேசபக்தர். அவரது வாளில் கொலைக் கறை படிந்திருக்கவில்லை. அவர் எந்த கொலையிலும் ஈடுபடவில்லை. அவர் தனது நாட்டைக் கைப்பற்றிய அந்நியர்களுக்கு எதிராக போர்க்களத்தில் துணிச்சலுடனும், வீரத்துடனும், பிடிவாதமாகவும் போராடினார். அனைத்து நாடுகளின் துணிச்சல் மிகுந்த வீரதீரர்கள் அனைவரும் கண்ணியத்தோடு மௌலவி அவர்களை நினைவுகூர வேண்டும்.

ஹோம்ஸ் எழுதுகிறார்:

எதிரிகள் எவ்வளவு கொடூரமானவர்களாக இருந்தாலும், அவர்களின் தளபதி மிகப்பெரிய இராணுவத்தை வழிநடத்துவதற்கும், ஒரு உன்னதமான மற்றும் உயர்ந்த இலக்கைப் பாதுகாப்பதற்கும் தகுதியானவர்கள்.

சிப்பாய் புரட்சி தோல்வியில் நிறைவடைந்த போது ஆங்கிலேயர்கள் தங்களது முழு குரோதத்தையும் வெளிக் காட்டினார்கள். தங்களது கடுமையான பழிதீர்க்கும் வேட்கையை தணித்துக் கொண்டார்கள். அனைத்து மக்களையும் ஈவிரக்கமின்றி மிகக் கொடுமையாக நடத்தினார்கள். கருணை, நீதி, மனிதநேயம் ஆகிய அனைத்து வார்த்தைகளும் மறைந்துபோனது.

ஆங்கிலேயர்கள் இந்தியர்களை நோக்கி காட்டுமிராண்டித்தனமான பகைமையை வெளிப்படுத்தினர். இது செங்கிஸ் கான் மற்றும் குலாகு கானின் கொடூரமான நிகழ்வுகளை மீண்டும் கண்முன்னே கொண்டு வந்தது. முஸ்லிம் மன்னர் ஒருவருக்கு ஆங்கிலேயர்களே அடைக்கலம் கொடுத்துவிட்டு பிறகு அவர்களே அம்மன்னரின் மூன்று இளம் மகன்களை மிகவும் கொடூரமாக கொன்றார்கள். இவர்கள் கொன்ற விதம் மற்ற ஆங்கிலேயர்களைக் கூட நடுங்க வைத்தது.

அரச குடும்பத்தைச் சார்ந்த இருபத்தி மூன்று பேர் வயதானவர்கள், நோயாளிகள் மற்றும் பலவீனமானவர்கள் உட்பட, அனைவரும் தூக்கிலிடப்பட்டனர்.

மன்னரை மிகவும் இழிவாக நடத்தினார்கள். அவரை கொன்றே தீர வேண்டும் என்று வெறியோடு இருந்தார்கள். ஒரு உயர் ஆங்கில இராணுவ அதிகாரி அவரது வாழ்க்கையின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளித்திருக்கவில்லை என்றால் நிச்சயமாக அவர் கொல்லப் பட்டிருப்பார். நிரந்தரமாக ரங்கூனிற்கு நாடு கடத்தபட வேண்டும் என்று தீர்ப்பளித்தார்கள்.

அங்கே விரட்டியடிக்கப்பட்ட அகதியை போல வாழ்வாதாரத்திற்கு மிகவும் சிரமப்படும் நிலையிலே அவரது உயிர் பிரிந்தது.



# விடுதலை போரில் முஸ்லிம்களின் கோர மரணம்



vaigarai velicham official

ஆங்கிலேய படைகள் டில்லி உள்ளே நுழைந்தது. அவர்களது நுழைவு,

"அரசர்கள் யாதொரு ஊரில் நுழைந்தால் நிச்சயமாக அதனை அழித்துவிடுகின்றனர். அன்றி, அங்குள்ள கண்ணியவான்களை கேவலப் பட்டவர்களாக ஆக்கிவிடுகின்றனர்." என்ற திருக்குர்ஆனின் வசனத்திற்கு விளக்கமாக இருந்தது. மூன்று நாட்கள் டில்லி முழுவதும் சூரையாடுவதற்கு படைகளுக்கு பொது அனுமதி வழங்கப்பட்டது.

பிரபல்யமான ஆங்கில அதிகாரி ஜான் லாரன்ஸ் அவர்கள் டிசம்பர் 1857-ல் இராணுவ தளபதி அவர்களுக்கு பின்வருமாறு கடிதம் எழுதினார்.

"அனைத்து தரப்பு மக்களையும் எந்தவொரு வேறுபாடும் பார்க்காமல் நாம் கொள்ளையடித்த விதம் பொதுமக்களின் அதிருப்தியையும், சாபங் களையும் நம்மீது என்றென்றும் ஏற்படுத்தும் என்று நான் நம்புகிறேன். நாம் அதற்கு மிகவும் தகுதியானவர்கள்."

கொலையும் கொள்ளையும் தலைவிரித்து ஆடியது. ரத்த ஆறு ஓடியது. எங்கும் வெட்டப் பட்ட தலைகள் பரவி கிடந்தன. எந்தவொரு வேறுபாடும் இல்லாமல் துப்பாக்கி குண்டுகள் பல உடல்களை துளைத்தது. அனைத்து வீடுகளும் கொள்ளையடிக்கப்பட்டன.

அனைவருமே தங்களை, தங்களது குடும்பத்தை, மானத்தை பாதுகாப்பதற்காக வீடுகளை துறந்தனர்.

வெறுமையான வீடுகள், இடிந்த கட்டி டங்கள், அழுகிய சடலங்கள் கொள்ளையடிக்கும் வீரர்களைத் தவிர வேறெதுவும் இல்லாமல் நாட்டின் மணப்பெண்ணாகவும், இந்தியாவின் தலைநகரமாகவும் இருந்த நகரம் வெறிச்சோடிக் கிடந்தது.

தளபதி லார்ட் ராபர்ட்ஸ் டில்லியிலிருந்து கான்பூர் வரை தான் மேற்கொண்ட பயணத்தின் போது கண்ட அகோரமான காட்சியை இவ்வாறு வர்ணிக்கிறார். இந்த பயணமானது செப்டம்பர் 24, 1857, அதாவது ஆங்கிலேய படைகள் டில்லி செங்கோட்டையை கைப்பற்றிய பிறகு மேற்கொள்ளப்பட்ட பயணம்.

லார்ட் ராபர்ட்ஸ் "நாற்பத்தோரு ஆண்டுகள் இந்தியாவில்" என்ற தனது நூலில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

அதிகாலை வெளிச்சத்தில் டெல்லி வழியாக நகர்ந்த அந்த படை ஒரு பயங்கரமான காட்சியை கண்டது. லாகூர் கேட் என்று அழைக்கப்படும் அதன் கதவு வழியாக நாங்கள் கோட்டையை விட்டு வெளியேறி, அந்த பகுதியின் மையப்பகுதி மற்றும் அதன் மிகப்பெரிய சந்தையான சாந்தினி சௌக்கின் பெரிய தெரு வழியாக சென்றோம். உண்மையில் டில்லி மயான பூமி போலிருந்தது. நாலா பக்கமும் நிசப்தம் நிலவியது. குதிரைக் காலணிகளின் சப்தத்தைத் தவிர வேறு எந்த சத்தமும் இல்லை.

துடிக்கும் நரம்பையோ, இமைக்கும் கண்களையோ நாங்கள் எங்கும் காணவில்லை. ஆங்காங்கே உயிரற்ற உடல்கள் மட்டுமே சிதறிக் கிடந்தன. மரண உறக்கத்தில் உறங்கி கொண்டிருந்த உடல்களை தொந்தரவு செய்யக் கூடாது என்பதற்காக நாங்கள் கிசுகிசுப்பாக மட்டுமே பேசினோம்.

நாங்கள் பார்த்த காட்சிகள் மிகப் பயங்கர மானவையாக, அச்சுறுத்தக் கூடியவையாக, மனதை வேதனைப்படுத்த கூடியவையாக இருந்தன. சில உடல்களை நாய்கள் கடித்து குதறிகொண்டிருந்தது. சில உடல்களை பிணந்தின்னிக் கழுகுகள் மேய்ந்து கொண்டி ருந்தது. சிறகுகளை விரித்து பறந்து செல்ல முடியாதளவிற்கு வயிறு நிரம்ப மேய்ந்தது. சில இறந்த உடல்களை பார்ப்பதற்கு உயிரோடு இருப்பது போலவே இருந்தது. இறக்கும் தருவாயில் கைகளை உயர்த்தியபடியே இறந்து போனதால் ஏதோவொரு திசையை குறிப்பிட்டு சைகை செய்வது போல அவர்களது கைகள் உயர்ந்த நிலையிலேயே இருந்தன.

**எங்கள் குதிரைகளும் பீதியால் பெருமூச்சு விட்டு கொண்டிருந்தது. கற்பனை செய்ய முடியாத அளவுக்கு அங்கே காட்சி பயங்கரமாகவும் அச்சுறுத்த கூடியதாகவும் இருந்தது. நோய்களை விளைவிக்கும் மோசமான துர்வாடையும் வீசியது."**

தொடரும்.....

## பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள்...
## முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்



# தில்சுக் நகர் (ஹைதராபாத்) குண்டுவெடிப்பு 2013

**உண்மையான குற்றவாளிகளின் இமெயில் முகவரியை எடுத்து அதை அப்பாவி முஸ்லிம்களின் மீது பொருத்திய வழக்கு**

ஏப்ரல் மாத தொடர்ச்சி....

### அ) வழக்கின் விபரம்

குற்றப்பத்திரிகையில் கூறப்பட்டபடி, 21 பிப்ரவரி 2013 18:58 மணியளவில் ஹைதரா பாத்தின் தில்சுக் நகரில் இரண்டு குண்டுகள் தொடர்ச்சியாக வெடித்தன. முதல் குண்டு 107 பஸ் ஸ்டாண்டிலும் இரண்டாவது குண்டு A1 மிர்ச்சிகடையிலும்வெடித்தது. மலக்பேட் காவல் நிலையத்தில் குற்ற எண் 56/2013 – இன் கீழும் சரூர் நகர் காவல் நிலையத்தில் குற்ற எண் 146/2013 இன் கீழும் இரண்டு குற்றங்கள் பதியப் பட்டன. சம்பந்தப்பட்ட காவல் நிலையங்கள் ஆரம்ப கட்ட விசாரணையை தொடங்கின. பின்னர் இந்த வழக்கு 14 மார்ச் 2013 அன்று தேசிய புலனாய்வு முகமையிடம் ஒப்படைக்கப் பட்டது. பின்னர் அவர்கள் குற்றத்தை மீண்டும் RC எண் 01/2013 மற்றும் 02/2013/NIA/ Hyderabad-இன் கீழ் பதிவு செய்தனர்.

தேசிய புலனாய்வு முகமையினால் ஏற்கெனவே இந்தியன் முஜாஹிதீனுக்கு எதிராக RC எண் 06/2012/NIA/DLI-இன் கீழ் பதியப்பட்டிருந்த வழக்கில் தொடர்புடைய அசதுல்லாஹ் அக்தர் என்கிற ஹத்தி என்கிற தப்ரேஸ் என்கிற டானியேல் என்கிற அசத் என்பவரையும் (குற்றவாளி எண் 2) முஹம்மத் அஹ்மத் சித்திபப்பா என்கிற யாசின் பத்கல் என்கிற ஷாருக் (குற்றவாளி எண் 5) என்பவரையும் 29 ஆகஸ்ட் 2013 அன்று தேசிய புலனாய்வு முகமை கைது செய்தது. இவர்கள் இருவரோடு சேர்ந்து தலைமறைவு குற்றவாளியான ரியாஸ் பத்கல் என்கிற இஸ்மாயில் ஷாபந்த்ரியும் (குற்றவாளி எண் 1) இந்த இரட்டை குண்டு வெடிப்பு வழக்கில் ஈடுபட்டிருப்பதாக கண்டு பிடித்தது தேசிய புலனாய்வு முகமை. அவர்கள் இருவரும் ஹைதராபாத்தில் உள்ள தேசிய புலனாய்வு முகமையின் சிறப்பு நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டனர். அவர்களை காவல்துறை தங்கள் கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்ள உத்தரவிட்டது நீதிமன்றம்.

தங்களுக்குள் தகவல்களை பரிமாறிக் கொள்ளவும் உரையாடவும் பல இமெயில்


vaigarai velicham official

முகவரிகளை பயன்படுத்தியதாக விசாரணை யின்போது அவர்கள் தெரிவித்தனர். இந்த இமெயில் முகவரிகள் அனைத்தும் ICERT-யின் (Indian Computer Emergency Response Team) துணை கொண்டு திறக்கப்பட்டன. அவர்கள் அனுப்பிய மெயில்கள், உரையாடல்களில் பல மீண்டும் மீட்டெடுக்கப்பட்டன. தொடர்ந்து நடந்த விசாரணையில், தில்சுக் நகர் குண்டு வெடிப்பை தாங்களே நடத்தியதாக அவர்கள் இருவரும் ஒப்புக்கொண்டனர். அவர்களின் ஒப்புதல் வாக்குமூலங்கள் நீதித்துறை நடுவரின் முன் பதியப்பட்டன. இந்த வாக்குமூலங்களே மொத்த விசாரணைக்கும் அடிப்படையாக மாறியது.

## தேசிய புலனாய்வு முகமையின்படி, பின்வரும் உண்மைகள் விசாரணையில் தெரிய வந்தன

தலைமறைவு குற்றவாளி எண் 1 ரியாஸ் பத்கலே இந்த சதியின் சூத்திரதாரி. பாகிஸ் தானில் இருந்து கொண்டு அவன் இந்த குண்டு வெடிப்பை இயக்கியுள்ளான். குற்றவாளி எண் 2 அசதுல்லாஹ் என்கிற ஹத்தி, குற்றவாளி எண் 3 சையுர் ரஹ்மான் என்கிற வக்காஸ் கான் என்கிற ஜாவித் என்கிற அஹ்மத் என்கிற நபீல் கான் ஆகிய இருவரும் பாகிஸ்தானில் இருந்துள்ளனர். குற்றவாளி எண் 1 இன் கட்டளையின்படி படி, 2010 செப்டம்பர் மாதத்தில் குற்றவாளி எண் 2 மற்றும் 3 ஆகியோர் நேபாள் வழியாக இந்தியா வந்துள்ளனர். இவர்களை குற்றவாளி எண் 4 முஹம்மத் தஹ்சீன் அக்தர் என்கிற ஹசன் என்கிற மோனு என்பவர் அழைத்து சென்றுள் ளார். இவர்கள் மூவரும் இணைந்து (பீகார்) சமஸ்திபூர் என்ற இடத்திற்கு சென்று குற்றவாளி எண் 5ஐ சந்தித்துள்ளனர். இந்தியாவின் முக்கிய நகரங்களில் குண்டு வைப்பதை பற்றி அங்கே கலந்து ஆலோசித்துள்ளனர்.

அதன்பின்பு குற்றவாளி எண் 2 மற்றும் 3 ஆகியோர் மங்களூர் (கர்நாடகா) சென்றுள்ளனர். அங்கே Zephyr Heights என்ற கட்டிடத்தில் குத்தகைக்கு தங்கியுள்ளனர். குத்தகை ஒப்பந் தத்தை குற்றவாளி எண் 2 டானியேல் என்ற பெயரில் போட்டுள்ளார்.

பிராக்சி சர்வரில் (Proxy Server) இருந்து உருவாக்கப்பட்ட இமெயில் முகவரிகளையும் Chat முகவரிகளையும் பயன்படுத்தி குற்றவாளி எண் 1–ஐ தொடர்பு கொள்வார் குற்றவாளி எண் 2. ஹவாலா, Western Union Money Transfer-இன் வழி குற்றவாளி எண் 2 மற்றும் 3–க்கு பணம் அனுப்புவார் குற்றவாளி எண் 1. பணத்தை போலி அடையாள அட்டைகளை காண்பித்து அவர்கள் பெற்றுக் கொள்வார்கள்.

ஹைதராபாத்தில் குண்டுவெடிப்பை நடத்த வேண்டும் என்று 2013 ஜனவரி உரையாடலின் (chat)போது குற்றவாளி எண் 2–இடம் கேட்டுள் ளார் குற்றவாளி எண் 1. இதற்கு தேவையான பொருட்கள் இன்னும் சில நாட்களில் மங்களூர் வந்தடையும் என்றுள்ளார் குற்றவாளி எண் 1. அவ்வாறே அறிமுகமில்லாத நபர் ஒருவரிட மிருந்து வெடிபொருட்களை பெற்றுள்ளார் குற்றவாளி எண் 2.

அதே வேளையில் 2013 ஜனவரி மாதத்தின் கடைசி வாரத்தில் குற்றவாளி எண் 4 ஹைத ராபாத் வந்துள்ளார். 7 பிப்ரவரி 2013 அன்று அப்துல்லா பர்மேட் என்ற இடத்தின் அருகில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துள்ளார்.

2013 பிப்ரவரி மாதத்தின் இரண்டாவது வாரத்தில் டேனிஷ் என்ற பெயரில் பஸ் டிக்கெட் ஒன்றை புக் செய்து மங்களூரில் இருந்து ஹைதராபாத் வந்துள்ளார் குற்றவாளி எண் 2.

LB நகரில் வைத்து குற்றவாளி எண் 2 ஐ சந்தித்து தனது அறைக்கு (அப்துல்லா பர்மேட்) அழைத்து சென்றுள்ளார் குற்றவாளி எண் 4.

ஹைதராபாத்தில் குண்டுவெடிப்பை நடத்து வதாக தங்கள் திட்டத்தை முடிவு செய்துள்ளனர். 12 பிப்ரவரி 2013 அன்று மங்களூருக்கு திரும்பி வந்துள்ளார் குற்றவாளி எண் 2. திட்டத்தை குற்ற வாளி எண் 3 இடம் விரிவாக விவரித்துள்ளார்.

குற்றவாளி எண் 2,3 இருவரும் சேர்ந்து வெடிபொருட்களை எடுத்துக்கொண்டு 16 பிப்ரவரி 2013 அன்று VRL ட்ராவல்ஸ் பேருந்தில் ஏறி மங்களூரில் இருந்து ஹைதராபாத் கொண்டு வந்துள்ளனர். அவற்றை குற்றவாளி எண் 4–இன் அறையில் வைத்துள்ளனர். அதன்பின், குற்றவாளி எண் 1 இன் கட்டளையின்படி, குற்றவாளி எண் 2,3,4 ஆகிய மூவரும் சேர்ந்து ஹைதராபாத்தில் எந்த இடத்தில் குண்டுவெடிப்பை நிகழ்த்தலாம் என வேவு பார்த்து, இறுதியாக தில்சுக் நகரை தேர்ந்தெடுத்துள்ளனர்.

அப்துல்லாபர்மேட்டின் அருகில் இருக்கும் வெறிச்சோடிய மலையடிவாரத்தில் வைத்து வெடிகுண்டை வெடிக்க வைத்து சோதனையும் செய்துள்ளனர்.

20 பிப்ரவரி 2013 அன்று குற்றவாளி எண் 2,3,4 மூவரும் LB சாலையில் இருக்கும் ஸ்ரீ மஹாலட்சுமி பேன்சி ஸ்டீல் கடையில் இருந்து 7.5 லிட்டர் பிரஷர் குக்கர் ஒன்றை வாங்கினார்கள். அதில் வெடிபொருட்களை நிரப்பி கைவினை வெடிபொருட்களை உருவாக்க எண்ணினர். மலக்பேட் குன்ஜ் இடத்தில் இருக்கும் மிதிவண்டி பழுதுபார்க்கும் கடையில் இருந்து பழைய மிதிவண்டி ஒன்றை வாங்கினர்கள். அதை மலக்பேட் இரயில் நிலையத்தின் பார்க்கிங் பகுதியில் கொண்டு நிறுத்தினர். பிரஷர் குக்கரினுள் இருக்கும் வெடிபொருளை சுற்றி பொதிவதற்காக ஒரு மீட்டர் நீளமுடைய பிளாஸ்டிக் விரிப்பு ஒன்றையும் சதர்கட் பாலத்தின் அருகில் இருக்கும் ஒரு கடையில் அவர்கள் வாங்கினர்.

21 பிப்ரவரி 2013 அன்று குற்றவாளி எண் 2,4 இருவரும் ஜூம் மெரெட் பஜாருக்கு (வியாழக்கிழமை சந்தை) சென்றிருந்த வேளையில் குற்றவாளி எண் 3 வீட்டில் இருந்து கைவினை வெடிபொருட்களை உருவாக்கி கொண்டிருந் தார். பஜாரில் இருந்து இன்னொரு மிதிவண்டி ஒன்றையும் வாங்கி அதையும் மலக்பேட் இரயில் நிலையத்தின் பார்க்கிங் பகுதியில் விட்டுவிட்டு வீடு திரும்பினார்கள் குற்றவாளிகள் (எண் 2,4).

21 பிப்ரவரி 2013 மாலை 4 மணிக்கு கைவினை வெடிபொருட்களை தயார் செய்து முடித்து அது வெடிக்கும் நேரத்தை மாலை 7 மணி நிர்ணயித்தார் குற்றவாளி எண் 4. தன்னு டைய அம்மாவிற்கு உடல்நிலை சரியில்லை. எனவே நான் மும்பைக்கு செல்கிறேன் என்று வாடகை வீட்டை கவனித்து வருபவரிடம் கூறினான் குற்றவாளி எண் 4. பின் மூவரும் கைவினை வெடிபொருட்களை எடுத்துக் கொண்டு ஒரு ஆட்டோவில் மலக் பேட் இரயில் நிலையத்தின் பார்க்கிங் பகுதிக்கு வந்தடைந் தனர். வெடிபொருட்களை தன் கையில் வைத்து கொண்டு பார்க்கிங் பகுதியின் வெளியே நின்றான் குற்றவாளி எண் 3. பார்க்கிங் பகுதிக்கு உள்ளே சென்று இரண்டு மிதிவண்டிகளையும் எடுத்து வந்தனர் குற்றவாளிகள் (எண் 2,4.) வெடிபொருட்களை மிதிவண்டியில் பொருத் தினர். குற்றவாளிகள் எண் 3யும் 4யும் தில்சுக் நகர் செல்லுங்கள் என்று கூறி விட்டு அங்கேயே காத்திருந்தார் குற்றவாளி எண் 2.

ஏற்கெனவே பேசியபடி குற்றவாளி எண் 3, 107 பேருந்து நிறுத்தத்திலும் குற்றவாளி எண் 4 H1 மிர்ச்சி கடையிலும் வெடிகுண்டை வைத்தனர்.

18:58:38 மணிக்கு ஒரு வெடிகுண்டும் 18:58:44 மணிக்கு மற்றொரு வெடிகுண்டும் வெடித்தது. இதனால் அச்சமும் பீதியும் உண் டானது. 18 பேர் இதில் இறந்தனர். 131 பேர் காயமுற்றனர். குண்டுவெடிப்பை சுற்றியிருந்த பகுதிகளில் இருந்த பொது சொத்துக்களும், தனியார் சொத்துக்களும் பலத்த சேதமடைந்தன.

குண்டுவெடிப்பு நடந்த உடனேயே குற்ற வாளி எண் 2,3 ஆகியோர் ஹைதராபாத்தை விட்டு கிளம்பி பெங்களூர் சென்று அங்கிருந்து மங்களூர் சென்றனர். குற்றவாளி எண் 1 இன் கட்டளையின்படி நேபாளுக்கு விரைந்தார் குற்றவாளி எண் 2. அங்கு குற்றவாளி எண் 5–ஐ சந்தித்து அவரிடம் அடைக்கலம் புகுந்தார்.

தங்களது கட்டுப்பாட்டில் இருந்த குற்றவாளி எண் 2, 5 ஆகியோருக்கு எதிராக குற்றப்பத்திரி கையை தேசிய புலனாய்வு முகமையின் சிறப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது தேசிய புலனாய்வு முகமை.

அதன் பின்பு 22 மார்ச் 2014 அன்று குற்றவாளி எண் 3யும் 25 மார்ச் 2014 அன்று குற்றவாளி எண் 4யும் கைது செய்தது டெல்லி காவல்துறையின் சிறப்புப் பிரிவு. அவர்கள் இருவரையும் குண்டு வெடிப்பு நடந்த இடத்திற்கு அழைத்து சென்றனர். அங்கே அவர்கள் மிதி வண்டியை கொண்டு தங்கள் நகர்வுகளை செய்து காட்டினர். இந்த செயல்கள் படம்பிடிக்கப் பட்டது. பின்னர் அவர்கள் குண்டுவெடிப்பு நடந்த ஐதராபாத் தில்சுக் நகரை காண்பித்தனர். மங்களூர் மற்றும் பெங்களூரில் தான் சென்ற இடங்களை காண்பித்தான் குற்றவாளி எண் 3.

பல்வேறு இமெயில் முகவரிகள் வழியாக மற்ற குற்றவாளிகளிடம் பேசுவதற்கு குறியீட்டுப் பாஷைகளை பயன்படுத்தியதாக குற்றவாளி எண் 3 ஒப்புக்கொண்டான். தன்னுடைய இமெயில் முகவரி கடவுச்சொற்கள் இவற்றை தெரிவித்து


vaigarai velicham official

மெயில்களையும் உரையாடல்களையும் எடுத்துக் காட்டினான்.

கூகுள் மேப்பை பயன்படுத்தி பங்களாதேஷ், துபாய், பாகிஸ்தான், நேபாள், இந்தியா ஆகிய நாடுகளிலும், LeT பயிற்சி முகாமிலும் (வடக்கு வரிசிஸ்தான், பாகிஸ்தான்) தன்னுடைய பதுங்கிடங்களையும் அவன் திட்டமிட்டுள்ளான்.

தலைமறைவு குற்றவாளி எண் 1 இற்கு எதிராகவும், குற்றவாளிகள் எண் 3,4 ஆகிய இருவருக்கு எதிராகவும் துணை குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தது தேசிய புலனாய்வு முகமை.

5 செப்டம்பர் 2014 அன்று குற்றவாளி எண் 6ஐ கைது செய்தது டெல்லி காவல்துறை. அவரிடம் இருந்து சில பொருட்கள் கைப்பற்றப்பட்டன. அந்தப் பொருட்கள் டெல்லி சிறப்பு காவல் துறையால் பதியப்பட்ட 54/2011 குற்ற எண்ணோடு சம்பந்தப்பட்டது.

சிறப்புப் பிரிவால் பதியப்பட்ட (FIR No. 54/2011) வழக்கையும் தேசிய புலனாய்வு முகமையால் பதியப்பட்ட (RC எண் 6/2011/NIA/ Delhi) வழக்கையும் விசாரணை செய்யும்போது பின்வரும் உண்மைகள் வெளிவந்தன:

1) இந்தியாவில் நடந்த பல்வேறு குண்டு வெடிப்புகளிலும் குற்றவாளி எண் 6 ஈடுபட்டுள்ளான்.

2) குண்டுவெடிப்புகளுக்கு இந்தியன் முஜாகிதீன் இயக்கம் பொறுப்பேற்றுள்ளது என்ற இமெயில்களை இவன் தான் மும்பையிலிருந்து ஊடகங்களுக்கு அனுப்பியுள்ளான்.

3) தலைமறைவு குற்றவாளி எண் 1இன் கட்டளையின்படியே குற்றவாளி எண் 2,3,4,5 ஆகியோருக்கு போலி அடையாள அட்டைகளையும், சிம்கார்டுகளையும் மொபைல் போன்களையும் இவனே அவர்களுக்கு வழங்கியுள்ளான்.

4) இவனால் வழங்கப்பட்ட போலி அடையாள அட்டைகளை பயன்படுத்தியே குற்றவாளிகள் எண் 3, 4 ஆகியோர் பாட்னா, மங்களூர் மற்றும் இதர பகுதிகளில் உள்ள வெஸ்டர்ன் யூனியன் மணி டிரான்ஸ்பரில் இருந்து பணத்தை எடுத்துள்ளனர்.

5) குற்றவாளி எண் 2,3,4,5 ஆகியோருக்கு வெடி பொருட் களை எடுத்துச் செல்வதற்கு இவனே உதவியுள்ளான்.

6) தன்னுடைய அடையாளத்தை இரகசியமாக வைத்து கொண்டு குறியீட்டு பாஷைகளை பயன்படுத்தி மற்ற குற்றவாளிகளிடமும் இந்தியன் முஜாஹிதீன் உறுப்பினர்களிடமும் இமெயில் வழியாக பேசுவான்.

7) தில்சுக் நகர் குண்டுவெடிப்பில் குற்றவாளி எண் 2, 5 ஆகியோர் கைது செய்யப்பட்டபின் இவன் ரக்சாவுல் வழியாக நேபாள் சென்றான்.

தில்சுக் நகர் குண்டுவெடிப்பில் இவனும் ஈடுபட்டுள்ளான் என்று உறுதியாகியபின் ஹைதராபாத் தேசிய புலனாய்வு முகமை துணை குற்றப்பத்திரிகையை குற்றவாளி எண் 6க்கு எதிராகவும் தாக்கல் செய்தது.

## ஆ. விசாரணையும் தண்டனையும்

கைது செய்யப்பட்ட குற்றவாளிகள் எண் 2,3,4,5,6 ஆகியோருக்கு எதிராக விசாரணை மேற்கொள்ளப்பட்டது. குற்றப்பத்திரிகையை படித்தால் இலக்கியத்தின் ஒரு பகுதியை படித்த உணர்வைத் தரும். ஏனென்றால் உறுதியான மறுக்கமுடியாத சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த குற்றப்பத்திரிகை எழுதப்படவில்லை. ஆனாலும் இந்த சாட்சியங்களை வைத்தே குற்றவாளிகளுக்கு மரண தண்டனையை விதித்தது ஹைதராபாத் சிறப்பு தேசிய புலனாய்வு முகமை நீதிமன்றம்

## இ) டெல்லி காவல்துறையின் சிறப்பு பிரிவு, தேசிய புலனாய்வு முகமை, மாநில தீவிரவாத எதிர்ப்புப்படை – இவர்களின் சதி

தீர்ப்பை குறித்து ஆய்வு செய்வதற்கு முன், குற்றவாளிகளின் சதிகளை வெளிப்படுத்த புலனாய்வு முகமைகள் கையாண்ட வியூகம் என்ன? எந்த செயல்முறைகளை அவர்கள் மேற்கொண்டார்கள் என்பதை காண்பது முக்கியம். அல்லது, புலனாய்வு என்பதே ஒரு சதியா? சாட்சியங்களின் தரம், நம்பகத்தன்மை, சட்டத்தை ஒத்திருக்கும் தன்மை இவற்றை பார்க்கும்போது, புலனாய்வு என்பதே ஒரு சதி என்பதற்கான வாய்ப்புகளே அதிகம்.


இரட்டை குண்டுவெடிப்பு வழக்கின்

விசாரணையை ஆரம்பத்தில் உள்ளூர் காவல்துறையும், பின்னர் தேசிய புலனாய்வு முகமையும் மேற்கொண்டிருந்தாலும், செயற் களத்தில் தேசிய புலனாய்வு முகமையும், டெல்லி சிறப்பு காவல் பிரிவும் இணைந்தே விசாரணையை மேற்கொண்டன. இவை இரண்டுமே மத்திய உளவுத்துறையின் கையாட்கள். கடந்த ஆண்டுகளில் இந்தியாவில் நடந்த ஒவ்வொரு குண்டுவெடிப்பு விசாரணையிலும் டெல்லி காவல் துறை சிறப்பு பிரிவின் தலையீடு இருக்கும். எப்பொழுதெல்லாம் குண்டுவெடிப்பு வழக்குகளில் பிராமினிஸ்ட் இயக்கங்களான ஆர்.எஸ்.எஸ், அபினவ் பாரத், பஜ்ரங்தள், VHP, சனாதன் சாஸ்தா போன்றோர்களை நோக்கி சந்தேகமுள் நகர்கிறதோ, அப்பொழுதெல்லாம் இவர்கள் தலையிட்டு முஸ்லிம் இயக்கங்களின் உறுப்பினர்களை தீவிரவாதிகளாக இக்குண்டு வெடிப்பு வழக்குகளில் முன்னிறுத்துவார்கள். இப்படி முன்னிறுத்தப்பட்டவர்களின் ஒப்புதல் வாக்குமூலங்களையும், அவர்களிடம் இருந்து மீட்கப்பட்ட பொருள்களையும் ஆதாரமாக தருவார்கள். பின்பு, இந்த குற்றவாளிகளையும் ஆதாரங்களையும் (மத்திய உளவுத் துறையின் கைப்பாவையான) சம்பந்தப்பட்ட மாநில தீவிரவாத தடுப்புப் படையினரிடம் ஒப்படைப் பார்கள். 2010 ஜெர்மன் பேக்கரி குண்டுவெடிப்பு (புனே), 2011 ஜவேரி பஜார் குண்டு வெடிப்பு (மும்பை), 2012 ஜங்கலி மஹாராஜ் சாலை குண்டு வெடிப்பு ( புனே), 2010 சின்னசாமி ஸ்டேடியம் குண்டுவெடிப்பு (பெங்களூர்) மற்றும் பல குண்டுவெடிப்புகளிலும் இப்படித் தான் நடந்துள்ளது. எந்த ஒரு தீவிரவாத வழக்கு களையும் விசாரணை செய்யும் உரிமையை தங்கள் கையில் எடுத்து கொள்கின்றன டெல்லி சிறப்பு பிரிவு காவல் துறையும், தேசிய புலனாய்வு முகமையும். இருவரும் இணைந்தே விசாரணையை மேற்கொண்டு அப்பாவி முஸ்லிம் இளைஞர்களை இந்த வழக்குகளில் சிக்க வைப்பார்கள். இதற்கு ஒவ்வொரு மாநிலத்தின் தீவிரவாத எதிர்ப்புப்படையும் (அதாவது, ATS, STF, SIT, CCS DD) உதவி செய்யும்.

இப்படி இணைந்து விசாரணை செய்யும் போது ஏற்படும் சட்ட சிக்கல்களை சமாளிக்க அவர்கள் இரு வழக்குகளை பதிவு செய்வார்கள். ஒரு குற்ற வழக்கை டெல்லி சிறப்பு பிரிவு காவல்துறையும் மற்றொரு குற்ற வழக்கை தேசிய புலனாய்வு முகமையும் பதிவு செய்யும். இதில் இந்தியன் முஜாஹிதீன் இயக்கத்தின் ஒட்டுமொத்த சதித் திட்டமும் கூறப்பட்டிருக்கும். அத்தோடு தேடப்படும் குற்றவாளிகளாக பல முஸ்லிம்களின் பெயர்களும், ஒருவருக்கு எண்ணற்ற பெயர்கள் இருப்பதைபோல் கூறப்பட்டிருக்கும். இப்படி ஒருவருக்கு பல பெயர்களை கூறிவிடுவதன் மூலம் இரு வழக்குகளில் ஏதேனுமொன்றில் குற்றவாளிகளாக்கி இணைத்து விடுவதற்கு வசதியாகி விடுகின்றது. இந்த வழிமுறையைதான் இந்த வழக்கிலும் கையாண்டார்கள்.

அதாவது, முதலில் RC எண் 6/2012 என்ற வழக்கில் குற்றவாளி எண் 2, 5 இருவரையும் கைது செய்தனர். பின்னர் குற்றவாளி எண் 3,4,6 ஆகியோரை டெல்லி CR எண் 54/2012 வழக்கில் கைது செய்தனர். சாட்சியங்களை திரித்து அவர்களை குற்றவாளிகளாக்கினர்.


தொடரும்...





vaigarai velicham official

ஆங்கிலம் : JOHN FEFFER
தமிழ் வடிவம் : மு. குலாம் முஹம்மத்




# மேலை நாடுகளின் மறு உயிர்பெற்ற இஸ்லாத்திற்கெதிரான போர்

அன்பார்ந்த வாசகர்களே..

நம் கண்களுக்கு முன்னாலேயே ஒன்றை கண்டு வருகின்றோம். அது கடந்த 7 மாதங்களாக தொடர்ந்து கொண்டிருக்கும் ஃபாலஸ்தீன் போர்.

இந்தப் போரில், அதாவது அக்டோபர்-7, 2023இல் தொடங்கி இந்தப் போரில் இன்றளவும் (19-5-2024) 34,844 பேர் அப்பாவி பாலஸ்தீன் முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டார்கள்.

■ உலக மக்கள் அனைவரும் இந்தப் படுகொலைகளைப் பார்த்துக்கொண்டுதானிருக்கின்றார்கள். உலக மக்கள் அனைவரும் இந்தப்படுகொலைகளை எதிர்க்கின்றார்கள்.

■ மாணவர்கள் எதிர்க்கின்றார்கள். பல்கலைக்கழகங்கள் அதிர்கின்றன.

■ மாணவர்களுக்குப் பாடங்களைச் சொல்லித் தருகின்ற ஆசிரியர்கள் போராடுகின்றார்கள்.

■ பள்ளி மாணவர்கள் பேராடுகின்றார்கள். குறிப்பாக அமெரிக்காவின் கொலம்பியா பள்ளி மாணவர்கள், போராடினார்கள்.

■ பல கல்லூரிகளில் பட்டமளிப்பு விழாக்கள் ரத்துச் செய்யப்பட்டன.

■ யூதர்கள் போராடுகின்றார்கள்.

■ கிருஸ்தவர்கள் போராடுகின்றார்கள்.

■ சுருக்கமாகச் சொன்னால் உலகிலுள்ள 840 கோடி மக்களும் எதிர்கொள்கின்றார்கள்.

ஆனாலும் முஸ்லிம் படுகொலைகள் நாள் தவறாமல் நடந்துகொண்டிருக்கின்றன.

இது இந்த உலகில் எவ்வளவு ஆழமாக இஸ்லாமோஃபோபியா அதிகார வட்டத்தில், எந்த அளவுக்கு வேரூன்றி இருக்கின்றது என்பதை அறிந்திட இயலும்.

இந்த வெறுப்பின் வரலாற்றதைத்தான் இங்கே தருகின்றார் ஜான் பெஃபர்...

இந்த வெறுப்பை வேரறுத்திட நாம் நிமிடந் தவறாமல் உழைத்திட வேண்டும். அதுவே முக்கியம்.

ஆகவே, இந்த வெறுப்பு வரலாற்றின் முழு நகர்வையும் அதன் வரலாற்றையும், நாம் விரிவாக அறிந்து வைத்திட வேண்டும்.

அதுவே நாம் இந்த இஸ்லாமியோ பேஃபியாவை எதிர்கொள்ள மக்கள் மன்றத்தில் விதைக்கப்பட்டிருக்கும் வெறுப்பை கெல்லி எறிந்திட உதவும்.

வரலாறு தெரியாதவர்கள், வரலாறு படைக்க இயலாது என்ற உண்மையை நாம் அறிந்திட வேண்டும்.

ஆதலால்தான் இந்தத் தொடர்.

இந்த அடிப்படைகளையெல்லாம், தருகின்ற ஒரே இதழ் "வைகறை வெளிச்சம்" என்பதனால் இயன்றவரை இதைப் பரவலாக்குங்கள்.

ஜான் பெஃபர் கூறுகின்றார்

எங்கள் எதிரியைக் கண்டுபிடிக்கும் வேலையில் இஸ்லாம் வந்து நின்றது.

“இஸ்லாமே” முக்கிய எதிரி என்பதை முடிவு செய்தோம். பின்னர் அதைச் சொல்லிக் கொண்டு வந்திட வேண்டும்.

இஸ்லாம் பல அழுத்தமான கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட மார்க்கம். ஆதலால் இஸ்லாத்தின் மீது தொடுக்கும் போர் முதலில் அந்தக் கொள்கை மீது தொடுத்திடும் போராக இருந்திட வேண்டும்.

இதற்காகத்தான் மதச்சார்பின்னை என்பதைக் கொண்டு வந்தோம். அதனை பிரபல்யப்படுத்தினோம். ஏன் முஸ்லிம்களே இந்தக் கொள்கையைத் தூக்கிப்பிடிக்கத் தொடங்கினார்கள். தாங்கள் ஒரு அழுத்தமான நேர்வழியைப் பெற்றார்கள் என்பதை கொஞ்சம், கொஞ்சமாக மறக்கத் தொடங்கினார்கள். எந்த அளவிற்கு மறக்கத் தொடங்கினார்களோ அந்த அளவுக்கு இஸ்லாத்தை விட்டு வெளியே வந்தார்கள். காலப்போக்கில் இந்த மதச்சார் பின்மைத்தான் முன்னேற்றத்தின் முதல்படி



என பிரஸ்தாப்பித்தோம். உலகில் அதையொரு விலை உயர்ந்த தத்துவமாகக் காட்டினோம். முஸ்லிம்களும், இந்த மயக்கத்தில் விழ்ந்தார்கள். மதச்சார்பின்மையின் பாதுகாப்பாளர்களே நாங்கள்தாம் எனக் காட்டினார்கள். தங்களின் மத அடையாளங்களை மறைக்கத் தலைப் பட்டார்கள்.

இது அவர்களிடையே தாங்கள் எதிர்பார்த்த கலாச்சார மாற்றத்தை எந்த சலனமுமின்றிக் கொண்டு வந்தது.

நாள்கள் நகர்ந்தன. அவர்களே மதச் சார்பின்மையைக் காப்பாற்றிட உழைப்பவர் களாகவும் ஆகினார்கள். பின்னர் இன்னொருபடி மேலே போய் மதச்சார்பின்மையை முஸ்லிம்கள் மேல் திணித்தார்கள்.

இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக, துருக்கியின் கமால் அட்டாடர்க்-ஐ குறிப்பிடலாம்.

இவர் இஸ்லாத்தையும், ஜிஹாத்-ஐயும் சொல்லித்தான், துருக்கியில் ஆட்சியைப் பிடித் தார். பின்னர் நாங்கள் (ஐரோப்பியர்கள்) அள்ளி வீசிய சில்லரைகள், சலுகைகள், அங்கீகாரங்கள், அழகியல் இவற்றில் மதச் சார்பின்மையை ஏற்றார்.

கிலாபத்-ஐ கலைத்தார்.

ஷரீயத் சட்டங்களின் செயல்பாடுகளை நிறுத்தினார்.

ஹிஜாப், தலாக் சட்டங்களை மாற்றினார்.

ஹிஜாப் அணிந்து வந்த பெண்களை நடுவீதியிலே நிறுத்தி, ஆடைகளை கிழித்து அவமானப்படுத்தினார். இதற்கு துருக்கியின் காவல்துறையையே ஏவிவிட்டார்.

இஸ்லாத்தை ஓர் கொள்கை அவசியம். கலாச்சாரத்தையும், கிலாபத்தின் கடைசி நிலைமை அகத்திலேயே சீரழித்தார். சின்னா பின்னமாக்கினார்.

ஒரு ஆட்சியாளர் செக்குலர் முஸ்லிம். அவரைக் கொண்டு முஸ்லிம்கள் ஆக்கினோம். அதற்கு சில டாலர்கள்தாம் தேவைப்பட்டது. அவரைக்கொண்டு முஸ்லிம்கள் பெருமையோடு பின்பற்றி வந்த கிலாபத்தையே இல்லாமலாக்கி னோம். 1924இல் இன்றுவரை அது காணல் நீராகத்தான் முஸ்லிம்களிடையே இருந்து


vaigarai velicham official

வருகின்றது.

கமால் அத்தா துருக்கியின் காலத்திற்குப் பின் கிலாபத்-இன் குரல் எங்கெல்லாம் எழுந்ததோ அங்கெல்லாம் அதை நிர்மூலமாக்கினோம். கிலாபத் என்ற பிரச்சனையே வந்திடவில்லை.

ஆனால் இஸ்லாமிய அடிப்படை வாதத்தின் வேர்களைப் பிடுங்கிட இயலவில்லை. இஸ்லாம் மீண்டும் அதன் பெருமைமிகப் பாரம்பரியத்தை மீண்டும் பெற்றிட வேண்டும். அதன் நிருவாக முறைகளும், பொருளாதார முறையும், அதன் ஒழுக்க வழிகாட்டலும், அதன் நிருவாகப் பரிபாலனமும், ஆட்சி முறையும் மீண்டும் வரவேண்டும் என ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கின்ற கூட்டம் ஒன்று உலகெங்கும் இருந்து கொண்டேதான் இருந்தது.

இஸ்லாமோஃபோபியோவை வளர்ப்பார் மூலம்தான் இதை இந்தக் கூட்டத்தை - இந்தச் சிந்தனையை வீழ்த்திட இயலும் என்பதை எமது திட்டம். அதனை அதிரடியாக உலகெங்கும் கொண்டு சென்றிடப் பயன்பட்டது. 9/11 என அடையாளப்படுத்தப்பட்ட செப்டம்பர்-11, 2001ஆம் ஆண்டில் நடந்த இரட்டைக் கோபுரங்களின் தாக்குதல்கள். இந்த இரட்டை கோபுர தாக்குதல்களைக் கொண்டு ஒரே நாளில் முஸ்லிம்கள் தீவிரவாதிகள்,

> **அவர்கள் மனித இனத்தை அழிப்பதையே சதாசர்வ காலமும் தங்கள் லட்சியமாகக் கொண்டு செயல்படுபவர்கள். ஆகவே அவர்கள் மனித இனத்தின் எதிரிகள் என்றெல்லாம் பிரகடனப்படுத்தினோம்.**

உலகெங்கும் இஸ்லாத்திற்கெதிராகவும் சட்டங்களை இயற்றிடச் செய்தோம். நாங்கள் ஏற்கெனவே ஏற்படுத்தி வைத்திருந்த இஸ்லாமோ ஃபோபியாவைப் பயன்படுத்தி முஸ்லிம்கள் மீது உலகெங்கிலும் உள்ள நாடுகள் பாய்ந்தன.

உலகெங்கும் முஸ்லிம் இளைஞர்கள் சிறையிலடைக்கப்பட்டார்கள். அவர்களின் குடும்பங்கள் சிதைந்தன. சீரழிந்தன.

எங்கள் எண்ணங்கள், திட்டங்கள், நாங்கள், எதிர்பார்த்ததைவிட வேகமாக நிறைவேறின.

- இன்ஷா அல்லாஹ் தொடரும்.




**அடிக்குறிப்பு-1**
**வாசகர்கள் கவனத்திற்கு...**

**மதச்சார்பின்மை**

மேலை நாட்டவர்கள் மதச்சார்பின்மை எனச் சொல்லுகின்றபோது அது இஸ்லாத்திலிருந்து முஸ்லிம்களை வெளியே கொண்டு வந்திடவும், அவர்களை இஸ்லாத்தின் எதிரிகளாக மாற்றிடவும் பயன்படுத்தும் ஒரு மந்திரச்சொல்.

இதில் முஸ்லிம்கள், தங்கள் மூக்கை நுழைத்திடும்போது அவர்கள் ஒன்றைப் புரிந்திட வேண்டும். அது அவர்களுக்கென்று ஒரு மதமிருக்கின்றது. அவர்களுக்கென்று ஒரு வேதமிருக்கின்றது, அவர்கள் இந்த வேதம். அதாவது இறைவனின் வழிகாட்டுதல்களை எல்லாம் அப்படியே பின்பற்றி வாழ்ந்திட வேண்டியவர்கள், அப்போது மட்டும் அவர்கள் முஸ்லிம்கள் என வட்டத்திற்குள் வருவார்கள்.

இந்த மதச்சார்பின்மையின் வளாகங்கள் வியாக்கணங்கள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது, மாறுபடுகின்றது.

இந்த மதச்சார்பின்மை சிறுபான்மையினர்மேல் திணித்திடும்போது அவர்கள் தங்கள் பண்பாடுகளை, கலாச்சாரங்களை இழந்து விடுவார்கள் என்பதனால்தான், சிறுபான்மையினர் உரிமைகள் என்றும், அதில் யாரும் தலையிடக்கூடாது என்றும், உலக நாடுகளில் சட்டங்களும் தனிப்பிரிவுகளுமிருக்கின்றன.

ஆனால், இஸ்லாம், இஸ்லாமிய நாடுகள் என்று வருகின்றது. பிறமத நம்பிக்கையைக் கொண்டவர்களின்

உரிமைகள், மிகவும் துல்லியமாகப் பாதுகாக்கப்படுகின்றது. அவர்கள் சிறுபான்மையினரா? பெரும்பான்மை யினரா? என்பது கேள்வி இல்லை.

அவர்கள் பிறமத நம்பிக்கையாளர்கள் என்று அழைப்பதே பொருத்தமாக இருக்கும்.

இந்தப் பிரமத நம்பிக்கையாளர்கள் விவகாரங்களின் - நீதிபதிகளாக அந்தந்த மத நம்பிக்கையாளர்கள் இருப்பார்கள்.

அவர்கள் தொடர்பான வழக்குகள், அவர்களுக்காக நியமிக்கப்பட்ட அவர்கள் நீதிபதிகளைக் கொண்டே நடத்தப்படும். செலவினங்கள் இஸ்லாமிய அரசைச் சாரும். தண்டனைகள் அவர்களுடைய நீதிமன்றங்களில் வழங்கப்பெற்றால் அந்தத் தண்டனைகள் நிறைவேற்றுகின்ற பொறுப்பு இஸ்லாமிய அரசைச் சாரும்.

இஸ்லாத்தின் வரலாறு முழுவதும் இந்த நிலைக் காப்பாற்றப்பட்டு வந்திருக் கின்றது. அதனால்தான் இஸ்லாம் ஆட்சி செய்த காலக்கட்டங்களில் உரிமைப் போர்கள், கிளர்ச்சிகள் என்பவை யெல்லாம் வந்ததில்லை.

ஆக எல்லா மக்களும், எல்லா மத நம்பிக்கையாளர்களும் தங்கள் மத நம்பிக்கை பெற்று வாழ்ந்திட இஸ்லாமிய ஆட்சி வேண்டும்.

**மதச்சார்பின்மையின் வரலாறு**

ஜான் பெஃபர் மதச்சார்பின்மையின் வரலாற்றை இங்கு பேசிடவில்லை. இந்தப் புத்தகத்தின் ஓட்டத்திற்கு அது தேவை யில்லை என அவர் நினைத்திருக்கலாம்.

ஆனால், மதச் சார்பின்மை என்பதின் சுருக்கமான வரலாறு என்ன? என்பதை நாம் தெரிந்திட வேண்டியது மிகவும் அவசியம். ஏனெனில் ஜான் பெஃபர் சொல்வதை வைத்துக்கொண்டு நாம், மதச்சார்பின்மையின் தோற்றமே இதுதான் என எண்ணிடக்கூடாது. மதச் சார்பின் மையை அவர்கள் முஸ்லிம்களுக்கெதிராக பயன்படுத்திக் கொண்டார்கள். உண்மை யில் மதச்சார்பின்மை என்பது கிருஸ்தவத் திற்கும், விஞ்ஞானத்திற்கும் இடையே நடந்த சண்டையில் எழுந்தது.

ஆமாம் விஞ்ஞானம் என்ற அறிவால் சொன்ன அனைத்தையும், கிருஸ்தவம் எதிர்த்தது. உலகம், தட்டையானது என்றது கிருஸ்தவம். ஆனால் அது உருண்டையானது என்பது எங்களது ஆழ்ந்த ஆராய்ச்சியால் நாங்கள் கண்டுபிடித்தது என்றார்கள் விஞ்ஞானிகள். இல்லை உலகம் தட்டை யானதுதான், என அடம் பிடித்தது கிருஸ் தவம். முடிவில் மதத்தை எதிர்கின்றான் - நீ ஷைத்தானின் பிடியில் சிக்கிக் கொண் டாய் என்றது கிருஸ்தவம். விடவில்லை விஞ்ஞானிகள் அல்லது அறிவியலாளர்கள்.

அவர்களை பல இரகசியமாக, விசாரணை என்ற பெயரில் சிறையி லடைத்தார்கள். மரண தண்டனையை வழங்கினார்கள். இப்படித்தான் யிலியோ என்ற விஞ்ஞானியும், புருணே என்ற பௌதீக இயலாளரும் கொலை செய்யப் பட்டார்கள்.

இந்த விசாரணைகளைத்தான் INQUISITON இன்கிஷிஷன் நீதிமன்றங்கள் என்றார்கள்.

இப்படிக் கொலை செய்யப்பட்ட வர்கள் 3,00,000 பேர். இதில் 32,000 பேர் எரித்தே கொலை செய்யப்பட்டார்கள். இந்தக் கொலைகள் ஓர் மதவாதக் கூட்டத்தை எட்டியபோது, ஒரு கூட்டம் மக்கள் மதச்சார்பின்மை, பெறுவாழ் வுக்கும் விஞ்ஞானத்திற்கும் - சம்மந்த மில்லை. மதம் வாழ்வின் எங்கேயும் தலையிடக்கூடாது என்றார்கள். இப்படித் தான் மதம் மனித வாழ்விலிருந்து அகற்றப்பட்டது. இதுதான் மதச்சார் பின்மை என்பதன் குறுகிய வரலாறு.

- Islam the Relion of the future :
by Syed Qutub. Page-50,52

இந்த மதச்சார்பின்மையை முஸ்லிம்கள் - இஸ்லாத்திலிருந்து வெளியே கொண்டு வந்திட மிகவும் லாவகமாகப் பயன்படுத்திக் கொண் டார்கள். முஸ்லிம்கள் மிக எளிதாக பலியாகிவிட்டார்கள்.


vaigarai velicham official

மதச்சார்பின்மையின் வரலாற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. இஸ்லாத்தின் வரலாறு சுருக்கமாகச் சொன்னால், இஸ்லாம் - விஞ்ஞானத்தையும், அறிவியலையும் ஆக்கமும், ஊக்கமும் தந்து வளர்த்தது.

திருக்குர்ஆனில் 1000 விஞ்ஞான உண்மைகள் புதைந்துக் கிடக்கின்றன. அதுபோல் 750 இடங்களில் திருக்குர்ஆன் மனிதர்களை சிந்திக்கச் சொல்லித் தூண்டுகின்றன.

**மாரிஸ் புகையல்**

ஆனால் பிற்றை நாள்களில் மேலை நாட்டு மோகத்தில் வளர்ந்த முஸ்லிம் தலைமுறையினர் இஸ்லாத்தில் இந்த வரலாற்றை அறிந்திருக்கவில்லை. அவர்கள் தங்கள் அறியாமையால், மதச்சார்பின்மையின் காப்பாளர்களாக மாறிக் கொண்டார்கள்.

**ஜின்னா - மதச்சார்பின்மை இந்தியா**

இந்தியாவில் 1945/46களில் ஆங்கிலேயர்களின் கைகளிலிருந்து விடுதலை என்பது உறுதி அளிக்கப்பட்டது. இந்த நாள்களில் மதச்சார்பின்மைப் பற்றிப் பலரும் பேசினார்கள். அப்போது இந்திய விடுதலைப் போரின் தளகர்த்தர்களில் ஒருவரான முஹம்மத் அலீ ஜின்னா அவர்கள், இப்படிக் கூறினார்கள் :

இங்கே முஸ்லிம்கள் தங்கள் மத அடையாளங்களோடு வந்தால் அவர்கள் மத வெறியர்கள் என அழைக்கப்படுவார்கள். அதாவது மதச்சார்பின்மைக்கு எதிரானவர்கள் என அழைக்கப்படுவார்கள். ஆனால் இந்துகள் மத அடையாளங்களோடு வந்தவர்கள். அவர்கள் தேசியவாதிகள், தேச பக்தர்கள் என அழைக்கப்படுவார்கள். அதேநேரத்தில் முஸ்லிம்கள் இந்தியாவில் வாழும் காலமெல்லாம் நாங்கள் தேசபக்தர்கள் என்பதை நிரூபித்துக்கொண்டே இருக்க வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப் படுவார்கள்.

Muslims in India compiled (by. Mohammed A.G.Noorani) Also Refer : Muslims Against Partition of India.


Shamsul Islam

**இந்திய முஸ்லிம்களிடமிருப்பது என்ன?**

இந்திய முஸ்லிம்கள் மதச்சார் பின்மையை, முஸ்லிம் நாடுகளிடம் சென்று பேசுவார்களா? இந்தியாவில் வாழும் முஸ்லிம்கள் தங்களிடம் ஓர் அதிசயமான கொள்கை கையிலிருக்கின்றது என்பதை உணர்ந்திட வேண்டும். அது இஸ்லாம். இந்த இஸ்லாம் “மனிதர்கள் அனைவரும் சமம் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. இது இந்தியாவுக்கு மிகவும் அதிகமாகத் தேவைப்படுவது. அதைப் பேசட்டும்” அதாவது அதனைக் கொண்டு இந்தியாவை விடுவிக்கட்டும்.

Source : A World without islam by Graham E. Fuller

- MGM



# வழக்கினைப் போட்டவர் வழக்கினை திரும்பப் பெற்றார்



பீ.எம். அப்துல் கரீம்
(ஆலோசனைக்குழுத் தலைவர்
இ.இ.மு.சங்கம், குளச்சல்)

உத்தமர் உமர் (ரழி) கலீபாவாக ஆட்சி செய்யும்போது அவர்களிடத்தில் வழக்கொன்று வருகிறது. எங்கள் தந்தையை வேற்றூரைச் சார்ந்தவர் கொலை செய்துவிட்டார் கலீபா அவர்களே! இவ்வழக்கில் நீதி வழங்குங்களென முறையீடு செய்தார்கள் மரணமடைந்தவரின் இருமகன்கள்.

புகாரின் அடிப்படையில் கலீபா இவ்வழக்கினை விசாரிக்கிறார்கள். புகார் செய்தவர்களிடம் இக்கொலையைப் பார்த்த இரு சாட்சியார்? என்று கலீபா வினவ புகார் செய்த இருமகன்களுமே சாட்சி என்று பதில் சொன்னார்கள். மகன்கள் சாட்சி ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என கலீபா பதில் சொன்னார்கள்.

கொலை செய்தவரிடம் நீர் ஏன்? அந்த வயோதிகரை கொலை செய்தீர்? காரணமென்ன? என வினா எழுப்பினார்கள் கலீபா உமர் (ரழி).

கொலை செய்தவர் நான் மதீனாவுக்கு ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம் அவர்களின் அடக்கஸ்தலத்தை ஸியாறத் செய்ய வந்தேன். பிரயாண வாகனமான ஒட்டகத்தை கொலை செய்யப்பட்ட முதியவரின் ஈத்தமரத் தோட்டத்தை ஒட்டி கட்டியிருந்தேன் ஒட்டகமானது தோட்டத்தில் பழுத்து தொங்கிய ஈத்தம் பழத்தினை வாயால் கடித்து தின்றுவிட்டது. இதனைப் பார்த்த ஆத்திரத்தில் வயோதிகர் ஒட்டகத்தை கொன்றுவிட்டார். நான் வாகனத்தை இழந்ததால் ஆத்திரப்பட்டு தோட்ட உரிமையாளரான வயோதிகரை கொன்றுவிட்டேன். மாட்சிமை மிகும் கலீபா அவர்களே! இதுதான் நடந்தது. நீதி வழங்குங்களென வாக்குமூலம் சொன்னார். உண்மை நிலவரத்தைச் சொல்லி குற்றம் செய்ததை ஒப்புக்கொண்டாய் இக்குற்றத்திற்கு உனக்கு தூக்கு தண்டனை விதிக்கிறேன் என கலீபா சொன்னார்கள்.

குற்றம் செய்தவர் எனக்கு தண்டனை நிறைவேற்றுமுன் மூன்று நாள் அவகாசம் தர வேண்டும் கலீபா அவர்களே !

என்னிடம் அனாதைகளுடைய அடைக்கலப் பொருள் அமானிதமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனை நான் ஊர் சென்று உரியவர்களிடம் ஒப்படைத்து ஊர் திரும்ப மூன்று நாள் ஆகும். அதுவரை எனக்கு கால அவகாசம் தர வேண்டுமென்றார்.

கலீபா, அப்படியானால் இவருக்கு பொறுப்பு ஏற்பவர் யார்? என வழக்கு மன்றம் வந்தவர்களிடம் கேட்டார்கள். யாரும் முன்வரவில்லை. இறுதியில் நபிமணித் தோழர் அபூதர்ரில் கிப்பாரி (ரழி) முன் வந்தார்கள். அபூதர்ரிடம் கலீபா அவர் குறித்த காலத்தில் வராவிட்டால் உமக்கு தண்டனை நிறைவேற்றப்படுமென்று சொன்னார்கள். அபூதர் (ரழி) கலீபாவின் வேண்டுகோளை ஏற்றார்கள். கொலை குற்றவாளி ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். வழக்கு மன்றத்தில் யாருமே ஜாமீனுக்கு தயாராக இல்லாத போது அபூதர் (ரழி) முன்வந்தார்கள்.

மூன்றாவது நாள் தண்டனை நிறைவேற்ற ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஊர் சென்ற குற்றவாளி வந்து சேராததால் ஜாமீன் நின்ற அபூதர் (ரழி) தண்டனையை ஏற்க தயாராகிறார்கள். சப்தமிட்டபடி ஓடோடி வருகிறார் குற்றவாளி, கலீபா காலதாமதத்தின் காரணத்தை குற்றவாளியிடம் கேட்டார்கள். நடந்து வந்ததால் குறித்த நேரம் வந்து சேர முடியவில்லை. மன்னியுங்கள் தண்டனையை ஏற்றுக் கொள்கிறேன் என்றார்.

கொலை செய்யப்பட்டவரின் இரு புதல்வர்



vaigarai velicham official

களும் குற்றவாளி எதீம்களின் பொருளை ஒப்படைக்க எடுத்துக் கொண்ட முயற்சியையும் உணர்ச்சியையும், குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையையும் பார்த்து அவர் மீது இரக்கப்பட்டு கலீபாவிடம் தங்கள் வழக்கினை திரும்பப் பெற்றனர்.

நபித் தோழர்கள் அபூதர்கிஃப்பாரியிடம் முன்பின் தெரியாத வேற்றூர்க்காரருக்கு ஜாமீன் நிற்கலாமா? அவர் வராவிடில் நீங்கள் தானே தூக்குத்தண்டனை ஏற்க வேண்டியதிருக்கும் என வினவினர்.

நான் அவருக்கு ஜாமீன் கொடுக்க காரணம் அவர் ஒரு முஸ்லிம். இரண்டாவதாக நபிகள் நாயகத்தின் ஸியாறத்தை நாடி அன்டி மதீனா வந்ததால் அனாதைகள் மீது இருந்த அன்பையும் பார்த்து நான் மனமிரங்கி ஜாமீன் கொடுத்தேன் என பதில் சொன்னார்கள்.


இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு....!




வேர்கள் வெளியீட்டகம்

- மட்காவ்ன் (கோவா) குண்டு வெடிப்பு (2009):

2009ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் தேதி தீபாவளிக்கு ஒரு நாள் முன்பு மட்கால்ன் நகரைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான இந்துக்கள் ஒன்று கூடும் இடத்தை வெடிகுண்டு வைப்பதற்கென தேர்வு செய்திருந்தார்கள், சம்பவ இடத்தில் ஒரு கைப்பையை வைத்து விட்ட்டிருந்தார்கள். அதில் கான் மார்கெட் என அச்சிடப்பட்டிருந்தது.

- அந்தப் பையில் முஸ்லிம்கள் பயன்படுத்தும் அத்தர் நறுமணக் குப்பிகள் இருந்தன.

அதாவது திட்டமிட்டப்படி இந்தக் குண்டு வெடித்திருந்தால் நூற்றுக்கணக்கான அப்பாவி இந்துக்கள் மாண்டிருப்பார்கள். காவல்துறையின் சந்தேகம் உடனடியாக முஸ்லிம்கள் மீது தான் விழும். முஸ்லிம்கள் பலர் சிறைப்பட்டிருப்பார்கள். அவர்களுக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுகள் புனையப்பட்டு படுபயங்கரமான விஷயங்கள் ஊடகங்களில் பரப்பப்பட்டிருக்கும். அவையாவும் குற்றப்பத்திரிகையாக தாக்கல் செய்யப்படும். அவையும் ஊதி ஊதி பெருக்கப்படும். பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு இவையாவும் பொய்யானவை, உமையான குற்றவாளிகளை காவல்துறை கைது செய்யவில்லை என்று நீதிமன்றம் அவர்களை விடுதலை செய்யும்.......

- இந்த நூலிலிருந்து

விலை ரூ.30/-


படியுங்கள்! நாடு எங்கே போய்க் கொண்டிருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்!

பாசிசத்தை மாய்க்கவும் - பாரதத்தை பாதுகாக்கவும் முன் வாருங்கள்

போன் : 7401213394 / 7358278146 / 8148129887


# தினந்தோறும் வேண்டும் வெந்தயம்!

**பத்மஸ்ரீ டாக்டர். வி.எஸ்.நாகராஜன், முதியோர் நல மருத்துவர்**



வெந்தயத்தில் புரதம், நார்ச்சத்து அதிகம் இருக்கிறது. இயற்கையான எடைக் குறைப்புக்கு கைகொடுக்கும். பசியைக் குறைத்து உணவின் அளவைக் குறைப்பதோடு, உடல் பருமன் கொண்டவர்களின் பெரும் பிரச்னையாக உள்ள ரத்த அழுத்த உயர்வுக்கும் தீர்வு தருகிறது. வெந்தயம், நீரிழிவைக் கட்டுப்படுத்த இயற்கை கொடுத்த கொடை இது. நீரிழிவு உள்ளவர்களுக்கு உடலில் வளர்சிதை மாற்றத்தை மேம்படுத்தி, ரத்தச் சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்துகிறது. மாதவிடாய்க் காலத்தில் பெண்கள் எதிர் கொள்ளும் வலியைக் குறைக்கவும், மாதவிடாய்ச் கழற்சியை முறைப்படுத்தவும் வெந்தயம் பயன்படுகிறது.

- நன்றி முதுமை எனும் பூங்காற்று.

# ஒரு பெண்... ஒரு போர்... ஒரு வெற்றி...



**இஸ்லாம் என்ற பேரியக்கத்தின் வெற்றிக்குக் கட்டியம் கூறிய பெண்கள் ஏராளம் தாராளம்!**

இஸ்லாத்தின் வெற்றிக்கு வேகமாகவும் விவேகத்துடனும் உழைத்துக் கொண்டிருந்த அவர்கள் தங்கள் உரிமைகள் - கடமைகள் என்றெல்லாம் கவலைப்பட்டுக் கொண்டிருக்க வில்லை

அன்றைய நாட்களில், அதேபோல் அவர்கள் கொடி பிடித்து, கோஷம் போட்டுத் தங்கள் உரிமைகளுக்காக போர் ‘ஆட்டம்’ ஆடிக் கொண்டிருக்கவில்லை.

அவர்களது உரிமைகளை அவர்கள் கேட்காமலே அவர்களைப் படைத்த அல்லாஹ் அள்ளி வழங்கிக் கொண்டிருந்தான்.

அவர்களது கடமைகளை பொருத்தவரை அவர்களின் மென்மையையும், நளினத்தையும் புரிந்துகொண்ட அல்லாஹ் அவர்களின் தன்மைக்கேற்றார் போல மிகவும் குறைவான பணிகளையும், மென்மையான பணிகளையுமே கடமையாக்கினான். அவர்களின் இயல்பால் அவர்கள் படைத்தவனின் சிறப்புச் சலுகைக்கு உரியவர்களானார்கள்.

இப்படிக் கடமை, உரிமை என்ற கூப்பாடு களுக்கு அப்பால் நின்று முஸ்லிம் பெண்கள் தங்கள் முழுகவனத் தையும் முழு உழைப்பையும் இஸ்லாம் என்ற இந்த இயக்கத்தின் வெற்றிக்கு அள்ளித்தந்தார்கள்.

சிரமங்களையும், சித்திரவதைகளையும் ஏற்றார்கள். ஆனாலும் சற்றும் சளைக்காமல் எதிர்நீச்சல் போட்டுக் கொண்டே இருந்தார்கள். போர்க் காலங்களில் அவர்கள் செய்துகாட்டிய சாகசங்கள் ஒரு கோடி ஏடு தாங்கும்! இஸ்லாம் அதன் தொடக்க நாட்களில் எதிர்கொண்ட இன்னல்கள் ஏராளம்! அவை கர்ண கொடூர மானவை.

மக்காவிலிருந்து இறைவனின் இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மதினாவுக்கு வந்த நாள் முதலே மக்கத்து மக்கள் முஸ்லிம்களை அழிக்க ஆயத்தமாயினர். ஆயுத பலமும் ஆள் பலமும் கொண்டு.

எத்தனையோ தொடர் படையெடுப்புகளை நடத்தினார்கள் அந்த மக்கத்து மக்கள். ஒரு பட்டினிப் பட்டாளத்தைக் கொண்டு அந்த எதிரிகளை எதிர் கொண்டார்கள் இறைவனின் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள். அப்படி அவர்கள் எதிர் கொண்ட போர்களுள் ஒன்றுதான் அகழ் போர்.

மதீனா வந்த நாள் முதலே பெருமானார். (ஸல்) அவர்கள் அக்கம் பக்கங்களிலிருந்த

கோத்திரங்களோடும், குலங்களோடும் ஒப்பந் தங்களை செய்து கொண்டார்கள். இந்த ஒப்பந்தங்களின் நோக்கம் சுற்றியிருப்போரின் சூழ்ச்சிகள், தொல்லைகள், கீழறுப்பு வேலைகள் இவற்றிலிருந்து விடுவித்துக் கொண்டு இஸ்லாத்தை உலகின் ஏனைய பகுதிகளுக்கு எடுத்துச் செல்வதுதான்.

ஆனால் இஸ்லாத்தின் எதிரிகள் தங்களின் சூதுமதியை முஸ்லிம்களைச் சுற்றியே சுழல விட்டார்கள். அவர்கள் இறைவனின் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் எந்தெந்த குலங்களோடு ஒப்பந்தம் செய்து கொண்டி ருக்கின்றார்கள் என்பதைத் தேடிப் பிடித்தார்கள். அவர்களையெல்லாம் ஆசைவார்த்தை காட்டி அல்லாடச் செய்தார்கள். ஒப்பந்தங்களை மீறிடச் செய்தார்கள். எதிரிகள் சூழ்ச்சியின் அந்தக் குலங்களும் கோத்திரங்களும் பெருமானார் (ஸல்) அவர்களோடு செய்து கொண்டிருந்த ஒப்பந்தங்களை மீறினார்கள். முஸ்லிம்களை அழிக்கும் அணியில் தங்களையும் இணைத்து கொண்டார்கள்.

இப்படி அனைத்து அணிகளும் அண்ணலெம் பெருமானார் அவர்களுக்கெதிராகவும், முஸ்லிம்களை முற்றாக அழிக்கவும் அணி திரண்ட போர்தான் 'ஹந்தக்' என்ற அகழ்ப்போர்.

நாலா திசைகளிலிருந்தும் பெருமானார் (ஸல்) அவர்களுக்குச் செய்திகள் வந்தன. ஒப்பந்தங்கள் மீறப்பட்டுவிட்டன என்று. ஒரே ஒரு கூட்டம் யூதர்கள் மட்டும் அந்த அணியில் இணையவில்லை என்ற செய்தி மட்டும் தொக்கி நின்றிது. இறுதியில் அவர்களும் இணைந்து விட்டார்கள் என்ற செய்தியும் வந்தது. எதிரிகள் அனைவரும் அணி திரண்டு விட்டார்கள் முஸ்லிம்களை கொன்றொழிக்க என்றபோதும் முஸ்லிம்கள் நிலைகுலையாமல் நின்றார்கள்.

அவர்களின் மனநிலை எப்படி இருந்தது என்பதை அல்லாஹ் இப்படி கூறுகின்றான் தன் அருள்மறையில்,

விசுவாசிகள் எதிர்ப்பு அணியினரைக் கண்ட பொழுது "இதுதான் அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் நமக்கு வாக்களித்தது. அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் உண்மையே கூறினார்கள்" என்று சொன்னார்கள். தவிர (இவையாவும்) அவர்களுடைய விசுவாசத்தையும், வழிபாட்டையும் அன்றி (வேறொன்றையும்) அவர்களுக்கு அதிகரித்திடவில்லை.

(அல்குர்ஆன். அஹ்ஜாப் : 33:22)

ஆமாம்! அனைவரும் அந்த முஸ்லிம்களுக் கெதிராக அணி அமைத்து ஆயுதம் தாங்கி வருகிறார்கள் என்றபோது அவர்கள் அல்லாஹ்வின்மேல் கொண்ட நம்பிக்கை மேலும் வலுப்பெற்றது. அனைத்து எதிர்த் தரப்பாரும் அணி திரண்டு பத்தாயிரம் பேர் கொண்ட பெரும்படையொன்று தயாராக மதீனா மாநகர் நோக்கி வந்தது.

ஆனால் வழக்கத்திற்கு மாறாக அதாவது அரபு மக்களின் போர் தந்திரங்களுக்கு மாறாக அங்கே ஒரு பெரும் அகழி அவர்களை எதிர் கொண்டது. இந்த அகழி இஸ்லாத்தின் எதிரி களை, முஸ்லிம்களை அண்டவிடாமல் தடுத்தது. அகழி எதிரி அரபு மக்களுக்கு மட்டும் ஒரு புதிராகத் தெரியவில்லை. நன்கு தேர்ச்சி பெற்ற அவர்களின் குதிரைகளுக்கும் ஒரு பெரும் புதிராக இருந்தது.

பெருமானார் (ஸல்) அவர்கள் எதிரிகளின் பெரும் படைகளுக்கெதிராக அத்தனை முஸ்லிம் ஆண்களையும் அணிதிரட்டி (3000 முஸ்லிம்கள்) மதீனாவின் எல்லைக்குக் கொண்டு வந்திருந் தார்கள். பெண்கள் குழந்தைகள் அனைவரையும் உயரமான ஒரு கோட்டையில் மறைத்து வைத்திருந்தார்கள்.

அகழியொன்றை வெட்டி தங்களை (மதீ னாவை) அண்டவிடாமல் செய்து விட்டார்களே முஸ்லிம்கள் என்ற ஆதங்கம் எதிராக அணி திரண்ட (எதிர்ப்பு) அணியினருக்கு. எந்தப் பகுதி குறுகலானது எந்தப் பகுதி வழியாக மதீனாவுக்கு உள்ளே புகலாம் என்பதை காண்டுபிடிக்க மதீனாவை சுற்றி சுற்றி வந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களும் சற்றும் காலங்கடத்தாமல் ஓர் உருட்டுக் கட்டையை எடுத்துக் கொண்டு தாங்கள் பாதுகாப்பாக இருந்த உயரமான இடத்தி லிருந்து சற்று கீழே இறங்கி வந்தார்கள்.

அந்த யூதனை நோக்கி ஒரேஒரு முறை தாக்கி னார்கள். சுருண்டு வீழ்ந்தான் அந்த யூதவீரன்! ஜைத் (ரலி) அவர்களின் தலைமையில் முன்னூறு பேர் கொண்ட ஒரு படையை அனுப்பி மதீனாவின் நுழைவாயில்களைச் சுற்றிவரச்

செய்தார்கள். இதனால் எல்லாத் திசையிலும் ஒருபெரும் முஸ்லிம் படை இருப்பதைப் போன்ற தோற்றமொன்றை ஏற்படுத்தினார்கள். இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள்.

ஜைத் (ரலி) அவர்களின் தலைமை யில் அணிதிரண்ட இந்தப் படையினரும் ஒவ்வோர் இரவிலும் இறைவனைத்துதி செய்த வண்ணம் மதீனாவின் பாதைகளை வலம் வந்து கொண்டி ருந்தார்கள். ஆக எதிரிகளுக்கு எந்தப் பகுதியின் வழியாக மதீனாவுக்குள் புகுவது, எங்கிருந்து தாக்குதலை தொடங்குவது என்பனவற்றில் குழப்பம். இந்நிலையில் தான் பனீ குறைளா என்ற யூதர்கள், பெண்களை பெருமானார் (ஸல்) அவர்கள் பாதுகாப்பாக வைத்திருந்த இடத்தை தாக்கலாம் எனத் திட்டம் போட்டார்கள்.

இந்த யூதர்களின் கூட்டம் பெண்களைப் பாதுகாப்பாக வைத்திருந்த பகுதிக்குப் பக்கத்தில் இருந்தது. ஆனால் அவர்களுக்கோர் சந்தேகம், பெருமானார் (ஸல்) அவர்கள் வெறுமனே பெண்களை மட்டுந்தான் அங்கே வைத்து விட்டுப் போனார்களா அல்லது அங்கேயும் பாதுகாப்பிற்காக ஆண்களின் அணி யொன்றை நிறுத்திவிட்டுச் சென்றிருக்கிறார்களா? என்று ஐயம்.

இந்த சந்தேகத்தை நிவர்த்தி செய்திட தங்களுடைய அணியைச் சேர்ந்த ஒருவரை வேவு பார்க்க அனுப்பினார்கள் முஸ்லிம் பெண்கள் தங்கியிருக்கும் முகாமிற்கு. யூதன் ஒருவன் பெண்கள் முகாமிற்கு பக்கத்தில் வட்டமி டுவதைப் பார்த்துவிட்டார்கள் ஸஃபிய்யா பிந்த் அப்துல் முத்தலிப் (ரலி) அவர்கள். உடனேயே அந்த முகாமில் இருந்த ஒரே ஆண் ஹஸன் பின் தாபித் (ரலி) அவர்க ளிடம் சென்று சொன்னார்கள் ஸஃபிய்யா பிந்த் அப்துல் முத்தலிப் (ரலி) அவர்கள்.

ஹஸன் பின் தாபித் (ரலி) அவர்கள் தங்கள் இயலாமையை வெளிப்படுத்தினார்கள். (அவர்கள் உடல் நலமில்லாமல் தான் போருக்கு ஏனைய முஸ்லிம்க ளோடு போகவில்லை) சற்றும் காலங் கடத்தாமல் ஓர் உருட்டுக் கட்டையை எடுத்துக் கொண்டு தாங்கள் பாதுகாப்பாக இருந்த உயரமான இடத்திலிருந்து சற்று கீழே இறங்கி வந்தார்கள்.

அந்த யூதனை நோக்கி ஒரே ஒரு முறை தாக்கினார்கள். சுருண்டு வீழ்ந்தான். (வேவு பார்க்க வந்த யூதன்) மீண்டும் ஹஸன் பின் தாபித் (ரலி) அவர்களிடம் வந்து, அந்த யூதனின் ஆயுதங்களை கழற்றி எடுங்கள் எனக்கூறி னார்கள் ஸஃபியா பிந்த் அப்துல் முத்தலிப் (ரலி) அவர்கள்.

ஹஸன் பின் தாபித் (ரலி) அவர்கள் தங்கள் இயலாமையையே இப்போதும் வெளிப்படுத்த வேண்டியதாயிற்று.

மீண்டும் விரைந்தார்கள் யூதன் வீழ்ந்து கிடந்த இடத்திற்கு ஸஃபிய்யா (ரலி) அவர்கள். அவன் தலையை வெட்டி கீழ்நோக்கி உருட்டி விட்டார்கள். வேவு பார்க்க சென்றவனின் தலை மட்டுமே திரும்பிற்று என்பதை கண்ட யூதர்கள், பெண்கள் முகாமையும் தாக்கும் திட்டத்தைக் கைவிட்டார்கள்.

காரணம் வேவு பார்க்க ஆள் போன வேகத்தில் தலை திரும்ப வருகின்றது என்றால் முஹம்மத் (ஸல்) இங்கேயும் ஆயுதம் தாங்கிய பெரும்படையொன்றை நிறுத்தி சென்றிருக் கின்றார்கள் என்றே அவர்களால் முடிவு செய்ய முடிந்தது.

இப்படி அங்கிங்கெனாதபடி எங்கும் முஸ்லிம் படைகள் இருக்கின்றன என்ற எண்ணத்தையும் பீதியையும் ஏற்படுத்திட இந்த வீரமகளின் வீரச்செயல் பெரிய அளவில் பயன்பட்டது!

மதீனாவில் உள்ளே புகுந்து முஸ்லிம் களைத் தாக்கலாம் என்ற எதிரியின் திட்டம் தவிடுபொடியானது. ஸஃபிய்யா பிந்த் அப்துல் முத்தலிப் (ரலி) அவர்கள் நன்றாக அறிவார்கள் பெருமானார் (ஸல்) அவர்களோ, இதர முஸ்லிம் களோ அவர்கள் மதீனாவின் எல்லையில் செய்து கொண்டிருந்த பாதுகாப்புப் பணிகளை விட்டுவிட்டு உள்ளே வர முடியாது என்பதை.

இதை அவர்களே தங்கள் வாயால் சொல்லியுமிருக்கின்றார்கள்.

(ஆதாரம், இப்னு ஹிஷாம்)

இந்த அன்புச்சகோதரி உஹத் போரின்போது முஸ்லிம் போர் வீரர்களுக்குப் பணிவிடைகள் செய்யும் பயன் மிகு பணிகளைச் செய்தார்கள் என்பதை விடியல் ஜூலை 2003 மகளில் குறிப்பிட்டிருந்தோம்.


vaigarai velicham official

உஹது போரின்போது அவரது சகோதரர் ஹம்ஸா (ரலி) அவர்களின் இறந்த உடலை அவர்களிடம் தர வேண்டாம் என பெருமானார் சொன்னபோது அல்லாஹ்வுக்காக எதையும் தாங்கிக்கொள்வேன் உரைத்த உத்தம சகோதரி தான் சஃபிய்யா பிந்த் அப்துல் முத்தலிப் அவர்கள்.

உடன் பிறந்த சகோதரர் ஹம்ஸா (ரழி) அவர்களின் இறந்த உடலைக்கான அனுமதிக் கப்பட்டார்கள் சஃபிய்யா அப்துல் முத்தலிப் (ரழி) அவர் 'உடலைப் பார்த்தார்கள். அவர் அழவில்லை. "அல்லாஹ்விடமிருந்து வந்தோம்! அவனிடமே மீளுதலே என்று மட்டும் சொன்னார்கள்.

கவிதை இயற்றுவதில் புலமை மிக்க அவர்கள் தன் உற்ற உடன் பிறப்பிற்காக இப்படியொரு கவிதையை இயற்றினார்கள் அதனை பெருமானார் (ஸல்) அவர்களைப் பார்த்து சமர்ப்பிப்பதைப்போல் அமைத்திருந்தார்கள்:

"இன்று உங்களுக்கோர் பொழுது புலர்ந்தது.

ஆனால் அதில் சூரியன் இருட்டாய் போனான். எனினும் அது அதிகாலை தொட்டே பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது.' வீரமும், இலக்கிய வளமும் பெருமானாரின் பெருங் குலத்தில் தோன்றிய பேரும் பெற்ற சஃபிய்யா (ரலி) அவர்கள், ஹாரிஸ் அவர்களை மணந் திருந்தார்கள். இதில் ஒரு மகன் பிறந்தார் ஹாரிஸ் அவர்கள் மரணத்திற்குப் பின் அவாம் பின் குவைலித் அவர்களை மணந்தார்கள். இவர் கதீஜா(ரலி) அவர்களின் சகோதரர் ஜூபைர் (ரலி) அவர்கள், இந்தத் திருமணத்தில் மலர்ந்தார்கள். 73 வயது வரை வாழ்ந்த சஃபிய்யா (ரலி) அவர்களை ஹிஜ்ரி 20ல் அல்லாஹ் அழைத்துக் கொண்டான். இப்படி இஸ்லாம் என்ற பேரியக்கத்தின் வெற்றிக்கு உழைத்தவர்களில் ஒருவராய் இந்த உலக வரலாற்றிலும், அழகிய சொர்க்கத்திற்கு சொந்தக்காரராய் மறுமையிலும் வாழ்வாங்கு வாழ்கின்றார்கள் சஃபிய்யா பிந்த் அப்துல் முத்தலிப் (ரலி) அவர்கள்.

இந்த பெண்களின் பாரம்பரியமான முஸ்லிம் பெண்களைப் பார்த்து சிலர் இஸ்லாத்தில் உங்களுக்கு உரிமை இல்லை என்று சொல்லி தங்கள் அறியாமையை வெளிச்சம் போட்டுக் காட்டிடும் போது, நம்மால் சிரிக்காமல் இருக்க இயலவில்லை.






நூலைப்பெற

போன்:
7401213394
7358278146
8148129887

விலை
ரூ.50/-

முஸ்லிம்களை ஏன் கட்டுப்படுத்தாது என்றால், அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 25 முஸ்லிம்களுக்கும், சிறுபான்மையினருக்கும் மத விவகாரங்களில் முழு சுதந்திரத்தை வழங்குகின்றது. அரசியல் நிர்ணயச் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் ஆற்றல் மிக்கவையா? வழிகாட்டும் கொள்கைகள் ஆற்றல் மிக்கவையா என வருகின்றபோது அடிப்படை உரிமைகளே ஆற்றல் மிக்கவை. ஆகவே வழிகாட்டும் கொள்கையில் அமைந்துள்ள பிரிவு 44 நம்மை எந்த விதத்திலும் முஸ்லிம்களை கட்டுப்படுத்தாது. (ஆதாரம் *The Muslim of India. A Documentary Record by A.G.Noorani P.157-158)*

- நூலிலிருந்து




நூலைப்பெற

போன்:
7401213394
7358278146
8148129887

விலை
ரூ.25/-

இந்த சித்திரவதைக் கூடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுபவர்கள், தாங்கள் எங்கே அழைத்துச் செல்லப்படுகின்றோம் என்பதை அறிந்திடவே மாட்டார்கள். அவர்களின் கண்களை கட்டித்தான் அழைத்துச் செல்வார்கள். அவர்களை யாரும் சந்திக்க இயலாது. அவர்கள் தங்களை சித்திரவதைப் படுத்துபவர்களை மட்டுமே பார்த்திட இயலும். இவற்றில் முக்கிய சித்திரவதைக் கூடம் மும்பையிலுள்ளது. ஹயசநல – ஆய்ரி வசதி கூடம் என இதற்குப் பெயர். இங்கே நான்கு அறைகள் இருக்கின்றன. இங்கே வைத்துதான் 2006 மாலேகான் குண்டு வெடிப்போடு சம்மந்தப்பட்ட செய்யத் கான் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்பவர் விசாரிக்கப்பட்டார். சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்.

- நூலிலிருந்து

# அழைப்பின் அவசியம்

“எவர் அல்லாஹ்வின் பக்கம் (மக்களை) அழைத்து நற்செயலையும் செய்து, நிச்சயமாக நான் (அல்லாஹ்வுக்கு முற்றிலும் வழிபட்ட) முஸ்லிம்களில் உள்ளவன்” என்று கூறுகின்றாரோ அவரைவிட சொல்லால் அழகியவர் யார்? இருக்கின்றார். (ஹாமீம் ஸஜ்தா:33)

நாம் செய்கின்ற பணிகளில் மிகவும் சிறந்த, தலையாய பணி எதுவென்றால் அது அல்லாஹ்வின் பால் மக்களை அழைக்கின்ற பணியாகும். இந்த தாஃவா பணியைதான் எல்லா நபிமார்களும் எல்லா காலகட்டங்களிலும் செய்துள்ளனர். அல்லாஹ் நபிமார்களைப் பற்றி குர்ஆனில் கூறும்போது அவர்களுடைய அமல்களைப் பற்றி கூறவில்லை. மாறாக அவர்கள் செய்த தாஃவாவைப் பற்றிதான் அதிகமாக கூறுகிறான்.

நிச்சயமாக நாம் நூஹை அவருடைய சமூகத்தாரிடம் “நீர் உம் சமூகத்தாருக்கு நோவினை செய்யும் அவர்கள்மீது வருவதற்கு முன்னர் அச்சமூட்டி (அதுபற்றி) எச்சரிக்கை செய்வீராக என அனுப்பினோம்” (நூஹ்:1)

இப்ராஹிம் நபி தன் தந்தையை நோக்கி “என் அருமைத் தந்தையே கேட்க இயலாத (யாதொன்றையும்) பார்க்க இயலாத உங்களுக்கு எந்த தேவையையும் பூர்த்தி செய்ய இயலாதுமான ஒன்றை ஏன் வணங்குகிறீர்கள் என்று அவர் தம் தந்தையிடம் கூறியதை நினைவு படுத்தும்” (மர்யம்:42)

மத்தயன் நகரவாசிகளிடம் அவர்களுடைய சகோதரராகிய ஷுஐபை (நம் தூதராக அனுப்பி வைத்தோம்) அவர் (நம் கூட்டத்தாரை நோக்கி) “என் சமூகத்தார்களே அல்லாஹ்வையே வணங்குங்கள். அவனையன்றி உங்களுக்கு வேறு நாயனில்லை. நிச்சயமாக உங்களுக்கு உங்கள் இறைவனிடமிருந்து ஒரு தெளிவான (அத்தாட்சி) வந்துள்ளது. அளவை முழுமையாக அளந்து எடையைச் சரியாக நிறுத்துக் கொடுங்கள். மனிதர்களுக்கு அவர்களுக்கு உரிய பொருட்கள் (கொடுப்பதில்) குறைத்து விடாதீர்கள். பூமியில் சீர்திருத்தம் ஏற்பட்ட பின்னர் அதில் குழப்பம் உண்டாக்காதீர்கள். நீங்கள் முஃமீனாக இருந்தால் இதுவே உங்களுக்கு நன்மையாக இருக்கும் என்று கூறினார். (அல்அஃரபஃப்:85)

குர்ஆனில் பல இடங்களில் நபிமார்களின் வரலாறு பற்றி கூறும்போது அல்லாஹ், அவர்கள் செய்த தாஃவாவைப் பற்றி மிகவும் அழுத்தமாக நமக்கு கூறுகின்றான்.

குகைவாசிகளைப் பற்றி அல்லாஹ் இப்படி கூறுகின்றான் :

(கொடுமைக்கார அரசன் முன்னிலையில்) எழுந்து நின்று “வானங்களுக்கும் பூமிக்கும் இறைவானிய அவனே எங்களுடைய இறைவன். எக்காலத்தும் அவனையன்றி வேறு எவரையும்


vaigarai velicham official

நாயனென்று அழைக்க மாட்டோம் (அப்படிச் செய்தால் குஃப்ரில் கொண்டு சேர்க்கும்) - வரம்பு மீறியதைச் சொன்னவர்கள் ஆவோம்" என்று அவர்கள் உறுதியாக கூறிய நிலையில் அவர்கள் இதயங்களை நாம் வலுப்படுத்தினோம்"

(அல்கஹ்ஃபு:14)

லுக்மான் தன்னுடைய மகனுக்கு செய்த உபதேசத்தைப் பற்றி அல்லாஹ் திருமறையாம் குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான், அதில் முதன்மையானது.

"என் அருமை மகனே அல்லாஹ்வுக்கு இணை கற்பிக்காதே, இணை கற்பித்தல் மகத்தான அநீதியாகும்" என்று குறிப்பிட்டதை நினைவுட்டுவீராக. (லுக்மான்:13)

நபிமார்கள் நல்லடியார்கள் மட்டுமல்ல, பறவைகள்கூட தாஃவா பணியில் ஈடுபட்டதை பற்றி அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான். சுலைமான் (அலை) அவர்களின் வரலாற்றில் ஹுத்ஹுத் பறவை பற்றி கூறும்போது,

அந்தப் பறவை உலகை சுற்றித் திறிந்து இணை வைக்கக்கூடிய ஆட்சியாளர் பற்றி சுலைமான் நபியிடம் புகார் அளித்தது. அதைக்கொண்டு சுலைமான் (அலை) விசாரித்து அல்லாஹ்வின் பால் அவர்களுக்கு அழைப்பு விடுத்து அல்லாஹ்வை ஏற்கச் செய்தார்கள்.

சகோதரர்களே அல்லாஹ்வின்பால் மக்களை அழைக்கும் பணி என்பது இஸ்லாத்தில் நாம் செய்ய வேண்டிய பணிகளில் மிகவும் முதன்மையான பணியாகும். அதனால்தான் குர்ஆனில் கூறப்படும் வரலாறு முழுக்க தாஃவாவைப் பற்றி கூறப்படுகிறது.

இறைவனால் மன்னிக்கப்படாத இணை வைப்பு இன்று நம்மை சுற்றி நடந்து கொண்டிருப்பதை நாம் அன்றாடமும் பார்த்து, கடந்து சென்று கொண்டிருக்கின்றோம்.

நபி நூஹ் (அலை) அவர்கள் 950 வருடங்கள் அழைப்புப் பணியில் ஈடுபட்டுள்ளார்கள்.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள், ஒரு யூதர் மரணித்ததைப் பார்த்து வருத்தம் அடைந்தார்கள். நபி இருக்கும் காலத்தில் இறைவனை ஏற்காமல் மரணித்து விட்டாரே என்று முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்

ஒருவர் நம் மூலம் நேர்வழி பெறுவது என்பது நூறு செந்நிற ஒட்டகைகள் கிடைப்பதைவிட சிறந்ததாகும் என்றார்கள்.

தாஃவாவின் முக்கியத்துவம் அறிந்து அல்லாஹ்வின்பால் மக்களை அழைக்கின்ற பணியை நாம் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் அல்லாஹ் குர்ஆனில் நபிமார்கள், நல்லடியார்கள், பறவைகள் என அனைவரும் செய்த தாஃவா பணியை குர்ஆனில் பல இடங்களில் அல்லாஹ் நமக்கு கூறுகின்றான்.

இன்று உலகில் மனித குலத்திற்கு ஏற்பட்டுள்ள அனைத்து பிரச்சனைகளுக்கும் இஸ்லாம் கூறுகின்ற ஓர் இறைக் கொள்கையே சிறந்த வழியாகும்.

இப்படிப்பட்ட அழைப்புப் பணியை இறை நம்பிக்கையாளர்கள் கண்டிப்பாக செய்தாக வேண்டும்.





# நல்ல சூழலும் நல்ல நட்பும்

ஒருவரை நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்றால், அவருடைய நண்பர்களின் வட்டத்தை நன்றாகப் புரிந்து கொண்டால் போதும் என்பார்கள்.

ஆமாம்! நண்பர்களின் வட்டம் எப்படி ஒரு மனிதனின் குணத்திலும் ஒழுக்கத்திலும் ஆதிக்கம் செலுத்தும் என்பதை அடிப்படையாகக் கொண்டே இந்தச் சொற்கள் புழக்கத்தில் வந்தன. இது எப்படி வயது வந்தவர்களுக்குப் பொருந்துமோ அதேபோல் குழந்தைகளுக்கும் பொருந்தும்.

நமது குழந்தைகள் நல்ல சூழலில் வளருகின்றன என்பதை ஊர்ஜிதம் செய்வது எப்படி முக்கியமோ அதேபோல் அவர்களுக்கமையும் நண்பர்கள் (தோழர்களின்) வட்டமும் நலமானதாக இருக்க வேண்டும் என்பதையும் பெற்றோர்கள் உறுதி செய்ய வேண்டும்.

குழந்தைகளைப் பொருத்தவரை நண்பர்களை நாடும் பழக்கம் சின்ன வயதிலேயே தொடங்கிவிடுகின்றது.

குழந்தைகள் தூங்காத நேரத்தில் ஒரு நண்பனை அல்லது ஒரு நபரைத்தேடும்.

குழந்தைகள் தன்னந்தனியாக விடப்பட்டிருக்கிறோம் என்பதை உணர்ந்தால் ஓங்கி ஓசை கூட்டி அழும்.

பிறந்த நாளிலிருந்து மாதங்கள் நகர, நகர குழந்தைகள் விழித்திருக்கும் நேரம் அதிகமாகும். விழித்திருக்கும் நேரம் அதிகமாக அதிகமாக இன்னொரு நண்பரின் (நட்புக்கான) தோழமைக்கான ஏக்கமும் அதிகமாகும். முதன் முதலில் அவர்கள் தங்கள் பக்கத்தில் தங்களுக்கு வேண்டியவர்கள் இருக்க வேண்டும் என விரும்புவார்கள்.

**வேண்டியவர்கள் கிடைத்துவிட்டால் :**

அந்த வேண்டியவர்கள் செய்வனவற்றோடும் அவர்கள் பேசுவனவற்றோடும் தங்களையும் பிணைத்துக்கொள்ள வேண்டும் என விரும்புவார்கள்.

இதனை வெளிக்காட்டும் விதமாக மழலைகள் உடலை வளைத்து நெளிப்பார்கள். கண்களாலும் கைகளாலும் விரைந்து கொண்டு வருவார்கள். காலம் கடந்து பேசிட தலைப்படும் போது அவர்களுக்குப் பிடித்தவற்றைப் பேசிடவும் அவர்களுக்குப் பிடித்தவற்றைச்


vaigarai velicham official

செய்திடவும் உதவும் நண்பர்களை நாடுவார்கள். அவர்களின் தோழர்கள் அவர்களின் வயதை உடையவர்களாகவே இருக்க வேண்டும் என விரும்புவார்கள்.

இந்த நண்பர்கள் உடலால் உடனிருந்தால் குழந்தைகள் ஒரு பாதுகாப்பு உணர்வைப் பெறுகிறார்கள். அவர்கள் பேசுவதையும் செய்வதையும் உன்னிப்பாக கவனிப்பார்கள். அப்படியே உள்ளத்தில் பதியவும் செய்வார்கள் பசுமரத்து ஆணிபோல். இந்த நண்பர்களால் குழந்தைகளின் எண்ணத்தை முதலிலும், செயல்களை இரண்டாவதும் திசை திருப்ப முடியும். குழந்தைகளின் Personality என்று ஆளுமையில் இந்த நண்பர்கள் நிறைந்து ஆதிக்கம் செலுத்துகிறார்கள். நண்பர்கள் நல்லவர்களாக அமைந்துவிட்டால் குழந்தைகள் இதர வழிகளில் கற்றுக் கொள்ளமுடியாதவற்றையும் கற்றுக் கொள்கின்றார்கள். : அறிவின் வளர்ச்சிக்கு நட்பு ஒரு நல்ல வழி.

அதேபோல் நண்பர்கள் நடவடிக்கையில் கெட்டவர்களாக இருந்தால் அவையும் அவர்களிடம் பதிந்துவிடுகின்றன அதிவேகமாக!

நண்பர்களின் சகவாசம் நாள்தவறாமல் கிடைத்தால் குழந்தைகள் நாலுபேரோடு எப்படி நடந்துகொள்வது என்பதை அனுபவ ரீதியாக அறிந்துகொள்வார்கள். எல்லோரோடும் எப்படி இயைந்துபோவது என்பதைக் கற்றுக்கொள்வார்கள். பொதுவாக நாம் ஒரு மூடநம்பிக்கையை வளர்த்துக் கொண்டிருக்கின்றோம் என்கின்றார்கள் ஆய்வாளர்கள்.

அந்த மூடநம்பிக்கை, “சில குழந்தைகள் இயல்பாக அடுத்தவர்களை அண்டிப்பழகி ஆற்றல் பெற்றவை. சில குழந்தைக் இதற்கு மாறாக யாரோடும் இயல்பாகவே ஒட்டிக் கொள்ளமாட்டா.” என்பதே குழந்தை வளர்ப்பில் மேற்கண்ட ஆய்வுகள், இவை உண்மையல்ல என்பதை உரக்க அறிவிக்கின்றன. அதே நேரத்தில் ஆராய்ச்சிகள் வேறொரு உண்மையை உறுதிப்படுத்துகின்றன.

அது, மிகவும் சிறிய பருவத்தில் (மழலைப் பருவத்தில்) குழந்தைகள் பெறும் தோழமைகள் அவர்களின் எதிர்கால எண்ணங்களையும் சிந்தனைகளையும் வடிவமைக்கின்றன. அவர்களிடம் பல தனித்தன்மைகள் படிய அல்லது தோன்றிட இந்த இளமைக் காலத் தோழமைகள் பெரிதும் பயன்படுகின்றன.

எதிர்வரும் நாட்களில் சமுதாயச் சிக்கல்களை எப்படி அவிழ்ப்பது என்ற பயிற்சி ஒன்றை இந்த இளமைக்கால நட்புகள் ஏற்படுத்தித் தருகின்றன. இதுவும் ஆராய்ச்சிகள் அறிவுறுத்தும் உண்மையாகும். எடுத்தேன் - கவிழ்த்தேன் என்று நடக்கும் குழந்தைகளை தோழர்களாக, நண்பர்களாகப் பெறும் குழந்தைகள் எல்லா வாழ்க்கை சூழ்நிலைகளிலேயும் அப்படியேதான் நடக்கும். இதற்கு மாறாக, இரக்கம் நல்ல சிந்தனை இவற்றின் அடிப்படையில் நல்ல



ஒழுக்கத்தோடு உலகை அணுகும் குழந்தை களைத் தோழர்களாகப் பெறுபவர்கள் வாழ்க் கையின் எஞ்சிய பகுதியினையும் அப்படியே எதிர்கொள்வார்கள். நமது குழந்தைகள் அவர் களின் நண்பர்களுடன் பழகும்போது ஒன்று நடந்துவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்

அது, "இதர குழைந்தைகள் நமது குழந்தையை மட்டந்தட்டாமல், இழிவாக நடத்தாமல், குறை குத்திப் பேசாமல் பார்த்துக் கொள்ளுங்கள். இத்தகைய நண்பர்கள் வட்டத்தில் நமது குழந்தைகள் சிக்கிக் கொண்டால், அந்தக் குழந்தை ஒரு சித்திரவதைக் கூடத்தில் சிக்கிக் கொண்டது என்று பொருள். உடனேயே இந்த சித்திரவதைக் கூடத்திலிருந்து நமது குழந்தைகளை விடுவித்துக்கொள்ளுங்கள். இல்லையேல் நமது குழந்தை, விரக்தியின் விளிம்பிற்குச் சென்று விதர்ப்பமான பழக்கங் களை வளர்த்துக்கொள்ளும். பழிதீர்க்க வேண்டும் என்றொரு தணியாத தாகம் அவர்களைப் பீடித்துக்கொள்ளும். வாழ்க்கையை விபரீத செயல்களால் நிரப்பிடாமல் தடுத்திட வேண்டும். இந்த இழிவான நட்புக்கு நமது குழந்தைகள் இலக்காகி விடாமல் தடுத்தேயாக வேண்டும்.

தீய நட்புகள் ஈமானையே - இறை நம்பிக்கையையே இடறிவிட முடியும். இறைவன் மீது கொள்ளும் நம்பிக்கை நஷ்டமாகி விட்டால் இந்த உலக வாழ்க்கையும் மரணத் திற்குப் பின்னால் வரும் வாழ்க்கையும் பாழாகிப் போகும்.

அந்நிலையில் நியாயத் தீர்ப்பு நாளில் நட்பால் நஷ்டமடைந்தவர்களின் நிலை எப்படி இருக்கும் என்பதை இறைமறை இப்படிச் சுட்டிக் காட்டுகின்றது:

'இந்நாளில், அக்கிரமக்காரன் தன் இரு கைகளையும் கடித்துக்கொண்டு (நம்) தூதருடன் நானும் நேரான வழி யைப்பின்பற்றி யிருக்க வேண்டாமா?' என்று கூறுவான்.

(அன்றி) "என்னுடைய துக்கமே! (பாவம் செய்யும்படி என்னைத் தூண்டியது) இன்னானை நான் என்னுடைய சினேகிதனாக ஆக்கிக் கொள்ளாதிருக்க வேண்டாமா? என்னிடம் நல்லுபதேசம் வந்த பின்னரும், அதிலிருந்து அவன் தான் என்னை வழிகெடுத்து விட்டான்! அந்த ஷைத்தான் மனிதனுக்கு பெரும் சதிகார னாக இருந்தான். (என்றும் பிரலாபிப்பான்.)"

(அல்குர்ஆன், ஃபுர்கான் 25:27-29)

இந்த இறைவசனங்கள் 'உக்பா' என்பவர் தன் நண்பர்களால் வழிகெடுக்கப்பட்ட வரலாற்றைக் குறிக்கும் என்கிறார்கள் அல்லாமா யூசுஃப் அலீ (ரஹ்) அவர்கள் தங்களது திருமறை விளக்கத்தில்,

அச்சமயம் இவனுடைய (இணை பிரியாத) சிநேகிதன் "எங்கள் இறைவனே! நான் இவனை நிர்பந்தித்து வழிகெடுக்கவில்லை, ஆனால் அவனே வெகுதூரமான வழிகேட்டில் சென்று விட்டான்" என்று கூறுவான்.

(அல்குர்ஆன், காஃப் 50:27 )

இதுபோன்ற இழப்புகளுக்கு இட்டுச் செல்லாத நல்ல நண்பர்களை நமது குழந்தை களுக்கு மழலைப் பருவத்திலிருந்தே பெற்றுத் தருவோம். வாழ்க்கை ஓட்டத்தில் குழந்தைகள் வளர, வளர, மலர, மலர அவர்கள் எதிர் கொள்ளும் நட்பின் வகைகளைப் பற்றி எதிர்வ ரும் இதழ்களில் காண்போம்

(இன்ஷா அல்லாஹ்)

- MGM





vaigarai velicham official



# பசுவதைத் தடைச் சட்டம்

## ஒரு பார்வை...

மக்களவையில் வேளாண்மைத் துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் ‘பசுக்களைக் கொடுமை களுக்கு குள்ளாக்கும் சட்டமுன்வரைவு 2003 (Prevention of Cruelty to Cows Bill 2003) மசோதாவை 218.2003 அன்று அறிமுகம் செய்ய முயன்றார். தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க., தெலுங்குதேசம், திரிணாமூல் காங்கிரஸ் ஆகிய ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் உறுப்புக் கட்சிகளே இம்மசோதாவை அறிமுக நிலையிலேயே கடுமையாக எதிர்த்தன.

குஜராத் இனப்படுகொலை 2002ன் போது மாநில அரசுமீது உரிய நட வடிக்கை எடுக்காமல் கலவரத்தின் பார்வையாளராக கொலுவீற்றிருந்த குஜராத் அரசைக் கண்டிக்கும் முகமாக 184வது பிரிவின் கீழ் வாக்கெடுப்புடன் கூடிய விவாதம் நாடாளுமன்றத்தில் நடந்தபோது ஜனநாயக மாண்புகள், மனித நீதி, தார்மீக நெறி இவற்றுக் கெதிராக, நடுவன் அரசை ஆதரித்த அக்கட்சிகள் பசுவதைத் தடை மசோதாவை அறிமுக நிலை யிலேயே எதிர்ப்பதற்குக் காரணம் நெருங்கிவரும் தேர்தல். தேர்தல் தவிர வேறில்லை.

உண்மையிலேயே இப்படியொரு சட்டம் இவர்களுக்குத் தேவை என்றால் இவர்கள் ஆட்சியில் அமர்ந்தவுடன் இதனைச் செய்திருக்க வேண்டும். இன்னுஞ்சொன்னால் இவர்கள் 125 ஆண்டுகளுக்கு முன்னாலேயே இப்படி சட்டத்தைப் பற்றிப் பேசி வருகின்றார்கள்.

அரசியல் நிர்ணயச் சட்டம் வகுக்கும் போது இதை வகையாக வழிகாட்டும் கொள்கையிலும் இணைத்துவிட்டார்கள். 1967ல் மிகப்பெரிய தொரு போராட்டத்தை டெல்லியில் நடத்தி டெல்லியின் வீதிகளில் இரத்த ஆற்றை ஓட்டினார்கள். அப்போது நமது கர்மவீரர் காமராஜர் காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவ ராக இருந்தார்கள்.

ஏழை பங்காளர் காமராஜர் அவர்கள், “இவர்கள் ஏன் இங்கே கபளீகரங்களைச் செய்கின்றார்கள்” என்று இன்றைய பாரதீய ஜனதா கட்சியின் அன்றைய வடிவமான ஜனசங்கத்தைக் கேட்டதற்காக காமராஜர் அவர்களைக் கொலை செய்யப்போனார்கள், எட்டுபேர் பலியானார்கள்.

நல்லவேளையாக காமராஜர் அவர்கள் தப்பித்துக்கொண்டார்கள். இவர்களின் முயற்சி வெற்றி பெற்றிருந்தால் அன்றே நாம் தென்னகத்தின் தலை சிறந்த தலைவர் காமராஜர் அவர்களை இழந்திருப்போம்.

இவர்கள் ஆட்சிக்கு வந்தபின் 2001ல் கமிஷனை அமைத்தார்கள். அந்த கமிஷனின் பெயர் (National Commission on Cattle) தேசிய கால் நடைகள் (மிருகங்கள்) ஆணையம். இதன் தலைவராக பாரதீய ஜனதா கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர்களுள் ஒருவரான குமான் மால் லோடா என்பரை நியமித்தார்கள். இவர் ஒரு முன்னாள் நீதிபதி.



இந்த ஆணையம் பசுவை அறுப்பதை ஒட்டுமொத்தமாகத் தடை செய்ய வேண்டும் என பரிந்துரைத்தது. இது அனைவரும் எதிர்பார்த்த ஒன்றே.

இந்தப் பின்னணியில் 2002 ஜூலை மாதத்தில் பிரகலாத் சிங் பட்டேல் என்பவர் ஒரு தனிநபர் மசோதாவைக் கொண்டுவந்தார்.

இந்த மசோதாவை எதிர்த்து எதிர்க் கட்சிகள் அனைத்தும், வெளிநடப்புச் செய்தன. அந்நிலை யில் அம்மசோதா குரல்வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.

கடவுளின் பெயரால் மனித சமுதாயத்தில் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பாகுபாட்டைப் புகுத்தி மனித' இனத்தை பிளந்துபோடுவதில் வெற்றி கண்டு விட்டவர்கள் மதத்தின் பெயரால் மிருகங்களிடையேயும் பாரபட்சம் காட்டு கின்றனர். அதைக் கொண்டு ஒரு சமுதாயத்திற்கு நெருக்கடி கொடுக்கச் சட்டம் இயற்றுகின் றார்கள். அவைகள் என்ன பாவம் செய்தா?

எந்த மிருகத்தையும் வதை செய்வது கூடாது என்பதே எல்லா மதங்களும் சொல்லும் சேதி ஆனால் இந்தச் சட்டம் பசுக்களை அறுப்பது, பசுக்களை வெளி நாடுகளுக்கு அனுப்புவது மாட்டிறைச்சியை விற்பனை செய்வது பசுக் களைக் காயப்படுத்துவது கொலை செய்வது இவற்றை பிணையில்கூட விடமுயாத குற்றங்கள் எனக் குறிப்பிடுகின்றது. பசுவை மட்டுமல்ல பசுவின் வம்சா வளியையும் பாதுகாக்க வழிகாணப் போவதாக இந்தச் சட்டமுன்வரைவு குறிப்பிடுகின்றது.

அரசியல் சாசனத்தின் வழிகாட்டும் கொள்கைகள் Directive Principles பிரிவு 40 பசுவதைத் தடையை வலியுறுத்துகிறதே என்பார்கள், உண்மையில் அப்பிரிவு "உயர்ரக கால்நடைகளைப் பராமரிப்பதற்கும் மேம் படுத்துவதற்கும் பசுக்கள், கன்றுகள், மற்ற பால்தரும் விலங்குகள் வறட்சியுள்ள கால் நடைகள் ஆகியவற்றை வதை செய்வதை தடுப் பதற்கும் வேண்டிய முயற்சிகள் அரசு எடுக்க வேண்டும்' என்கிறது. அதாவது பசுவை மட்டு மல்ல, பிராணிகள் வதையை தடுக்கிறது.

இந்தப் பின்னணியில் வரையப்பட்ட சட்டமே மிருகங்கள் இம்சைகளைத் தடை செய்யும் சட்டம் 1966 தமிழ்நாட்டு மிருகத் தடுப்புச் சட்டம் 1950 என்றொன்று இருக் கின்றது. அதனை இப்போது செயல்படுத்தவும் செய்கின்றார்கள்:

அல்லாமல், இப்படி மிருகங்களை அல்லல் களுக்குள்ளாக்கும் செய்வைத் தடை செய்யும் சட்டங்களை யாத்திடும். உரிமை மாநில அரசுகளுக்கே உண்டு. அதில் மத்திய அரசு தலையிடுவது மிகவும் தவறானது.

அதுவும் தேர்தல் நேரத்தில் பலவை முன்னிறுத்தி ஒரு சட்டத்தைக் கொண்டு வருவது அனைத்துத் தரப்பையும் ஆத்திரத்தில் ஆழ்த்தி யுள்ளது.

இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததன் உண்மையான நோக்கத்தை நாடாளுமன்றத்தில் இந்தச் சட்டத்தை எதிர்த்தவர்கள் போட்டுடைத் தார்கள். ஆமாம் இந்தச்சட்டத்தின் நோக்கம்

(Communal polarisation வாக்காளர்களை இந்துக்கள் - முஸ்லிம்கள் - கிறிஸ்தவர்கள் எனப் பிரிப்பதும். பின்னர் இந்துக்களின் இரட்சகர்களாக பாரதீய ஜனதாவைக் காட்டி மத அடிப்படை வாதத்திற்கும் வாக்கு வங்கிகளை உருவாக்குவதற்கும் வழிகாண்பதே

எதிர்வரும் தேர்தலை மையமாகக் கொண்டு தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகின்றது என்பதற்கு இன்னொரு அப்பட்டமான அத்தாட்சி, பல மாநிலங்களில் இந்தச் சட்டம் இருக்கும்போது நாடாளுமன்றத்தில் ஒரு புதிய சட்டம் கொண்டுவருவதைப்போல் நடித்ததுதான்.

இவர்களுக்கு தேர்தல் நேரத்தில் ஏன் பசுவின் மீது பாசம் வந்தது? இதற்கான உண்மையான காரணத்தை மறைத்து விட்டார்கள். வேறு காரணங்களைச் சொல்லி இருக்கின்றார்கள்.

அவை கடந்த காலங்களில் பசுக்கள் பலவித அல்லல்களுக்கும் கொடுமைகளுக்கும் ஆளாக்கப்பட்டு வருகின்றன. இதனால் பசுக்களின் வளர்ச்சி விகிதம் (இதை இனப்பெருக்க விகிதம் எனலாம்) மிகவும் குறைந்துவிட்டது.

இத்தனை மனிதர்களுக்கு இத்தனைப் பசுக்கள் இருக்க வேண்டும் என்ற விகிதாச் சாரமும் மிகவும் குறைந்து வருகின்றது.

இதனால் தேசிய நலனை முன்னிட்டு பசுக்களை அவஸ்தைபடுத்துவதை தடுக்கின்ற சட்டம் ஒன்றைக் கொண்டு. வருவது தவிர்க்க இயலாத ஒன்றாகி விட்டது. இதில் பசுக்களைக் கொலை செய்வதும் அடங்கும் பசுக்களைக் கொலை செய்வதுதான் உச்சபட்ச கொடுமை யாகும்.

இந்தச் சட்டம், பால்கறக்காத பக்கள் விவசாயத்திற்கோ இதர தொழில்களுக்குகோ பயன்படாத பசுக்கள் - மாடுகள். நோய் வாய்ப் பட்ட பசுக்கள் - ஊனமுற்ற பசுக்கள் பாதுகாப் பற்ற பகக்கள் - மாடுகள் செயலிழந்துவிட்டப் பசுக்கள் இவற்றை வரவேற்று பராமரித்து வைக்க மாநில அரசுகள் நிறுவனங்களை ஏற்படுத்த வேண்டும் எனக் கூறுகின்றது.

பகவதை என்பதில் அதிகமாகப்பால் கறக்க வேண்டும் என்பதற்காக ஊசி போடுவது போன்ற முறைகளைக் கையாள்வது, நோய் வாய்ப்பட்டிருக்கின்றது எனத்தெரிந்து கொண்டே தெருக்களில் அவிழ்த்துவிட்டு விடுவது போன்றவையும் பசுவை அல்லல்களுக் குள்ளாக்குவது என்பதன் பாற்படும்.

பசு அல்லது மாட்டின் சொந்தக்காரரர் இவற்றில் எதுவும் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். (இல்லையேல் அவர் தண்டிக்கப்படலாம்)

இந்தச் சட்டத்தை மீறுபவர்கள் பசுவை கொலை செய்பவர்கள். அதற்கு பக்கத்துணை யாக இருப்பவர்கள் இவர்களுக்கு இரண்டாண்டு களுக்குக் குறையாமல் கடுங்காவல் தண்டனை வழங்கலாம்.இந்தத் தண்டனை ஏழு ஆண்டுகள் கடுங்காவல் எனவும் நீளலாம்.

கடுங்காவல் தண்டணையோடு ரூபாய் 10000 வரை அபராதமும் விதிக்கலாம்.

பசுவுக்கு ஏதேனும் காயம் ஏற்படுத்தி விட்டால் அவருக்கு ஐந்தாயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

இந்தச் சட்டங்களைச் செயல்படுத்திடும் அதிகாரம் ஒரு சப்-இன்ஸ்பெக்டரைச் சாரும். அவர் பசுக்களை கடத்திச் செல்லும் அல்லது கடத்திச் செல்ல பயன்படுத்தப்படலாம் என கருதும் வாகனங்களை சோதனை செய்யலாம், பறிமுதல் செய்யலாம். நல்ல எண்ணத்தோடு இந்தச் சட்டத்தைச் செயல்படுத்திடும்போது எந்த அதிகாரியாவது இதில் தவறு செய்தால், அவர்மீது யாரும் எந்தச் சட்டத்தின்கீழும் நடவடிக்கை எடுக்க முடியாது.

இந்தச் சட்டம் எந்த விதமான வெறியையும் வெளிப்படையாக வெளிபடுத்தவில்லை. ஆனாலும் இதில் பாரதிய ஜனதா கட்சியின் இந்துத்துவக் கொள்கையின் முகம் மறைந்து கிடக்கின்றது என்பதையும் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தை குறிவைப்பது என்பதையும் கண்டுகொள்ளலாம்" என்கிறார் நாகலட்சுமி என்ற பிரபல பாத்திரிகையாளர்.

Frontline Sep 12, 2003

**பசுவதை சட்டத்தைக் கொண்டுவருவதற்காகச் சொன்ன சாக்கு போக்குகள்.....**

இப்படியொரு சட்டத்தை இப்போது

கொண்டுவருவதற்குக் காரணமாகக் கூறப்படுவது பசுக்களின் எண்ணிக்கை பெருக்கம் குறைந்து வருகின்றது என்பதே.

இல்லை! நம் நாட்டில் போதிய அளவில் பசுக்கள் இருக்கின்றன என்கின்றது ஆய்வுகள்.

நமது நாட்டில் வீட்டு விலங்குகள் எனப்படும் (Domestic Animals) விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் மிருகங்களும் மக்களுக்கு பால் போன்றவற்றை வழங்கும் மிருகங்களும் 50 கோடிக்குமேல் இருக்கின்றன.

உலகிலேயே இந்தியாவில்தாம் மனிதனுக்குப் பயன்தரும் மிருகங்களின் எண்ணிக்கை மிகவும் அதிகம்.

உலகில் மொத்தமுள்ள பாதி அளவு (26 கோடி) இந்தியாவில்தான் இருக்கின்றவனாம் 85 கோடி பசுக்கள் வாழுகின்றன. பல லட்சம் ஹெக்டேர்களை உழுவதற்கும் பயிர் வளர்ப்பதற்கும் வயிறு பிழைப்பதற்குக் காளைகள்தாம் பயன்படுத்தப்படுகின்றன. இது உலகில் இருக்கும் பசுக்களில் 15 சதவிகிதமாகும்.

“நமக்குத் தேவையானவற்றை தருவதில், அதாவது பால் தருவது, பொருள்களை ஏற்றிச் செல்வது, நிலங்களை பண்படுத்தப் பயன் படுவது ஆகியவற்றிற்கு நமது நாட்டிற்கு எவ்வளவு தேவையோ அதைவிட அதிகமாக வீட்டு மிருகங்கள் இருக்கின்றன” என்கின்றது ஆய்வுகள்.

அத்தோடு நிற்கவில்லை இந்த ஆய்வுகள் இன்னொரு உண்மையும் வெளிச்சத்திற்கு கொண்டு வருகின்றன.

அது, வயதாகிவிட்ட வீட்டு விலங்குகள், ஏழை, எளிய விவசாயிகளுக்கு ஒரு பெரும் சுமையாகவே ஆகிவிட்டன.

வயதாகிவிட்ட மாடுகள், பசுக்கள் எந்த பலனையும் தரமாட்டா. இந்த விலங்கினங்களை வறுமையில் வாடிடும் ஏழை, எளிய மக்களால் உணவூட்டவோ பார்க்கவோ இயலாது.

நிலமில்லாமல் கூலிக்கு மாடு பிடிக்கும் விவசாய தொழிலாளர்களின் நிலைமை இன்னும் மோசம். அவர்களின் இந்த விலங்குகளை அவை பசுவாகவோ, எருமையாகவோ ஆடாகவோ



இருக்கட்டும். அவற்றை விற்றுத்தான் பஞ்சம் பிழைக்கிறார்கள். அவைதான் கால்நடைகளுக்கு வருகின்றன. - (Asha Krishna Kumar)

பல மாநிலங்களில் பசுக்களை அறுப்பது தடை செய்யப்படுள்ளதால் பெரும்பாலான பசுக்களும் மாடுகளும் அறுக்கப் படுவதற்காக கேரள மாநிலத்திற்கும் மேற்கு வங்கத்திற்கும் கொண்டு செல்லப்படுகின்றன. இதனால் கிடைக்கும் வருமானமும் இதர பலா பலன்களும் இந்த இரண்டு மாநிலங்களுக்குமே போய் சேர்கின்றன. மற்ற மாநிலங்கள் ஒரு பெரும் வருவாயை இழக்கின்றன.

அத்தோடு அனுமதி பெறாமல் இறைச் சிக்காக அறுக்கும் “SLAUGHTER HOUSES” மாடறுக்கும் இல்லங்களின் எண்ணிக்கைக்கும் குறைவில்லை. நாட்டில் 3600 மாடறுக்கும் இடங்கள் தாம் அனுமதிக்கப்பட்டவை. அதாவது லைஸன்ஸ் வழங்கப்பட்டவை. ஆனால் 32000 அனுமதி பெறாத மாட்றுக்கும் இல்லங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

இந்தச் சட்டம் செயலில் வந்தால் 4000 தோல்பதனிடும் ஆலைகளை மூட வேண்டியது வரும். இதனால் 25 லட்சம் தொழிலாளர்கள் வேலை இழப்பார்கள். இதில் மூன்றில் ஒரு பகுதி பெண் தொழிலாளர்கள்.

இந்தத் தொழிளாலர்களை நம்பி நிற்கும்


vaigarai velicham official

இந்த தொழில்களும் மூடப்படும். வேலை இல்லாத் திண்டாட்டம் பெருகும்.

ஏற்கனவே நலிந்து வரும் இந்திய பொருளாதாரம் சிதையும், சீர்கெடும் என்கிறார்கள் பொருளாதார நிபுணர்கள். 2002-2003ல் 18141 லட்சம் டாலர்களை நமது தோல் ஏற்றுமதி பெற்றுத் தந்தது. இது அப்படியே நஷ்டமாகும் இந்தச் சட்டம் அறங்கேறினால் என்கின்றார்கள் ஏற்றுமதியாளர்கள். இந்த இழப்பு நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்கெடுக்கும். 200 கோடி டாலர் அளவுக்கு இதர தோல் பொருள்களின் ஏற்றுமதியும் நின்றுபோகும் என்கிறார்கள். நாட்டை இப்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்கத் துடிக்கும் தேசபற்று மிக்க நிபுணர்கள்.

இறைச்சி மற்றும் அது சார்ந்த மாட்டிறைச்சிக்கான ஏற்றுமதியாளரான அனி எஸ். தாஸ் என்பவர், இந்தச் சட்டம் நமது மாட்டிறைச்சிக்கான சர்வதேச அங்காடி அதிகரித்து வரும்போது வந்திருக்கின்றது என தன் அதிர்ச்சியை வெளிப்படுத்தி இருக்கின்றார்.

இந்தச் சட்டம் பசுக்களை வைத்திருக்கும் ஒவ்வொருவரையும் வதைக்கும் என்கின்றார் டாக்டர் S.K. தோராட். (இவர் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்)

பால் கறந்து பிழைக்கும் ஏழை எளியவர்கள் ஏற்கனவே மாடுகளுக்குத் தீனி போட முடியாமல் தவிக்கின்றார்கள்.

தீனிக்கு ஆகும் செலவைவிட மிகக் குறைவாகவே இருகின்றது பால் விற்றுக் கிடைக்கும் வருமானம். அதனால் அவர்கள் கடன் சுமையால் கஷ்டப்படுகிறார்கள். இதில் எந்தப் பலனுமில்லாத பசுக்களையும் மாடுகளையும் கட்டிப்பிடித்து வைத்துக் கொள்ள வேண்டும் இல்லையென்றால் 10000 அல்லது 5000 ரூபாய் அபராதம் கட்டவேண்டும் என்றால் அவர்கள் என்ன செய்வார்கள். இனி வயதாகிவிட்டால் விற்கவும் முடியாது என்றால் பால் கறவை வற்றிப்போன பசுக்களை அவர்கள் என்ன செய்வார்கள் என கேட்கிறார் சிமிதா சிரோகி. இவர் தேசிய பால்பண்ணை ஆராய்ச்சி மைய கர்னல் ஆந்திராவின் மூத்த விஞ்ஞானியாவார்.

இவர் மேலும் கூறுகின்றார் :

மாடுகளை அறுப்பதைவிட தடை செய்து விட்டால் மாடுகளின் எண்ணிக்கை பல்கிப் பெருகும். அவற்றுக்ப் போடும் தீனியின் விலை கிடுகிடுவென எறும். இதனால் மாடு வளர்ப்பவர்கள் மிகையான சிறமத்திற்குள்ளாவார்கள். மாட்டை நம்பி பிழைப்பவர்கள் ரோட்டுக்கு வர வேண்டியதுதான்.

இப்போதே வருமானமில்லாத பசுக்களை மக்கள் துரத்திவிட்டுவிடுகிறார்கள். அவை குப்பைகளை மேய்கின்றன. அந்தக் குப்பைகளும் பிளாஸ்டிக்குகளாக இருக்கின்றன. அதை உன்னும் பசுக்கள் சீதம் பிடித்துச் சாவுகின்றன என்கிறார் சிரோகி.

உ.பி.யின் தலை நகர் லக்னவ், அந்த லக்னவ் மாநகராட்சி அண்மையில் அறிக்கையை வெளியிட்டிருக்கின்றது அந்த அறிக்கை இப்படிக் குறிப்பிடுகின்றது.

“லக்னவ் மாநகரில் தினமும் நூற்றுக்கு மேற்பட்ட பசுக்கள் குப்பைத் தொட்டிகளில் பிளாஸ்டிக்கை உட்கொள்வதால் இறந்து விடுகின்றன.” (Front Line:12.9.2003)

இவைதான் யதார்த்த நிலை என்கின்றபோது இந்தச்சட்டம் சாதிக்கப்போவதென்ன?

**கேரள மாநிலம்**

கேரள மாநிலம்தான் இந்தச் சட்டத்தால் அதிகமான பாதிப்புகளுக்கு உள்ளாகும் என்கிறார்கள் ஆய்வாளர்கள். பசுவை அறுப்பதை தடை செய்யாத பல மாநிலங்களில் ஒன்றாக கேரளா மாநிலம் இருக்கின்றது.

நான்கு லட்சத்து எண்பத்து மூவாயிரம் பசுக்கள், மாடுகள், எருதுகள் என்பன அங்கே வருடந்தோரும் அறுக்கப்படு கின்றன.

இவற்றிலிருந்து பெறப்படும் மாட்டிறைச்சியின் எடை 24278 டன் ஆகும். இது சட்டப்படி அனுமதி வழங்கப்பட்ட மாடறுக்கும் இல்லங்களில் அறுத்து எடுக்கப்படும் இறைச்சியாகும். இவை அல்லாமல் மனுமதி பெறாமல் அறுக்கப்படும் பசுக்கள், மாடுகள், எருமைகள் என்பன வற்றின் அளவும் அதேபோல் மூன்று மடங்காகும். அதாவது

அனுமதி பெறாத மாடறுக்கும் இல்லங்களி லிருந்து பெறப்படும் இறைச்சியின் அளவு 72834 டன்கள் ஆகும். மாட்டிறைச்சிக்காக கேரள அரசே மாட்டுப் பண்ணைகளை நடத்திவருகின்றது.

கேரளாவில் போதிய அளவில் மாட்டுத் தீனி கிடைப்பதில்லை. இதனால் மாட்டுத் தீவனத்தை இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. இறக்குமதி செய்யப்படும் மாட்டுத் தீவனத்தின் விலைமிகவும் அதிகம். இதனால் கேரள மக்கள் மாடு வளர்ப்பவர்கள் லாபமில்லாத மாடுகளையோ பசுக்களையோ வைத்துக் கொள்ள விரும்புவதில்லை.

இதனால் 1977 முதல் பால் கறக்கும் மாடுகளை மட்டும் பெற்றெடுக்கும் திட்டம் ஒன்றை விரைந்து செயல்படுத்தினார்கள். இதனால் கறவை மாடுகளின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்தது.

1977களில் தனக்குத் தேவையான பசும் பாலில் 50 சதவிகிதத்தையே கேரள மாநிலம் தங்கள் மாநிலத்திற்கு பெற்றது.

இப்போது அதன் முழு தேவையையும் நிறைவு பெற்று அண்டை மாநிலங்களுக்கு விற்பனை செய்யும் அளவுக்கு முன்னேறி உள்ளது.

இதற்கிடையில் பலன் தராத பசுக்களையும் காளைகளையும் இறைச்சிக் கடைகளுக்கு அனுப்பிவிட்டன. இதில் வருத்தம் தரும் சேதி என்னவெனில் மாட்டுத்தீவன விலையால் மக்கள் பயன்தரும் இலாபம் தரும் பிராணிகளையே பாதுகாக்க இயலாமல் கஷ்டப்படுகின்றார்கள். பலன் தராத பிராணிகளைப் பாதுகாப்பது என்பது அறவே இயலாத காரியம் என்கின்றார் டாக்டர் மு. நாராயணன் நாயர். இவர்தான் அரசின் கால்நடை பராமரிப்பின் தளகர்த்தர். (Cen- For Development Studies Thiruvananda puram) இத்தனைக்குப் பிறகும் கேரள மாநிலத்தில் மாட்டிறைச்சிக்குத் தட்டுப்பாடுதான். 70 சதவிகிதம் அசைவம் சாப்பிடுபவர்களின் உணவு மாட்டிறைச்சிதான்,

மாட்டிறைச்சிக்கு "கேரள மாநிலத்தில் ஏழைகளின் உணவு" என்று பெயர்.

மாநில அரசே அது ஏற்படுத்தி இருக்கும் பல நிறுவனங்களின்வழி இந்த ஏழைகளின் உணவு எல்லோருக்கும் கிடைக்கச் செய்து கொண்டிருக்கின்றது. மாடறுக்கும் இல்லங் களில் மட்டும் 10000 குடும்பங்கள் பணி செய்கின்றனவாம். மாடறுப்பது தடை செய்யப் பட்டால் இந்த 10000 குடும்பங்களும் பிச்சை எடுக்க வேண்டியதுதான்.

கேரள அரசு 33 கோடி ரூபாயில் ஒரு பெரும் திட்டத்தை அண்மையில் செயல்படுத்த இருக்கின்றது. அதில் பசு, மாடு, எருமை ஆகியவற்றை வளர்த்து அவற்றின் இறைச்சியை ஏற்றுமதி செய்யவும் திட்டமிட்டுள்ளது. இதற்கு அடிப்படையாக கால்நடைகளுக்கு நோயே வராத ஒரு நோயில்லா பகுதியை கேரளத்தில் ஏற்படுத்தவிருக்கின்றது.

இந்த இறைச்சி குறிப்பாக மாட்டிறைச்சி ஏற்றுமதியால் கேரள மாநிலத்தின் பொருளா தாரம் பெரிய அளவில் முன்னேறும் என எதிர்பார்த்து காத்துக்கிடக்கிறார்கள்.

அத்தனையிலும் இந்தச் சட்டம் மண்ணை அள்ளிப் போட்டுவிடும்! இதனால் கேரளா வேளாண்மை துறை அமைச்சர் K.R.கௌரி அவர்கள் இந்தச் சட்டத்தால் ஏற்படவிருக்கும் பேரிழப்புகளைப் பற்றிய அறிக்கைவொன்றை மத்திய அரசுக்கு அனுப்பப்போவதாக கூறி இருக்கின்றார்.

**நாகலாந்து, அசாம், மிஜோரம் மேகலாயா**

கேரளாவைப் போலவே இந்தச் சட்டத்தால் மேற்கு வங்கம், அசாம், நாகாலாந்து, மேகாலயா என்ற மாநிலங்களும் பெருமளவில் பாதிக்கப்படும் என்கிறார்கள் அங்குள்ள மக்கள். இங்குள்ள மக்களும் ஒரு ஆராய்ச்சி முடிவை முன் வைக்கிறார்கள். இந்தச் சட்டத்தை தடுத்து நிறுத்த, அந்த ஆராய்ச்சி முடிவு இதுதான். "இந்தியாவில்தான் உலகிலேயே அதிகமான பயனில்லா கால்நடைகள் இருக்கின்றன. இந்தச் சட்டம் செயலில் வந்தால் இந்த பயனற்ற கால்நடைகள் பெருகும். அவற்றிலிருந்து வெளிப் படும் நோய்களும் பெருகும்" என்றார்.

(THE WEEK: AUG 24, 2003)

நாகாலாந்து முதலமைச்சர் கூறுகிறார் :


vaigarai velicham official

மாட்டை (பசுவை) அறுப்பதை தடை செய்யும் சட்டத்தை எதிர்ப்பதில் நாங்கள் எந்தத் தயக்கத்தையும் காட்டப் போவதில்லை" என்றார்.

இங்கே நாடாளுமன்றத்தில் இயற்றப்படும் சட்டங்களெல்லாம் வந்துவிட்டால், காஷ்மீர் மாநிலத்தைப்போல் இந்த மாநிலத்திலும், அந்த மாநில சட்டசபை ஏற்றுக்கொண்டு அங்கீ கரிக்க வேண்டும். அப்போதுதான் ஏனைய பகுதிகளுக்கு இயற்றப்படும் சட்டங்கள் இந்த மாநிலத்தில் நாகாலாந்து முதலமைச்சர் நியூஃபி இந்தச் சட்டத்தை உள்ளே அண்டவிட மட்டோம் என்கிறார்.

"நாங்கள் என்ன சாப்பிட வேண்டும் என்பதை தீர்மானிக்க இவர்கள் யார்" என்கிறார் குடும்பப் பெண் ஷிம்ரி

மாட்டுக்கறியை அரசு தடை செய்தால் அது எங்கள் குழந்தைகளின் 'ஆரோக்கியத்தைப் பாதிக்கும் என்கிறார் நாகாலாந்தைச் சார்ந்த கல்லூரி பேராசிரியை.

மேகாலயாவின் முதலமைச்சர் D.D. அவர்கள் இப்படிக் குறிப்பிடுகின்றார்.

"எங்கள் மக்களின் உணவுப் பழக்கம் நீண்ட கால பழக்கங்களால் ஏற்பட்டவை. அவற்றை ஓரிரவில் விட்டுவிட வேண்டும் என்பது இயலாத செயல்" என்கிறார். (The Week 24.8.03)

மேகாலாயாவின் மொத்த மக்கள் தொகை 23 லட்சம். அதில் 15 லட்சம் மக்கள் மாட்டிறைச் சிறையை முதன்மை உணவாகக் கொண்ட வர்கள்.

மாட்டிறைச்சிதான் இங்கே மிகவும் மலிவான உணவு. இதனால் ஏழை எளிய மக்கள் இதையே தங்கள் உணவுக்கு நம்பி இருக்கின்றார்கள்.

செயல்படுத்த முடியாத இந்தச் சட்டத்தை ஏன் கொண்டு வருகிறார்கள். நாம் என்ன சாப்பிட வேண்டும் என்பதை தெரிவு செய்து கொள்ளும் உரிமைகூட நமக்கில்லையா என்கிறார் மிசோராம் மாநிலத்தைச் சேர்ந்த மு. மால்சவ்மா என்ற மூத்த குடிமக்களின் அமைப்பின் தலைவர்.

அசாம் மாநிலத்திலும் மக்கள் பெருமளவில் இந்தச் சட்டதால் வெகுண்டு போயிருக் கிறார்கள். அங்கே இறைச்சி உண்பவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு.

அவர்களின் பார்வையில் மதத்தையும் உணவையும் போட்டுக் குழப்பக்கூடாது. அப்படி செய்வது இந்தியா போன்ற ஜனநாயக நாட்டுக்கு உகந்ததல்ல.

சைவ உணவு மட்டும் சாப்பிடுவதற்கு எப்படி சிலருக்கு உரிமை இருக்கின்றதோ. அதேபோல் அசைவ உணவைச் சாப்பிடுபவர்களுக்கு அவர்களுக்கான உரிமை இருக்கின்றது. சைவ உணவைச் சாப்பிடுபவர்கள் மற்றவர்களின் உணவு பழக்க வழக்கங்களையும் மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார்கள்.

பத்திரிகையாளர் பபிதா பரூக் கூறுகின்றார் :

இந்தித் திரைப்படங்களை அசாமில் திரை யிடக்கூடாது என இங்கிருக்கும் அசாம் தீவிர வாதிகள் (உல்பா) கூறகின்றார்கள். காரணம் அசாம் மொழி அழிந்துவிடுமாம். இதேபோல் தான் இருக்கின்றது இந்தப் பசுவதை தடைச் சட்டமும்" என்கிறார்.

இப்படி மக்களின் அடிப்படை உரிமை களையே மறுக்கும் இந்தச் சட்டத்தைக் கைவிடுவதே ஒரே வழி.


## மிருகங்களிடம் அன்பும் பரிவும்

உலக நாகரீகத்தில் இஸ்லாம் தன் அழுத்த மான தாக்கங்களை ஏற்படுத்திய பின்னர்தான், மிருகங்களைப் பண்பொடும் அன்போடும் நடத்திட மனிதர்கள் முன்வந்தார்கள்.

எனினும் இன்றைக்கும் சில சமுதாயத்தவர்கள் கேளிக்கைகளுக்காகவும் விளையாட்டாகவும் மிருகத்தனமாக மிருகங்களைக் கொன்று வருகிறார்கள். இஸ்லாம் ஏற்றி வைத்த அறிவின் ஒளி இவர்களுக்கெல்லாம் எட்டிட வேண்டும். அப்போது மட்டுமே இதுபோன்று உயிர்களோடு விளையாடும் வினை ஒரு முடிவுக்கு வரும்.

## மிருகங்களின் உலகம்

மிருகங்களுக்கென ஓர் உலகமும் வாழ்க்கை யும் உண்டு. இந்த வாழ்க்கைக்கென பல குணாதி சயங்களும் உண்டு. திருக்குர்ஆன் கூறுகின்றது:



"பூமியில் ஊர்ந்துதிரியும் பிராணிகளும் தம் இரு இரக்கைகளால் பறக்கும் பறவைகளும் உங்களைப் போன்ற இனமேயன்றி வேறில்லை. (இவற்றில்) எதையும் (நம் பதிவுப்) புத்தகத்தில் நாம் குறிப்பிடாமல் விட்டுவிட வில்லை. இன்னும் அவையாவும் அவற்றில் இறைவனிடம் ஒன்று சேர்க்கப்படும்" (அல்குர்ஆன் 6:38 )

இந்த மிருகங்களுக்கும்கூட அன்பும் பாசமும் பரிவும் தேவைப்படுகின்றது. இறைவனின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்:

'அளவற்ற அருளாளன் அல்லாஹ்வின் அருள் யாருக்கு அதிகமாக கிடைக்கும் என்றால், யார் மிகவும் கருணை உள்ளவர்களாக இருக்கின்றார்களோ அவர்களுக்குத்தான். கண்ணிய மிக்க இயல்புகளைப் பெற்றுக்கொண்ட ஒருவர் இந்த உலகத்திலும் இறப்பிற்குப் பின்வரும் மறுஉலகிலும் நல்லதொரு பங்கைப் பெற்றுக் கொள்வார்.'

(நூல்: அபூதாபூத், திர்மிதி, ஹாக்கிம்)

மிருகங்களின்மேல் மனிதன் செலுத்தும் அன்பு மனிதனுக்கு சொர்கத்தை சொந்தமாக்கித் தரலாம்.

பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்:

"ஒரு மனிதன் பயணம் செய்து கொண்டிருந்தான். அப்போது அவனுக்குத் தாகம் ஏற்பட்டது. அவன் ஒரு கிணற்றுக்குப் பக்கத்தில் வந்தான். அந்தக் கிணற்றினுள் இறங்கினான். தன் தாகத்தைத் தணித்துக்கொண்டான். கிணற்றிலிருந்து வெளியே வந்தான். அங்கே ஒரு நாய் நின்று கொண்டிருந்தது. அது தாகத்தின் மிகுதியால் தன் நாக்கைக் கொண்டு ஈரப்பதமுள்ள பூமியை நக்கிக்கொண்டு நின்றது. அந்த நாய் தன்னைப்போல் தாகத்தால் தவித்துக் கொண்டு நிற்கின்றது என்பதை அந்த மனிதன் உணர்ந்தான். அவன் மீண்டும் கிணற்றுக்குள் இறங்கினான். தன் கையிலிருந்த தோல் பையில் தண்ணீரை நிறைத்து அதைப் பல்லால் கடித்துக் கொண்டே கிணற்றின்மேல் ஏறினான். அந்தத் தண்ணீரை நாய்க்குத் தந்து அதன் தாகம் போக்கினான். அல்லாஹ் அந்த மனிதனின் இரக்கக் குணத்தை கண்டு அவனுடைய பாவங்களை மன்னித்தான்."

(நூல்: புகாரீ, முஸ்லிம், மாலிக், அஹ்மத், அபுதாவூத்)

இதனைச் செவிமடுத்த நபித்தோழர்கள் கேட்டார்கள்:

'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நாம் மிருகங்களிடம் இரக்கம் காட்டினால் அதற்கும் அல்லாஹ் நமக்கு நற்கூலிகளை வழங்கிடுவானா?

பெருமானார் (ஸல்) அவர்கள் இதற்கு இப்படி சொன்னார்கள்:

"ஜீவனங்களை உண்டு வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு உயிரினத்தின் பால் காட்டும் பரிவான நன்னடத்தைகள் ஒவ்வொன்றுக்கும் உங்களுக்கு கூலி உண்டு."


vaigarai velicham official

இதற்கு மாறாக மனிதன் மிருகங்களைக் கொடுமைப்படுத்துவானென்றால், அவன் நரகத்தை சன்மானமாகப் பெறுவான்.

"பெண்ணொருத்தி நரகத்தைத் தன் இருப்பிடமாக பெற்றாள். காரணம் ஒரு பூனையை தன் வீட்டில் கட்டி வைத்திருந்தாள். அதற்கு உணவளிக்கவுமில்லை. அது தன் உணவை தேடிக்கொள்ள அனுமதிக்கவு மில்லை.''

(நூல்: புகாரி)

இப்படி மனிதர்களின் இதயங்களுக்கு நற்கூலிகளை வாக்களித்து மிருகங்களுக்குப் பாசத்தையும் பரிவையும் பெற்றுத்தந்தது இஸ்லாம். அதேபோல் கடுமையான நரகத்தைக் காட்டி அச்சமூட்டி மிருகங்களைக் கொடுமைகள் செய்வதிலிருந்தும் தடுத்தது இஸ்லாம். இஸ்லாமிய ஆட்சி நிலை பெற்ற போது கொடுமைகளுக்கு மிருகங்களை ஆளாக்குவதைத் தடுத்திட சட்டங்கள் வகுக்கப்பட்டன. திருக்குர்ஆன், நபிமொழி ஆகியவற்றின் அடிப்படையில்.

மனிதர்களில் சிலர் உண்டு. அவர்கள் தங்கள் மிருகங்களின்மேல் பயணம் செய்வார்கள். வழியில் தங்கள் நண்பர்களைக் கண்டால் அந்த மிருகங்களின்மேல் அமர்ந்துகொண்டே முடிவில்லாமல் பேசிக்கொண்டிருப்பார்கள். இதனை தடுத்துள்ளார்கள் பெருமானார் (ஸல்) அவர்கள்.

இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்..

"உங்கள் மிருகங்களின் முதுகை உங்கள் சாய்வு நாற்காலிகளாக ஆக்கிக் கொள்ளாதீர்கள்." (நூல்..

இதேபோல் மிருகங்களைப் பட்டினிப் போடுவதும் அவற்றை மோசமான நிலையில் வைத்துக்கொள்வதும் தடுக்கப்பட்டவை, தண்டனைகளைப் பெற்றுத்தரும்.

ஒருமுறை நபி (ஸல்) அவர்கள் ஒரு ஒட்டகத்தை காண நேர்ந்தது. அந்த ஒட்டகையின் வயிறு ஒட்டிப் போயிருந்தது. இதைக் கண்டதும் இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் இப்படிக் கூறினார்கள் :

"மிருகங்களிடமிருந்து அவற்றின் சக்திக்கு மேல் வேலை வாங்குவது அனுமதிக்கப்படவில்லை"

இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் ஒருநாள் அன்சாரி முஸ்லிம் ஒருவரின் இல்லஞ் சென்றார்கள். அங்கே கொட்டகையொன்றில் ஒட்டகை ஒன்று கட்டியிருப்பதைக் கண்டார்கள். அந்த ஒட்டகையின் கண்களில் கண்ணீர். அந்த ஒட்டகை மிகவும் மோசமான நிலையிலிருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த ஒட்டகையின் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தார்கள். அங்கே நின்றுகொண்டிருந்தவரை இப்படிக் கேட்டார்கள் :

"இந்த ஒட்டகையின் சொந்தக்காரர் யார்?" "அந்த ஒட்டகத்தின் சொந்தக்காரர் வந்து நான்தான் இந்த ஒட்டகத்தின் சொந்தக்காரன் இறைவனின் தூதர் அவர்களே!" என்றார். அவரைப் பார்த்து அவர்கள் இப்படிக் கேட்டார்கள்: "இந்த மிருகத்தைப் பற்றி அல்லாஹ்விடம் நீங்கள் கொஞ்சமாவது அச்சப் படுவதுண்டா? அல்லாஹ் இந்த மிருகத்தை உங்களுக்குச் சொந்தமாக்கித் தந்தான். நீங்கள் அதனிடம் வேலை வாங்குகின்றீர்கள். ஆனால் உணவளிப்பதில்லை." (நூல்: அஹ்மத்)

இதேபோல் விளையாட்டுக்காகவும் கேளிக்கைகளுக்குகாவும் மிருகங்களைக் கொலை செய்வது தடுக்கப்பட்டது.

பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்:

"ஒரே ஒரு பறவையை நீங்கள் வேண்டுமென்றே கொன்றால் அதுவும் மறுமையில் அல்லாஹ்விடம் புகார் செய்யும். என் இறைவனே! உணவளிப்பவனே! இந்த மனிதன் விளையாட்டுக்காக என்னைக் கொன்றான். (அல்லாமல்) எந்த நன்மைக்காகவும் என்னைக் கொலை செய்யவில்லை." (நூல்: நஸயி, இப்னு ஹிப்பான்)

அதேபோல் அம்பெய்தும் பயிற்சி செய்வது போன்றவற்றிற்காக உயிருள்ளவற்றைப் பயன்படுத்துவது அனுமதிக்கப்படவில்லை.

இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள், உயிருள்ள ஒரு ஜீவனை தன்னுடைய பயிற்சி

## மிருகவதை குறித்து இன்னும் நம் நாட்டில் நடப்பிலிருக்கும் சட்டங்கள்

1. THE PRVENTOIN OF CRUELTY TO ANIMALS ACT 1960
2. BREEDING OF AND EXPERIMENTS ON ANIMALS (CONTROL AND SUPERVISION) RULES 1998.
3. THE PERFORMING ANIMALS (REGISTRATION)RULES 2001.
4. THE PREVENTION OF CRULETY TO ANIMALS (TRASPORT OF ANIMALS ON FOOT) RULES 2001.
5. THE PREVENTION OF CRULTY TO ANIMALS (SLAUGHTER HOUSE) RULES 2001.
6. THE PREVENTION OF CRULTY TO ANIMALS (EASTABLISHMENT AND REHULATION OF SOCIETIES FOR PREVENTION OF CROUELTY TO ANIMALS) RULES, 2001.
7. ANIMAL BIRTHCONTROL (DOGS)RULES 2001

**இத்தனைச் சட்டங்கள் இருக்கும்போது இப்போது ஒரு சட்டம் ஏன்? அரசியல் அரங்கில் இவர்கள் நடத்தும் நாடகம் தான் இந்தப் புதுச்சட்டம் என்பது எளிதில் புரியாததா?**

யின்போது இலக்காகப் பயன்படுத்தியதற்காக ஒருவரைக் கண்டித்திருக்கிறார்கள்.

இதேபோல் பெருமானார் (ஸல்) அவர்கள், மிருகங்களைச் சண்டையிடச் சொல்லி வேடிக்கை பார்ப்பதையும் தடை செய்திருக்கின்றார்கள். அதேபோல் அவற்றைச் சூதாட்டத்திற்குப் பயன் படுத்துவதையும் தடை செய்திருக்கின்றார்கள். அதேபோல் 'தங்களுடையது' என அடையாளம் கண்டு கொள்வதற்காகச் சூடு போடுவதையும் பெருமானார் (ஸல்) அவர்கள் தடை செய்திருக் கிறார்கள்.

ஒருமுறை பெருமானார் (ஸல்) அவர்கள், கழுதை ஒன்றின் முகத்தில் சூடு போட்டு அடையாளமிட்டுருப்பதைப் பார்த்தார்கள். சூடு போடும்போது அந்த உயிரினம் என்ன பாடுபட்டி ருக்கும் என்பதை உணர்ந்த இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் இப்படிக் கடிந்தார்கள்:

"இதைச் செய்தவன் (சூடு போட்டவன்) சபிக்கப்படுவான்.

உணவுக்காக அனுமதிக்கப்பட்ட உயிரினங் களை அறுத்திடும்போது அவற்றின் வேதனை யைக் குறைக்கும் முகத்து, அவற்றைக் கூர்மையான கத்தியைக்கொண்டு அறுக்க வேண்டும். அதே போல் அவற்றின் துடிப்பு அடங்கிய பின்னரே அவற்றின் தோல்களை உரித்திட வேண்டும்.

இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்:

"அல்லாஹ் ஒவ்வொரு செயலிலும் நாம் இரக்கத்தோடு நடந்துகொள்ள வேண்டும் என்பதை நம்மீது கடமையாக்கியிருக்கின்றான். ஆகவே (உணவுக்காக) அறுக்கவேண்டும் என்றால் அதனை எந்த அளவுக்கு நம்மால் முடியுமோ அந்த அளவுக்கு அழகாகச் செய்திட வேண்டும். அறுப்பவன் மிகவும் கூர்மையான கத்தியையே பயன்படுத்த வேண்டும்."

(நூல்: முஸ்லிம்)

இந்த மொத்த விவாதத்திலும் நாம் கவனிக்க வேண்டியது. மனிதர்களையும் இன்னும் இந்த உலகத்தில் இருப்பவைகளையும் அந்த அல்லாஹ்வே படைத்தான். அவனே படைத்த வற்றையெல்லாம் மனிதர்களுக்கு வசப்படுத்தித் தந்தான்.

நமக்கு எதை உண்பது எதை விளக்குவது என்பதை இறைவன் நன்கறிவான். அவனது வழிகாட்டுதல்கள் வழி நமது வாழ்க்கையையும் - உணவு வழக்கங்களையும் மிருகங்களை நடத்திட வேண்டிய பண்பையும் பயில்வோம் அதன் வழி நடப்போம்.

**- வைகறை வெளிச்சம் ஆசிரியர் குழு**

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor M. Gulam Mohamed. Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002